KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 21 பெப்ரவரி 2025 இதழ்:- 08

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக் குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்.விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## ஐ.நா.மனித உரிமைகள் பேரவை தீர்மானத்துடன் இலங்கையை இணங்கச் செய்ய பேச்சுக்களை முன்னெடுத்துள்ளோம் - பிரிட்டன்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கத்தை இணங்கச் செய்வதற்குரிய பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவ்வாறு இணங்காத பட்சத்திலேயே இலங்கை தொடர்பில் புதிய தீர்மானமொன்றைக் கொண்டு வரவேண்டியிருக்கும் எனவும் இலங்கைக்கான பிரித்தானிய (3ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## தமிழர் பிரச்சனைக்கு உங்களிடம் உள்ள தீர்வை முதலில் முன் வையுங்கள் அரசிடம் சுமந்திரன் கோரிக்கை!

# விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பில் மக்கள் கேள்வி! யாழில் பிரதமர் பங்கேற்ற கூட்டத்தில் பதற்றம்! நழுவினார் ஹரிணி!

யாழ்ப்பாணத்தில் பிரதமர் பங்கேற்ற கூட்டமொன்றில் விடுவிக்கப்படாத வலிகாமம் வடக்கு காணிகள் தொடர் பாகக் காணி உரிமையாளர்கள் பிரத மரிடம் கேள்வி எழுப்பியதால் அங்குப் பதற்றமான சூழல் ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவித்தார். உடுவில் தொகுதி மக்கள் சந்திப்பு ஏழாலை ஏழு கோவிலடியில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் 15 பெப் 2025 மாலை மக்கள் சந்திப்பொன்று இடம் பெற்றது. பிரதமர் ஹரிணி அமரசூரிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் உரையாற்றினார்.(8ம் பக்கம் பார்க்க)





## யாழ்.நூலகத்திற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளேன்! ஜனாதிபதி தெரிவித்த போது சபையில் பலத்த வரவேற்பு!

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா "சங்கீத சங்கமம் 2025" 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற்செல்வர் - சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு.திருமுருகன் அவர்கள் "வேர்களைத் தேடுங்கள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றார். கலைமாமணி டாக்டர் நித்தியஶ்ரீ மகாதேவன் அவர்களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. மேலதிக விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும். தொடர்புகளுக்கு 416 841 9600

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

**www.AgentSiva.com**

*Your neighborhood sales representative*

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX REALTRON Realty Inc. Brokerage

Home of the Top Producers



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

22 Years Real Estate Experience



**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com

885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated

**Bus: 416-289-3333**

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


## Warden/Finch



**Scarborough** $424,900

2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school


## Kennedy / Hwy 401



**Scarborough** $429,900

1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit


## Markham / Sheppard Ave



**Scarborough** $479,000

1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse


## McCowan / Ellesmere



**Scarborough** $599,000

2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC


## Mccowan & Hwy 401



**Scarborough** $549,900

2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views


## Kennedy / 401



**Scarborough** $538,000

2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining

## Simcoe St / 401



**Oshawa** $575,900

3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft


## Grandview Dr. / Bloor



**Oshawa** $649,800

2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated


## 9TH LINE / HIGHWAY 7



**Markham** $1,100,000

4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

## Dixie/ Glenanna



**Pickering** $799,000

3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities


## Audley Rd & Rossland Rd E



**Ajax** $799,000

3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse

## Markham & Ellesmere



**Scarborough** $1,050,000

3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

## Morningside/Mcnicol



**Scarborough** $1,099,900

3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout


## 401/Morningside



**Scarborough** $1,249,000

4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407

## 10th Line/ Hoover Park Dr



**Stouffville** $1,499,999

4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

## 9th Line/Hoover Park



**Stouffville** $999,000

4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# ஐ.நா.மனித உரிமைகள் பேரவை தீர்மானத்துடன் இலங்கையை இணங்கச் செய்ய பேச்சுக்களை முன்னெடுத்துள்ளோம் - பிரிட்டன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கத்தை இணங்கச் செய்வதற்குரிய பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவ்வாறு இணங்காத பட்சத்திலேயே இலங்கை தொடர்பில் புதிய தீர்மானமொன்றைக் கொண்டு வரவேண்டியிருக்கும் எனவும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் மற்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு 18 பெப் 2025 செவ்வாய்கிழமை கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டமைக்காக சுமந்திரனுக்கு பிரித்தானிய உயர்ஸ்தானிகர் வாழ்த்து தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டம் பற்றியும், குறிப்பாக வட மாகாணத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பது பற்றியும் சுமந்திரனிடம் உயர்ஸ்தானிகர் கேட்டறிந்தார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன், வடக்கில் முக்கிய சில விடயங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது உண்மை எனினும், காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட நீதி மற்றும் பொறுப்புக்கூறல் சார்ந்த கட்டமைப்புகளுக்கு அவசியமான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை எனச் சுட்டிக் காட்டினார்.

அதே போன்று வீதிப்புனரமைப்பு, நீர்வழங்கல் என்பன உள்ளடங்கலாக வட, கிழக்கு மாகாணங்களில் கையகப் படுத்தப்பட்ட காணிகளை விடுவிப்பதனால் ஏற்படக்கூடிய செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் கிடம் குறிப்பிட்ட சுமந்திரன், ஆகவே இப்போது காணிகளை விடுவிக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை போல் தெரிகிறது என விசனம் வெளியிட்டார்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான அடுத்தகட்ட நகர்வு என்ன என்பது குறித்தும் பிரித்தானிய உயர்ஸ்தானிகருடன் சுமந்திரன் விரிவாகக் கலந்துரையாடினார்.



அதற்குப் பதிலளித்த உயர்ஸ்தானிகர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கத்தை இணங்கச் செய்வதற்குரிய பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவ்வாறு இணங்காத பட்சத்திலேயே இலங்கை தொடர்பில் புதிய தீர்மானமொன்றைக் கொண்டு வரவேண்டியிருக்கும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 59 ஆவது கூட்டத்தொடரின் போது தான் இவ்விடயத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் அடுத்தகட்ட நகர்வு குறித்த தீர்மானங்கள் பற்றித் தெரியவரும் என்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனிடம் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகினாலும், ஏற்கனவே அமெரிக்காவினால் ஒருங்கிணைத்துத் தரப்பட்ட ஆதரவு தமக்கு இன்னமும் இருப்பதாகவும், எனவே புதிய தீர்மானத்தை நிறைவேற்றவேண்டுமாயின் அந்த ஆதரவினைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் எனவும் அன்ட்ரூ பற்றிக் நம்பிக்கை வெளியிட்டார்.

# போதைப்பொருள் குற்றவாளியைச் சுட்டுக் கொன்றவர் வடக்கில் புலனாய்வுப் பிரிவின் கொலையாளியா?



இலங்கையை அதிர வைத்த புதுக்கடை நீதிமன்ற வளாக படுகொலையாளி கைதாகியுள்ள நிலையில் அவர் இலங்கை இராணுவத்தின் லெப்டினன்ட் தர அதிகாரி என தெரிய வந்துள்ளது. கைதானவர் மொஹமட் அஸ்மான் செரிப்தீன் என்ற 34 வயதான நபராவார். இவர் இராணுவத்தில் முன்னாள் லெப்டினன்ட்டாக இருந்திருந்ததுடன் வடக்கில் நீண்டகாலமாக இராணுவ புலனாய்வு பிரிவில் பணியாற்றியவரென தெரிய வந்துள்ளது.

பிரபல போதைப்பொருள் குற்றவாளியான கணேமுல்ல சஞ்சீவ'வை சுட்டுக் கொன்ற சந்தேக நபர், புத்தளம், பாலவியாவில் வைத்து விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக சட்டத்தரணி வேடத்தில் வந்து அளுத்கடை நீதிமன்ற வளாகத்திற்குள் கணேமுல்ல சஞ்சீவ சுட்டு கொலையின் துப்பாக்கிதாரி, கடந்த மாதம் 7 ஆம் திகதி கல்கிஸ்ஸை, வட்டரப்பல பகுதியில் இரண்டு பேரை சுட்டுக் கொன்ற அதே துப்பாக்கிதாரி என தெரிவித்துள்ளார். துப்பாக்கிச் சூட்டில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியான ரிவோல்வரை, சந்தேகத்திற்குரிய பெண், துப்பாக்கியின் வடிவத்தில் பக்கங்களை வெட்டி, ஒரு குழிவான புத்தகத்திற்குள் மறைத்து நீதிமன்ற வளாகத்திற்குள் கடத்தி வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க பாதாள உலக கும்பலைச் சேர்ந்த ஹரக் கட்டா என்றழைக்கப்படும் நந்துன் சிந்தக என்பவரை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிச் செல்வதற்கு உதவி செய்த சம்பவம் தொடர்பில் இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் உள்ளிட்ட நான்கு சந்தேக நபர்களும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

பொலிஸ் கான்ஸ்டபிளுடன் இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்ட ஏனைய மூன்று சந்தேக நபர்களும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளராக சுமந்திரன் தெரிவு!

## கட்சிக் கட்டுபாட்டை மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுத்து கட்சியைத் தூய்மைப்படுத்துவாரா?



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் 16 பெப் 2025 ஞாயிற்றுக்கிழமை இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு கூட்டம் இடம்பெற்ற போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டு ள்ளது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.சிவஞானம் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது வரை அந்த பதவியில் இருந்த மருத்துவர் ப.சத்தியலிங்கம் எம்.பி. சுகவீனம் காரணமாக பதவியில் தான் தொடர்ந்து இருக்க முடியாது என இன்றைய கூட்டத்தில் அறிவித்தமையை அடுத்து கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சத்தியலிங்கத்துக்கு அடுத்து கட்சியில் சிரேஷ்ட துணைச் செயலாளராக இருந்த சுமந்திரனைப் பதில் பொதுச் செயலாளராக நியமிப்பது என மத்திய குழு உடனடியாகவே தீர்மானித்தது.

அந்த முடிவுக்கு கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவர் சிறீதரன் எம்.பி., ஸ்ரீநேசன் எம்.பி. மற்றும் முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன் ஆகியோர் தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர். எனினும், அந்த நியமனத்தை மத்திய குழு மேற் கொண்டது.

தமிழரசுக்கட்சியின் உயரிய மாண்பு என்ன? கௌரவம் என்ன என்பதைத் துளியும் தெரியாது கட்சியின் தீர்மானங்களுக்கு மாறாக நடந்து கொண்டு தம்மை ஒரு பெரும் தேசியத் தலைவராகக் காண்பிக்கவும் தமிழ்த் தேசியவாதியாகவும் காண்பித்துக் கொண்டு வந்த முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ் தோழரும் கிளிநொச்சிப் பண்ணையாருமான ஸ்ரீதரனுக்கு சுமந்திரனது தெரிவு வெந்த புண்ணில் புளி காய்ச்சுவது போல் உள்ளது.

கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். தனிப்பட்ட நபர்கள் மீது வெறுப்புக்கள் இருக்கலாம். ஆனால் கட்சி ஒரு முடிவெடுத்தால் அதற்குக் கட்டுப்பட்டு நடப்பது தான் முறை. அதனை விடுத்து கட்சி முடிவுக்கு மாறாக நடந்து கொண்டால் அவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாகவே கட்சியை விட்டு நீக்கப்பட்ட வரலாறே தமிழரசுக்கட்சிக்குள் இருந்தது.

1948ம் ஆண்டு தமிழரசுக்கட்சியை ஆரம்பித்த போது முதல் பொதுச்செயலாளராக இருந்த காவலூர் வ.நவரத்தினம் அவர்கள் 1965ம் ஆண்டு அடையாள அட்டை மசோதா மீதான விவாதத்தில் கட்சி முடிவை மீறி நடந்து கொண்டார் என்பதற்காக கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.

அதேபோன்று 1952ம் ஆண்டில் இருந்து தமிழரசுக்கட்சியை கிழக்கு மாகாணத்தில் வளர்த்தெடுத்து தந்தை செல்வாவுக்கு துணையாக நின்ற சொல்லின் செல்வர் இராஜதுரை அவர்கள் 1978ம் ஆண்டு கட்சிக் கட்டுப்பாட்டை மீறிஅன்றைய பிரதமர் பிரேமதாசாவை வரவேற்றக் காரணம் காட்டி கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

வ.நவரத்தினம் செ.இராஜதுரை இருவரும் தமிழ்த்தேசியப் பற்றாளர் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் கட்சிக் கட்டுப்பாடு என்ற ஒன்றை மீறினால் தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுத்த கட்சி தமிழரசுக்கட்சி. அத்தகைய கட்சியை ஒற்றுமை என்ற பெயரில் சீரழித்து சிதைத்து விடுவதற்கு இடம் கொடுக்க முடியாது. கட்சிக் கட்டுப்பாட்டை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டால் மாத்திரமே எதிர் வரும் காலத்தில் கட்சியைக் காப்பாற்ற முடியும். இல்லையேல் தந்தை செல்வா கூறியது போன்று கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.


இப்போது தமிழரசுக்கட்சி சுமந்திரன் கையில்! கட்சியைக் காப்பாற்றுவாரா? கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமா? காலத்தின் பதிலை எதிர்பார்ப்போம்!

## ஸ்ரீதரனைக் கைது செய்யுமாறு கோரிக்கை!



யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ ராஜ மகா விகாரையை இடிப்பதாக மிரட்டியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனை கைது செய்ய வேண்டும் என ஓய்வு பெற்ற ஜெனரல் ஜகத் டயஸ் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் கருத்துகள், அரசியலமைப்பை மீறுவதாகவும், அரசாங்கம் இது போன்ற சூழ்நிலைகளைப் புறக்கணித்தால், அது வன்முறையை ஊக்குவிப்பதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் அத்தகைய சூழ் நிலையில் உடனடியாகவும் தீர்க்கமாகவும் செயல்படத் தவறினால், அரசாங்கம் தொடர்ந்து இதுபோன்ற நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# கனடா வாழ் கருணையாளர்களே!





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம். பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன.

மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப்பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.

உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

# ஹர்ஷ டி சில்வா எம்பியை கிண்டலடித்த அனுர

ஜனாதிபதி உரை நிகழ்த்திய போது வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளையும் நிதி ஒதுக்கீடுகளையும் அறிவிப்புகளையும் விடுத்தபோது அரச தரப்பினர் மேசைகளில் தட்டி வரவேற்பளித்துக் கொண்டிருந்தனர்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி.யான ஹர்ஷ டி சில்வா ஏதோ ஜனாதிபதியைப் பார்த்துக் கூறியபோது

அதற்கு ஜனாதிபதி 'ஹர்ஷ நீங்கள் கேட்பதனை என்னால் தர முடியாது. கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பதவியை நீங்கள் உங்கள் கட்சித்தலைவரிடம் தான் கேட்க வேண்டும்' என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூறவே சபையில் பெரும் சிரிப்பொலி எழுந்தது.

இதன்போது ஹர்ஷ டி சில்வாவும் சிரித்து விட்டு அமைதியாக இருந்தார். எதிர்கட்சித் தலைவர் சஜித்





பிரேமதாசவும் பக்கத்தில் அமர்ந்திருந்த கஜந்த கருணாதிலக்கவை திரும்பிப் பார்த்து சிரித்து விட்டு அவரும் அமைதியாக இருந்தார். கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பதவி தனக்குத் தரப்படவில்லையென ஹர்ஷ எம்.பி சஜித்துடன் மனஸ்தாபப் பட்டுக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கிற்கு பெருமளவு நிதி ஒதுக்கீடு!

## ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த ஆளுநரும் அர்ச்சுனாவும்





ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வாக்குறுதியளித்தவாறு, நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கு பல்வேறு திட்டங்களுக்கு பெருமளவு நிதி ஒதுக்கியமைக்கு, வடக்கு மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் திட்ட மீளாய்வு கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் 18 பெப் 2025 இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போதே ஆளுநர் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை இம்முறை வரவு செலவுத்திட்டத்தை நாம் வடக்கிற்கான வரவு செலவுத் திட்டமாவே கருதுவதாக பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்தார்.

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட விவாதத்தை உண்மையாவே யாழ்ப்பாணத்தில் பிறந்த சாதாரண மனிதர்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை விடயங்களை எங்களது ஜனாதிபதி தந்திருக்கின்றார் என்பதிலே எதிர்க்கட்சியில் இருந்து சந்தோஷப்படக்கூடிய ஒரேயொரு மனிதன் நானாகத் தான் இருப்பேன்.

என்னை பொறுத்த வரையில் எனக்கு அரசியல் தேவையில்லை. நான் அரசியலுக்காக அரசியல் செய்ய வரவில்லை. ஆகவே இந்த மக்களுடைய தேவைகளை அறிந்து வைத்து எமது பிரதமர் ஹரினி அமரசூரிய அவர்களும் ஜனாதிபதி அவர்களும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததையிட்டு நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். இதனை நாங்கள் வடக்கிற்கான பட்ஜெட்டாவே நாம் கருதுகிறோம் என்றார்.

இதேவேளை முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணியினை ஆரம்பிப்பதற்கு 2025ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஆரம்ப கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் போதே இவ்விடயத்தை அறிவித்துள்ளார். இந் நிலையில் தமது அயராத தொடர் முயற்சியால் முல்லைத்தீவு மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுத்திருப்பதில் மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமது தொடர்ச்சியான கோரிக்கையை ஏற்று நிதி ஒதுக்கியதற்கு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, போக்குவரத்து நெடுஞ்சாலைகள், அமைச்சர் விமல் ரத்நாயக்க ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் போது.....!





ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்டிருக்கின்றார். இந்தியாவிலிருந்து பிறிதொரு நாட்டுக்கு செல்ல முற்பட்டபோதே அவர் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் சில குற்றச் சாட்டுகளை எதிர்கொண்ட நிலையிலேயே அவர் நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார். ஒரு காலத்தில் தமிழ் மிதவாத தலைவர்கள் பலர் சிறை சென்றிருக்கின்றனர். அவர்களில் ஒரு சிலர் பல மாதங்கள் வரையில் மக்களுக்காக சிறை வாழ்வை அனுபவித்திருக்கின்றனர். அண்மையில் காலஞ்சென்ற மாவை. சேனாதிராசா சிறை வாழ்விலிருந்து விடுதலையான போது கட்சியின் ஆதரவாளர்களும் மக்களும் அதனைக் கொண்டாடியிருந்தனர்.

மக்களுக்காக சிறை செல்லும் வரலாற்றை கொண்டிருக்கும் ஈழத்தமிழர் அரசியலில் கிரிமினல் குற்றங்களுக்காக சிறை செல்லும் நிலைமை உருவாகியிருக்கின்றது அத்துடன், பாரம்பரிய கட்சி பிரதான கட்சியென்று வர்ணிக்கப்படும் இலங்கை தமிழ் அரசு கட்சி நீதிமன்றத்துடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றது.

வடக்கு மாகாணத்திலிருந்து தெரிவான ஈழத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளை ஒரு காலத்தில் கேட்பதே பெருமையாக நோக்கப்பட்டது. அமிர்தலிங்கத்தின் உரையை கேட்டு, சபாநாயகரே அற்புதமென்று பாராட்டிய வரலாறு போய், பொழுது போகவில்லையா, யாழ்ப்பாணத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சை சிறிது கேட்போம் வாய் விட்டு சிரிக்கலாம் என்னும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

இதற்கு உண்மையில் பொறுப்பானவர்கள் யார்? அரசியல்வாதிகளிலும் அரசியல் கட்சிகளிலும் தவறு கண்டு பிடிப்பதை விடவும் வாக்களிப்பவர்கள் தொடர்பில் தான் நாம் சந்திக்க வேண்டியிருக்கின்றது. ஒரு காலத்தில் நவரட்ணம், தர்மலிங்கம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் என்றவாறு தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலிருந்து உறுப்பினர்களை தெரிவு செய்த வடபுல மக்கள் இன்று எவ்வாறு சிந்திக்கின்றனர்? எவ்வாறானவர்களைத் தெரிவு செய்கின்றனர்?

தங்கள் பிள்ளைகளுக்கு திருமணம் என்றவுடன் பார்த்துப் பார்த்து மாப்பிள்ளை, மணமகள் தேடும் ஈழத்தமிழினமோ தங்களின் அரசியல் எதிர்காலத்துக்கான நபர்களை தெரிவு செய்யும் போது கண்களில்லாதவர்கள் போன்று வாக்களிக்கின்றது. இந்த நிலைமை மாறாத வரையில் ஈழத் தமிழினம் அரசியலில் உருப்படியான வழியேற்படப் போவதில்லை.

தமிழ் அரசுக் கட்சி அதிக ஆசனங்களை பெற்று விட்டது. எனவே, பிரதிநிதித்துவங்கள் உறுதியாகி விட்டன என்று பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை உண்மையில், இன்றைய அரசியல் சூழலை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலுடன் கூடியவர்களை தமிழினம் தெரிவு செய்திருக்கின்றதா என்று தான் கேட்கவேண்டும்.

அப்படிக் கேட்டால் பூச்சியமே எஞ்சும். பாராளுமன்றம் சென்றிருப்பவர்களில் அநேகரை ஓர் அரசியல்வாதியாகக் கூட தென்னிலங்கை ஏற்றுக் கொள்ளுமா என்பதே சந்தேகம் தான். அந்தளவுக்கு தலைமைத்துவ பலவீனம் மேலோங்கியிருக்கின்றது. ஒரு தனித் தலைவர் இல்லாத சூழலில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பீட்டடிப்படையில் தலைமையற்ற சூழலை ஒப்பீட்டடிப்படையில் நிவர்த்தி செய்யக்கூடிய ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். ஆனால், கண்களில்லாதவர்கள் போன்று தமிழ் மக்கள் வாக்களித்த காரணத்தால் விடயங்களை கையாளும் தலைமைத்துவ ஆற்றல் இல்லாதவர்களே பெரும்பான்மையாக பாராளுமன்றம் செல்ல நேர்ந்திருக்கின்றது.

# 2025ம் ஆண்டுக்கான இலங்கையின் வரவு செலவுத் திட்டம்!

## வடக்கு மாகாண அபிவிருத்தி 5000 மில்லியன் ரூபா, யாழ்.நூலகத்திற்கு 100 மில்லியன், வடக்கு தெங்கு பயிர்செய்கை 500 மில்லியன், வடக்கு கிழக்கு மீள் குடியேற்றம் - வீட்டு நிர்மானம் 7500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



இலங்கையின் 79ஆவது வரவு – செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க 17 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் முன் வைத்தார்.

2025 ஆம் ஆண்டு 5வீத பொருளாதார வளர்ச்சியை அடைவது பிரதான இலக்காகும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். மட்டுப்படுத்தப்பட்ட வகையில் தான் இம்முறை வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அரச நிதி முகாமைத்துவ சட்டத்துக்கு அமைய வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய துறைகளுக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு. மீண்டெழும் செலவுகளுக்கு 4வீத நிதி ஒதுக்கீடு.

மக்களுக்காக செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாவும் மக்களுக்கு பயனுடையதாக இருக்க வேண்டும்.

கைத்தொழில், வர்த்தகம், மற்றும் உற்பத்தித் துறையில் அதிகளவான மேம்பாட்டை எதிர்பார்க்கிறோம்.

பொருள் மற்றும் சேவை நியாயமான விலைக்கு தடையின்றி விநியோகிக்கப்படும்.

கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு.

மக்களின் பொருளாதார சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

பொருள் மற்றும் சேவைத்துறை ஏற்றுமதி ஊடாக 19 பில்லியன் டொலர் வருவாயை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பு.

2028 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு அரசமுறை கடன்களை முறையாக செலுத்துவோம்.

ஏழ்மையை இல்லாதொழிப்பதற்கு உரிய திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

அரச தனியார் கூட்டு ஒத்துழைப்புடன் சுற்றுச்சூழல் அபிவிருத்தி செய்யப்படும்

பொருளாதார பரிமாற்ற சட்டம் திருத்தம் செய்யப்படும்

தரிசு நிலங்களாக உள்ள அரச காணிகள் குத்தகை அடிப்படையில் தனியார் தரப்பினருக்கு வழங்கப்படும்

அரச தனியார் பங்குடைமை தொடர்பில் புதிய சட்டமூலம் வெகுவிரைவில் சமர்ப்பிக்கப்படும்

காணிகளின் உச்ச பயனை பெற `பிம்சவிய` திட்டம் அமுல்படுத்தப்படும்

சட்டவரைபாக காணப்படும் வங்குரோத்து தொடர்பான வரைபு வெகு விரைவில் சட்டமாக்கப்படும்

தேசிய தரவு கட்டமைப்புக்காக 750 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்

கொழும்பு துறைமுக முனையங்கள் அபிவிருத்திக்கான திட்ட மனுக்கள் எதிர்வரும் நாட்களில் கோரப்படும்

சகல பிரஜைகளுக்கும் டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கும் திட்டம் துரிதப்படுத்தப்படும்.

இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை 15 பில்லியன் டொலராக அதிகரிக்க எதிர்பார்ப்பு.

டிஜிட்டல் பொருளாதார அபிவிருத்தி துரிதப்படுத்தலுக்காக 3000 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக புதிய சுற்றுலாத்தலங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதற்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

ஜப்பான் நாட்டு முதலீட்டுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இரண்டாவது முனையம் நிர்மாணிக்கப்படும்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன இறக்குமதி அனுமதி இல்லை. வாகனம் இல்லை.

சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறை மேம்பாட்டுக்காக நடப்பு வங்கி கட்டமைப்புடன் அபிவிருத்தி வங்கி ஸ்தாபிக்கப்படும்.

அரச செலவுகள் கட்டம் கட்டமாக குறைக்கப்படும்.

சுங்க சட்டம் திருத்தம் செய்யப்படும்.

அதிக பராமரிப்பு செலவுகளை கொண்டுள்ள சகல அதிசொகுசு அரச வாகனங்கள் எதிர்வரும் மாதம் ஏலத்தில் விடப்படும்.

கொள்கை அடிப்படையில் அரச நிறுவனங்கள் கூட்டிணைக்கப்படும்.

அரச முயற்சியாண்மைக்கான பரிபாலன சபை ஸ்தாபிக்கப்படும்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசனை உணவு வழங்கலுக்காக 7500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

திரிபோசா வழங்கல் சேவைக்காக 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

மகளிர் பாதுகாப்பு மற்றும் வலுவூட்டலுக்காக 120 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

சுகாதார சேவை டிஜிட்டல் மயப்படுத்தலுக்காக அதிக நிதி ஒதுக்கீடு.

தோட்ட வைத்தியசாலைகளுக்கான மனித மற்றும் பௌதீக வளங்கள் அரசாங்கத்தால் வழங்கப்படும்.

சுகாதாரத்துறைக்கு 706 பில்லியன் ரூபா ஒதுக்கீடு.

மருந்து கொள்வனவு மற்றும் விநியோகத்துக்கு 185 பில்லியன் ரூபா ஒதுக்கீடு மருந்து தட்டுப்பாடு ஏற்படாது.

ஆட்டிசம் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை பராமரிப்பது தொடர்பில் பயிற்சியளிப்பதற்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

பாடசாலை உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 1000 மில்லியன் ரூபாவும் பல்கலைக்கழக உட்கட்டமைப்புக்காக 135 பில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு.

முன்பிள்ளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 100 ரூபாவாக அதிகரிப்பு. இதற்காக 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

தெரிவு செய்யப்பட்ட முன்பிள்ளை பாடசாலை அபிவிருத்திக்காக 80 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

முன்பிள்ளை பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு 1000 ரூபாவாக அதிகரிப்பு.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில்



அதிசித்தியடைந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் 750 ரூபா புலமைப் பரிசில் கொடுப்பனவு 1000 ரூபாவாக அதிகரிப்பு.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மஹாபொல கொடுப்பனவு 7500 ரூபாவாகவும், மாணவர் கொடுப்பனவு 6500 ரூபாவாகவும் அதிகரிப்பு. இதற்காக 4600 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

தேர்தலுக்காகவே யாழ் நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. யாழ். நூலக அபிவிருத்திக்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு. ஏனைய பகுதிகளில் உள்ள நூலகங்களுக்கு அபிவிருத்திக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

வடக்கு மாகாணத்தில் தெங்கு பயிர்ச்செய்கைக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

அஸ்வெசும நலன்புரி செயற்திட்டத்துக்காக 232.5 பில்லியன் ரூபா ஒதுக்கீடு.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் புதிதாக 2.80000 பயனாளர்களை இணைத்துக் கொள்ள எதிர்பார்ப்பு.

நீரிழிவு நோயாளர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு 10.000 ரூபாவாகவும், வயோதிபர்களுக்கான கொடுப்பனவு 5.000 ரூபாவாகவும் அதிகரிப்பு.

சிறைச்சாலை, சிறுவர் நன்னடத்தை மத்திய நிலையங்களில் உள்ள சிறுவர்களின் நலன்களுக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

சிறைச்சாலையில் இருந்து வெளியேறும் சிறுவர்களின் நலன் கருதி விசேட திட்டங்கள்.

சிறுவர் மற்றும் இளைஞர் உளவியல் பிரச்சினையானது சமூக பிரச்சினையாக காணப்படுகிறது. இதற்கு தீர்வு காணும் திட்டங்களை அமுல்படுத்த 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

பண்டிகை காலத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைக்கப்படும். நிவாரண பொதி வழங்கப்படும். இதற்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

கிராமிய வீதி அபிவிருத்திக்கு 3000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

கழிவு முகாமைத்துவ வசதிகளுக்காக 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

யானை – மனித மோதலை தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

அரச சேவையாளர்களின் சம்பளம் 15, 500 ரூபாவால் அதிகரிப்பு.

கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்துக்காக 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

வடக்கு கிழக்கு மீள்குடியேற்றம் மற்றும் வீட்டு நிர்மாணிப்புக்கு 7500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

ஊடகவியலாளர்கள் மற்றும் கலைத்துறையுடன் தொடர்புடையவர்களுக்கு கொட்டாவ பகுதியில் வீட்டுத்திட்டம் முன்னெடுப்பு.

இலங்கையர் தினம் என்ற பெயரில் தேசிய நிகழ்வு கொண்டாடப்படும். அரசியல் பரிந்துரைகளுடன் அரச நியமனம் மற்றும் அரச தொழில் வாய்ப்புக்கள் இனி இல்லை.

தனியார் துறையினரின் 21 ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை எதிர் வரும் ஏப்ரல் மாதம் 27 ஆயிரம் ரூபா வாகவும், 2026 ஜனவரி மாதம் 30 ஆயிரமாகவும் அதிகரிக்க தனியார் தரப்பின் சேவை வழங்கல் சங்கம் இணக்கம்.

பெருந்தோட்ட மக்களின் சம்பளம் மீள் பரிசீலிக்கப்படும்.

தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக 4.268 மில்லியன் ரூபா ஒதுக்கீடு. மலையக தமிழ் இளைஞர்களின் தொழில் பயிற்சி, வாழ்வாதார மேம்பாடு, உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2.650 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

புதிதாக வரிகள் ஏதும் அமுல்படுத்தப்படவில்லை. திருத்தங்கள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளன.

நாட்டு மக்களை இனி இன.மத.மொழி என்ற அடிப்படையில் பிளவுபடுத்த முடியாது. வரவு செலவுத்திட்டத்தின் உள்ளடக்கம் முறையாக செயற்படுத்தப்படும்.

வரவு – செலவு திட்டத்தை தயாரிக்க ஒத்துழைப்பு வழங்கிய திறைசேரியின் செயலாளர் உட்பட சகல அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்து ஜனாதிபதி வரவு செலவுத் திட்டத்தை நிறைவு செய்தார்.

2025 வரவு – செலவுத்திட்டம்:

மொத்த வருவாய் மற்றும் மானியங்கள் ரூ.4.990 பில்லியன்

மொத்தசெலவினம் – ரூ.7.190 பில்லியன்.

துண்டுவிழும் தொனை – ரூ.2.200 பில்லியன்.

# தமிழர் பிரச்சனைக்கு உங்களிடம் உள்ள தீர்வை முதலில் முன் வையுங்கள் அரசிடம் சுமந்திரன் கோரிக்கை!



நீங்கள் மக்களுக்காக வழங்குவதென வாக்குறுதி அளித்த உங்களிடத்தில் இருக்கின்றது என்று சொல்லுகின்ற அரசியற் தீர்வைக் காலம் தாழ்த்தாது முதலில் மக்களுக்கு முன் வைக்க வேண்டும் என அரசாங்கத்திடம் கோருவதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் இடம் பெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்ட தீர்மானங்கள் அறிவிக்கும் ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் எமது கட்சித் தலைவருக்குக் கொடுத்த கடிதம் வாசித்துக் காட்டப்பட்டது. இது சம்மந்தமாக கடந்த மத்திய குழுவிலே ஏழு போர் கொண்ட குழுவினைத் தீர்மானித்திருந்தோம் இன்று அந்தக் குழுவிலே சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சாணக்கியன் இந்தக் குழுவில் இருந்து விலகுவதாக அறிவித்து சிறிநேசன் அவர்களின் பெயரை முன் மொழிந்திருந்தார். அந்த ஏழு பேர் கொண்ட குழு மத்திய குழுக்கூட்டத்தின் பின்னர் கூடியது.

தமிழ் மக்களுக்கு எவ்வாறான அரசியல் திருத்தம் வேண்டும் என்பது தங்களுக்குத் தெரியும், தங்களுக்கு மக்கள் ஆணை இருப்பதாக இந்த அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். நாடு பூராகவும் அவர்களுக்கு மக்கள் ஆணை வழங்கியிருக்கின்றார்கள். வடக்கிலும் தமிழ் மக்கள் அவர்களுக்கு ஆணை வழங்கியிருப்பதாகச் சொல்லுகின்றார்கள். ஆனால் அண்மைக் காலமாக அரசாங்கத்தின் முக்கிய பிரதிநிதிகள் குறிப்பாக அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தற்போது பொருளாதாரப் பிரச்சனை தான் முக்கியமானது, அதனையே நாங்கள் கவனிப்போம். அரசியலமைப்பு பற்றி பின்னர் பார்த்துக் கொள்வோம் என்று கூறியிருக்கின்றார். வேறு சிலர் மூன்று வருடங்களின் பின்பே அரசியலமைப்பு பற்றி பேசலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

இதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளவே முடியாது. இந்த நாட்டின் பிரதான பிரச்சினை தமிழ்த் தேசியப் பிரச்சனை. வேறு எந்தப் பிரச்சனை சம்மந்தமாகவும் இந்த நாட்டிலே முப்பது ஆண்டுகள் யுத்தம் நடைபெறவில்லை. பொருளாதாரப் பிரச்சனைக்கு அடிகோலியாக இருப்பதும் இந்தத் தமிழ்த் தேசியப் பிரச்சனையே. எனவே இதனை நாங்கள் விட்டு விட்டு பொருளாதாரப் பிரச்சனையை அவர்கள் முதலில் கவனிப்போம் என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

எனவே நாங்கள் அரசாங்கத்திடம வலிந்து கோருவது நீங்கள் மக்களுக்காக வழங்குவதென வாக்குறுதி அளித்த உங்களிடத்தில் இருக்கின்றது என்று சொல்லுகின்ற அரசியற் தீர்வைக் காலம் தாழ்த்தாது முதலில் மக்களுக்கு முன்வைக்க வேண்டும். உங்களிடத்தில் அரசியற் தீர்வு இருக்கின்றதென்று சொல்லுகின்றீர்கள்.அதனை காலம் தாழ்த்தாது நீங்கள் முன்வையுங்கள்.

தமிழ் மக்களின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் இனப் பிரச்சனை தீர்வு தொடர்பான நிலைப்பாடு சகலருக்கும் தெரியும். காலாகாலமாக இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அரசியற் தீர்வு எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டி வந்துள்ளது. எனவே இதில் நாங்கள் எங்களது நிலைப்பாட்டை புதிதாக முன் வைக்க வேண்டிய அவசியம் கிடையாது. இதனைத் தீர்ப்பதற்கு எங்களுக்கு தெரியும் என்ற சொல்லுகின்ற அரசாங்கம் காலம் தாழ்த்தாது உங்களிடம் இருக்கும் வரைபை முன் வைக்க வேண்டும் என்பதே எங்களது அழுத்தமான வேண்டுகோள் என்று தெரிவித்தார்.

# யாழ்.நூலகத்திற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளேன்! ஜனாதிபதி தெரிவித்த போது சபையில் பலத்த வரவேற்பு!



தேர்தலுக்காக ஒரு நூலகம் எரிக்கப்பட்ட கறைபடிந்த வரலாறு யாழ்ப்பாணத்தில் எழுதப்பட்டுள்ளது. இதற்கு நாம் நியாயம் வழங்க வேண்டும். தமிழ் மக்களுக்கும், நூலகத்துக்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு.

பாதனிகளை கழற்றி வைத்து விட்டு தான் தமிழர்கள் நூலகத்துக்குள் செல்வார்கள். ஆகவே யாழ் நூலகத்தின் அபிவிருத்திக்கு 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளேன் என ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 17 பெப் 2025 திங்கட்கிழமை தேசிய மக்கள் சக்தி அரசின் 2025 ஆம் ஆண்டுக்கான கன்னி வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றுகையில் யாழ் நூலகம் தொடர்பில் ஜனாதிபதி விசேடமாக சுட்டிக் காட்டினார்.

தேர்தலுக்காக ஒரு நூலகம் எரிக்கப்பட்ட வரலாறு உலகில் எங்கும் பதிவாகவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் தேர்தலுக்காக தமிழ் மக்கள் உயிராக நேசிக்கும் யாழ் நூலகம் எரிக்கப்பட்ட கறைபடிந்த வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழர்கள் யாழ் மக்கள் நூலகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள்.

அவர்கள் நூலகத்திற்கு செல்லும் போது செருப்பைக் கழற்றி வெளியில் விட்டு செல்வது எனக்கு நன்றாகத் தெரியும். அந்தளவுக்கு அவர்கள் நூலகங்களை நேசித்தார்கள். அவ்வாறு அந்த மக்களின் உணர்வுடன் கலந்த நூலகம் எரிக்கப்பட்டமை நாட்டை உலுக்கிய நிகழ்வு. இதற்கு நாம் நியாயம் வழங்க வேண்டும்.

யாழ்ப்பாணம் மற்றும் அயலிலுள்ள தீவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் உட்பட ஏராளமான வாசகர்கள் யாழ்ப்பாண நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர். இருப்பினும், இந்த வாசகர்களின் நலனுக்காக உட்கட்டமைப்பு போதுமான அளவு மேம்படுத்தப்படவில்லை.

இந்த நூலகத்திற்கு கணினிகள் மற்றும் பிற அத்தியாவசிய வசதிகளை வழங்க இந்த வரவுசெலவுத் திட்டத்தில் 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்ய முன் மொழிகிறேன். மேலும் ஏனைய பிராந்திய நூலகங்களின் அபிவிருத்திக்காக இவ் வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் இன்னும் 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்ய முன்மொழிகிறேன் என்றார். யாழ் நூலக அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி விடுத்த அறிவிப்புக்கு சபையில் இருந்த அனைத்து உறுப்பினர்களும் வரவேற்பளித்தனர்.

# அமெரிக்க உதவி நிறுவன விவகாரம்

அமெரிக்காவின் சர்வதேச உதவிகளுக்கான முகவர் அமைப்பான யு. எஸ். எய்ட் எனப்படும் நிறுவனத்தின் உலகளாவிய செயல்பாடுகளுக்கான நிதியை தற்காலிகமாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிறுத்தியிருக்கின்றார். இதனால் பல மூன்றாம் உலக நாடுகளின் அரசுசாரா நிறுவன செயல்பாடுகள் நிச்சயமற்ற நிலையை அடைந்திருக்கின்றன. இதில் இலங்கையும் ஒன்று.

கொழும்பை மையப்படுத்தி இயங்கிவரும் அனைத்து அரசு சாரா நிறுவனங்களுமே பெரும்பாலும் அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதியைப் பெற்றுக்கொண்ட பெற்றுவரும் நிறுவனங்கள் தான். இதில் ஒரு சில அமைப்புகள் அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதியை தொடர்ச்சியாக பெறுபவர்கள். உதாரணமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சமாதானப் பேரவை போன்ற நிறுவனங்கள் இதில் பிரதானமானவை.

இதேபோன்று, வடக்கு கிழக்கில் இயங்கி வரும் சிறிய அரசுசாரா நிறுவனங்களும் அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதியில்லா விட்டால் இயங்கமுடியாத நிலைமை ஏற்படும்.

ட்ரம்ப் நிர்வாகம் பல அதிரடியான உத்தரவுகளை பிறபித்து வருகின்றது. அதில் முதன்மையானது அமெரிக்க உதவி நிறுவனம் தொடர்பானது. இலங்கையில் ஊடகங்களின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில் பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிழிக்கப்பட்டிருப்பது தொடர்பிலும் ட்ரம்ப் நிர்வாகம் சுட்டிக் காட்டியிருக்கின்றது. ட்ரம்ப் நிர்வாகத்தின் பார்வையில் அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதி பயனற்ற வகையில் செலவழிக்கப்படுகின்றது. அதனால் எதிர்பார்த்த பயன்கள் கிடைக்கவில்லை. இலங்கை விடயத்தை ஓர் உதாரணமாக எடுத்துக் கொண்டால் ட்ரம்ப் நிர்வாகத்தின் குற்றச்சாட்டில் பொருளிருப்பதை காணலாம்.

ஏனெனில் இனங்களுக்கிடையில் சாமானத்தை கட்டியெழுப்பப் போவதாகக் கூறியே பல மில்லியன்கள் செலவழிக்கப்படுகின்றன. ஆனால், யுத்தம் முடிவடைந்து பதினைந்து வருடங்கள் கடந்து விட்ட நிலையில் கூட ஆகக் குறைந்தது அரசமைப்பிலுள்ள விடயங்களைக் கூட அரசாங்கங்கள் அமுல்படுத்த முயற்சிக்கவில்லை. அவற்றை புறம் தள்ளியே செயல்பட்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் நோக்கினால் இலங்கையில் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்னுமடிப்படையில் செலவழிக்கப்படும் அமெரிக்க உதவி நிறுவனத்தின் அரசுசாரா நிறுவன நிதிகள் தூர நோக்கோடு செலவழிக்கப்படவில்லை.

அதேபோன்று அவ்வப் போது உல்லாச விடுதிகளில் ஒன்று கூடி சமஷ்டி தொடர்பிலும் புதிய அரசியல் யாப்பு தொடர்பிலும் உரையாடப்படுகின்றது. ஆனால், அரசியல் தீர்வு விடயத்தில் ஓர் அடிகூட முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. இதிலுள்ள முரண்பாடான விடயம் என்னவென்றால், ஒருபுறம் சமாதானம் பற்றி பேசுவதற்காகவும் அரசுசாரா நிறுவன நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன மறுபுறம், இலங்கையின் சுதந்திர தினத்தின் போது கறுப்பு கொடி காட்டுவதற்கும் அரசுசாரா நிறுவனத்தின் நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பில் அமெரிக்க உதவி நிறுவனத்தின் இலங்கைத் திட்டங்களுக்கான உயர் அதிகாரிகளிடம் போதிய மதிப்பீடுகள் இருந்ததா என்பதிலும் தெளிவில்லை. இதேவேளை தங்களின் திட்டங்களை வழிநடத்துவதற்காக நியமிக்கப்பட்ட உள்ளூர் பணியாளர்களின் ஆற்றல் மற்றும் அரசியல் மதிப்பீடுகள் தொடர்பிலும் அமெரிக்க நிறுவன உயர் அதிகாரிகளிடம் போதிய மதிப்பீடு இருந்ததா என்பதிலும் தெளிவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் அமெரிக்க உதவி நிறுவனம் எதிர்காலத்திலாவது இந்த விடயங்களை கருத்தில் கொண்டால், நிதி சரியான திட்டங்களுக்கு சரியான அரசுசாரா நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் சூழல் உருவாகலாம்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா “சங்கீத சங்கமம் 2025” 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற் செல்வர் - சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு. திரு முருகன் அவர்கள் “வேர்களைத் தேடுங்கள்” என்ற தலைப் பில் சிறப்புரையாற்றுகின்றார்.

கலைமாமணி டாக்டர் நித்தியஶ்ரீ மகாதேவன் அவர்களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. மேலதிகவிபரங்கள் பின்னர் அறியத் தரப்படும்.

# விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பில் மக்கள் கேள்வி!

## யாழில் பிரதமர் பங்கேற்ற கூட்டத்தில் பதற்றம்! நழுவினார் ஹரிணி!



யாழ்ப்பாணத்தில் பிரதமர் பங்கேற்ற கூட்டமொன்றில் விடுவிக்கப்படாத வலிகாமம் வடக்கு காணிகள் தொடர்பாகக் காணி உரிமையாளர்கள் பிரதமரிடம் கேள்வி எழுப்பியதால் அங்குப் பதற்றமான சூழல் ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

உடுவில் தொகுதி மக்கள் சந்திப்பு ஏழாலை ஏழு கோவிலடியில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் 15 பெப் 2025 மாலை மக்கள் சந்திப்பொன்று இடம் பெற்றது. பிரதமர் ஹரிணி அமரசூரிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் உரையாற்றினார்.

தமிழ் மக்கள் எதிர் நோக்கும் காணி விடுவிப்பு அரசியல் கைதிகள் விவகாரம் காணமலாக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்டவை தொடர்பாகப் பிரதமர் எதுவும் தெரிவிக்கவில்லை எனக் காணி உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்நிலையில் பிரதமர் உரையாற்றி விட்டு மேடையிலிருந்து இறங்கி மக்களைச் சந்திக்க வந்த போது காணி உரிமையாளரொருவர் பலாலி பகுதியில் காணிகள் விடுவிக்கப்படாது இருப்பது தொடர்பாக தமது ஆதங்கத்தைப் பிரதமரிடம் நேரடியாகத் தெரிவித்தார்.

பிரதமர் ஏனையவர்களுடன் பேசச் சென்ற போது காணி உரிமையாளர் உங்கள் அரசியலுக்காக எங்களைப் பயன்படுத்த வேண்டாம் எனக் குறிப்பிட்டுள்ளார். பிரதமரைச் சூழ்ந்திருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குறித்த காணி உரிமையாளரை அங்கிருந்து வெளியேற்ற முயற்சித்தபோது அங்குப் பதற்றமான சூழல் ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவித்தார். இதனையடுத்து பிரதமர் ஹரிணி அமரசூரிய பாதுகாப்பு அதிகாரிகளால் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை விபத்தில் சிக்கிக் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனை பிரதமர் ஹரிணி அமரசூரிய நேரில் சென்று பார்வையிட்டார். பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனின் உடல் நிலை தொடர்பிலும் வைத்தியர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் பயணித்த வாகனம் சாவகச்சேரி தளங்கிளப்பு பகுதியில் விபத்துக்குள்ளானதில் அவர் உள்ளிட்ட மூவர் காயமடைந்தனர்.

### யாழ்.இந்துக்கு புகழாரம்

யாழ். இந்துக் கல்லூரி நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கையின் பிரதான பாடசாலை எனவும், இந்த பாடசாலை அடைந்துள்ள சாதனைகள் மிகவும் சிறப்பானது எனவும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு 15.02.2025 கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் சிநேகபூர்வ சந்திப்பொன்றை மேற்கொண்ட பிரதமர், பாடசாலையின் இந்து கலாசார வரலாற்றை விளக்கும் அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டுள்ளார்.

இதன்போது பாடசாலையின் சாதனைகள் மற்றும் பாடசாலையின் செயற்பாடுகள் குறித்த அறிக்கை பிரதமரிடம் கையளிக்கப்பட்டது. இங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கையின் பிரதான பாடசாலைகளில் ஒன்றாகும். இந்த பாடசாலை அடைந்துள்ள சாதனைகள் பற்றி நீங்கள் வழங்கிய அறிக்கை மிகவும் சிறப்பானது.

பாடசாலையின் கணக்கு நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற்ற விதம் ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறைக்கான ஆணையை வலுப்படுத்த

## அழுத்தங்கள் வழங்குமாறு கனடியத் தூதுவரிடம் கஜேந்திரகுமார் வலியுறுத்தல்!

## 7 வருடங்களுக்கு முன் இதையே சுமந்திரன் சொன்ன போது துரோகியானார்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பெருமளவுக்கு வலுவற்றதெனினும், இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களை திரட்டும் செயன்முறை வரவேற்கத்தக்கதாகும். ஆனால் அச் செயற்திட்டத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். அதற்குரிய அழுத்தங்களை இணையனுசரணை நாடுகளில் ஒன்றான கனடா வழங்கவேண்டும் என இலங்கைக்கான அந்நாட்டு உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷுக்கும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் இடையிலான சந்திப்பு 14 பெப் 2025 வெள்ளிக்கிழமை) இரவு 7.30 மணிக்கு யாழ் ஃபொக்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது தமிழர்கள் முகங்கொடுத்துவரும் சமகாலப் பிரச்சினைகள், அப்பிரச்சினைகளுக்குரிய தீர்வை வழங்குவதில் தற்போதைய அரசாங்கத்தின் அணுகுமுறைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கனேடிய உயர்ஸ்தானிகர் கஜேந்திரகுமாரிடம் கேட்டறிந்தார்.

அதற்குப் பதிலளித்த கஜேந்திரகுமார், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தாம் புதியதொரு அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்பப் போவதாக ஏற்கனவே கூறியிருந்தாலும், தற்போது வரை எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை எனவும், கடந்த காலத்தை ஒத்த நிலைவரமே இப்போதும் தொடர்வதாகவும் விசனத்துடன் சுட்டிக்காட்டினார்.

அதே போன்று பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முற்றாக நீக்குதல், அரசியல் கைதிகளை விடுவித்தல் என்பன உள்ளடங்கலாக அரசாங்கத்தினால் முன்னர் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் உரியவாறு நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்த கஜேந்திரகுமார், இவற்றை நாம் கூறுவதற்கு முன்னரே நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இருப்பினும் கூட, அரசாங்கம் வேண்டுமென்றே அவற்றைத் தவிர்த்து வருவதாகவே கருதவேண்டியிருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

மேலும் தமிழர்களுக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வாக தாம் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வையே வலியுறுத்தி வருவதாக கனேடிய உயர்ஸ்தானிகரிடம் கூறிய அவர், தற்போது பாராளுமன்றத்தில் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 19 உறுப்பினர்களில் தமிழ்த்தேசியக்கட்சிகளைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகவும் அதனை இலக்காகக் கொண்ட ஒற்றுமை முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் எடுத்துரைத்தார்.

அத்தோடு கனடாவில் நடைமுறையில் இருக்கும் சமஷ்டி முறைமை தொடர்பில் இலங்கை மக்களுக்குத் தெளிவூட்டுவதற்குரிய செயற்திட்டத்தை கனடா முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பெருமளவுக்கு வலுவற்றதெனினும், இலங்கையில் இடம் பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களை திரட்டும் செயன்முறை வரவேற்கத்தக்கதாகும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இருப்பினும் அச்செயற்திட்டத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அவர், அதற்குரிய அழுத்தங்களை இணையனுசரணை நாடுகளில் ஒன்றான கனடா வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.



இதே கருத்தையே நல்லாட்சி அரசாங்க காலத்தில் சுமந்திரன் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தார். மனித உரிமை மீறல்கள் என்ற விடயத்தில் நின்று சர்வதேச நாடுகளின் அனுசரனையுடன் கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டும் முக்கிய பணியை மேற்கொண்டார். அதுவே இன்றும் தொடர்கின்றது

அந்தக் காலகட்டத்தில் இலங்கையில் நடந்தது மனித உரிமை மீறல்கள் அல்ல இனப்படுகொலை. இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றக் கூண்டில் நிறுத்த வேண்டும் என்ற ஒவ்வாத கோஷங்களை எழுப்பி தமிழரசுக்கட்சிக்கும் சுமந்திரனுக்கும் எதிராக அரசியல் செய்த கஜேந்திரகுமார் என்று அதே வழிக்குத் திரும்பியுள்ளார். இவரது பேரன் ஜி.ஜி.பொன்னம்பலம் தந்தை செல்வாவுடன் முரண்பட்டு தமிழின நலன்களை வேரறுத்தாரோ அதே போன்று தன்னை விட உயர்வான சட்டத் தொழிலை செய்யும் சுமந்திரனுடன் முரண்பட்டு தமிழினத்தைப் பிளவுபடுத்தினார்.

தனது அந்திமக் காலத்தில் இன ஒற்றுமை என்ற கோஷத்துடன் தந்தை செல்வாவுடன் ஜி.ஜி. பொன்னம்பலம் இணைந்தாரோ அதே போன்று இன்று கஜேந்திரகுமாருக்கும் ஒற்றுமை என்னும் கோஷத்தை உச்சரிக்கத் தொடங்கியுள்ளார். எல்லாம் தங்கள் தங்கள் அரசியல் இலாபம் தேடும் வேலையே தவிர வேறு ஒன்றுமில்லை. பாவம் தமிழ்மக்கள் தான்.

# பாரதி ஒரு நாடோடி!

இனி, பலாலி வீதியில் ஒரு தோள் மூட்டைத் தூக்கிக் கொண்டு பையப் பைய நடந்து போகும் பாரதியைக் காண முடியாது.

பாரதிக்கு முதல் எனக்கு அவருடைய சகோதரன் பரதனைத் தெரியும். பாரதியின் அப்பாவையும் அம்மாவையும் தெரியும். பாரதியின் அப்பா இராஜநாயகம் மாஸ்டரும் அம்மாவும் வசித்த கோப்பாய் போலீஸ் நிலைய வீதியிலிருந்த அந்தப் புதிய வீட்டுக்கு நானும் மு. திருநாவுக்கரசுவும் பின் மாலை வேளைகளில் போவோம். பெருமளவுக்கு அயலவர்கள் குறைந்த, அப்பொழுது தான் புதிதாக வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பகுதி அது.

யுத்த காலம். மின்சாரம் இல்லை. இராஜநாயகம் மாஸ்டர் எங்களோடு கதைத்துக் கதைத்து ஹரிக்கன் லாம்பைத் தயார்ப்படுத்துவார்.அவர் லாம்பின் சிமினியை துடைக்கும் விதம் ஒரு கவிதை போல இருக்கும். முதலில் ஒரு சேலைத் தூண்டினால் சிமினியை துப்புரவாக்குவார். பின்னர் அதைவிடச் சுத்தமான ஒரு சீலைத் தூண்டினால் சிமினியைத் துடைப்பார். அதன்பின் பேப்பரால் சிமினியை மினுக்குவார். பளபளக்கும். திரும்பத் திரும்ப மினுக்குவார். ஒளி சிறு தடையுமின்றி வீட்டில் பரவ வேண்டும் என்ற எதிர்பார்ப்பு.

இராஜநாயகம் மாஸ்டர் இடதுசாரி மரபில் வந்தவர். எழுத்தாளர். அவரைப் போல மூப்பு, தெளிவு, முதிர்ச்சி, நிதானம் எல்லாமும் பாரதியிடமும் உண்டு.

லாம்பின் சிமினியை மினுக்குது போலவே இராஜநாயகம் மாஸ்டர் தன் மாணவர்களையும் மினுக்கினார் பிள்ளைகளையும் மினுக்கினார். தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்தில் அடைக்கலம் தந்த வீடுகளில் அதுவும் ஒன்று.

பாரதி ஒரு கையை இழந்த பின்னர் தான் அவருடன் நான் நெருங்கிப் பழகத் தொடங்கினேன். கிழக்கிற்கு அழைத்துச் செல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் வாகனம் விபத்துக்குள்ளாகியது.அதில் காயப்பட்ட பாரதியின் ஒரு கை துண்டிக்கப்பட்டது.

ஓர் ஊடக ஆசிரியராக அவர் தொடர்ந்தும் ஒரு ஊடகத்திலேயே நிலைத்து நிற்க முடியவில்லை. 2009க்குப் பின்னரான தமிழ் அரசியல் சூழலையும் ஊடகச் சூழலையும் ஊடக அரசியல் சூழலையும் விளங்கிக் கொள்வதற்கு பாரதியின் ஊடக வாழ்க்கை உதவும். அவரோடு பணியாற்றிய தேவகௌரி பாரதியண்ணாவின் சுய வரலாறு எம் சமூக வரலாறு என்று கூறியதும் அதைத்தான்.

1990களின் தொடக்கத்தில் திசை பத்திரிகையின் அலுவலகத்தில் வைத்து அதன் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த ஏஜே கனகரட்னா எனக்குச் சொன்னார்.. ஊடகவியலாளர் ஒரு நாடோடி என்று. அது அவருடைய சொந்த வசனம் அல்ல. ஏரிக்கரை பத்திரிகை குழுமத்தின் பிரதான ஆசிரியராக இருந்த ஒரு சிங்கள ஊடகவியலாளரின் மேற்கோள்.

ஊடகவியலாளர் எப்பொழுது நாடோடி ஆகிறார்? ஊடக முதலாளிகளோடு அவர் சுதாரிக்க முடியாமல் போகும் போது அல்லது அந்த ஊடகச் சூழலோடு ஒத்துப் போக முடியாத போது அல்லது ஊடகத்தின் அரசியல் அஜெண்டாவுக்குள் தன்னைப் பொருத்திக் கொள்ள முடியாத போது ஊடகவியலாளர் நாடோடி ஆகிறார்.

பாரதியின் காலத்தில் நாடோடிகளுக்கு யூடியுப் என்ற புகலிடம் கிடைத்து விட்டது. அதற்காக யூடியூபர்கள் எல்லாருமே நாடோடிகள் என்பதல்ல.

பாரதி புதிய தொழில் நுட்பத்தோடு தன்னைப் பொருத்திக் கொள்ள விரும்பவில்லை. அவர் புதிய தொழில்நுட்பச் சூழலோடு தன்னை முழுமையாக பொருத்திக் கொள்ளாத தலைமுறையைச் சேர்ந்த ஓர் ஊடகவியலாளர்.



அவர் ஒரு நாடோடியாக யூடியூப்புக்குள் வர விரும்பவில்லை. அவருடைய ஊடக ஒழுக்கம், தனிப்பட்ட சுபாவம் போன்றன அவரை அதற்குள் வர விடவில்லை.

காணொளிகளின் யுகத்தில் காட்டப்படுவதற்கும் உண்மைக்கும் தலைப்புக்கும் உண்மைக்கும் கூறப்படும் விளக்கத்துக்கும் உண்மைக்கும் இடையிலான தூரம் அதிகமாகிக் கொண்டு போகும் ஓர் ஊடகச் சூழலில் பாரதியைப் போன்றவர்கள் மிக அரிதான ஜீவராசிகள் தான்.

அதனால் தொடர்ச்சியாக வெவ்வேறு ஊடகங்களில் பணியாற்றினார். கடைசியாக ஓரளவுக்குத் திருப்தியான ஒரு பொறுப்பு கிடைத்த பொழுது இறந்து போய்விட்டார்.

பெருந் தேகி. துண்டிக்கப்பட்ட கைக்குரிய தோள்பட்டையைத் தூக்கிக் கொண்டு நடப்பார். தகப்பனைப் போல நறுக்காக கறாராகக் கதைக்க மாட்டார். மென்மையாக மிருதுவாகக் கதைப்பார். பாரதி கோபப்பட்டு நான் கண்டதில்லை. சீறிச் சினந்து கதைக்க மாட்டார்.

ஒரு முனிவரைப் போல எல்லாவற்றையும் சாட்சியாகக் கடந்து போவார். தனக்குச் சரியெனப்பட்ட விடயத்தையும் ஆக்ரோஷமாகச் சொல்ல மாட்டார். மற்றவர்கள் ஆக்ரோஷமாகப் பேசும் பொழுது அமைதியாக, சலனமின்றிக் கேட்டுக் கொண்டிருப்பார். ஆனால் அவருக்கென்று ஓர் அரசியல் நிலைப்பாடு இருந்தது. தகப்பனைப் போலவே அவர் அதில் சமரசம் செய்ததில்லை. அதனால் தான் ஒரு நாடோடியாக இறந்தார். ஆனால் நாடற்ற, அரசற்ற தேசம் ஒன்றின் சாட்சியாக நின்ற ஊடகவியலாளர் அவர்.

**- நிலாந்தன்**

# வேகமாக மாறி வரும் உலக அரசியல்!



உலக அரசியல் என்றுமில்லாதவாறு அதிகார சக்திகளின் போட்டிக்களமாக மாறிவருகின்றது. டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்காவின் புதிய நிர்வாகம் நிலைமைகளை எவ்வாறு கையாளப் போகின்றது அதற்கு சீனாவின் எதிர்வினைகள் எவ்வாறு அமையப் போகின்றன.

அமெரிக்க சீன உலகளாவிய போட்டியில் மேற்குலகும் கிழக்குலகும் எவ்வாறு எதிர்வினையாற்றப் போகின்றன என்பதைக் கொண்டே, உலக அரசியல் தீர்மானிக்கப்படப் போகின்றது. ட்ரம்பின் அறிவிப்புகள் ஒருபுறம். அவரின் மிரட்டி விட்டு அமைதியடையும் வழமையான பேச்சுகளாக நோக்கப்பட்டாலும் கூட அவரின் அனைத்து அறிவிப்புகளுமே அவ்வாறான தன்மையுடையவையல்ல.

ட்ரம்பின் முதல் நிர்வாகத்தின் போது சீனாவுக்கு எதிரான கடும்தொனி பிரசாரங்கள் முடக்கி விடப்பட்டன. அமெரிக்காவின் பிரதான பிரச்சனை சீனா என்பதாகவே அமெரிக்க வெளிவிவகார அணுகுமுறை மாறியது. பின்னர் அதிகாரத்தை கைப்பற்றிய பைடன் நிர்வாகம் ட்ரம்ப் தொடர்பில் எவ்வாறான விமர்சனங்களை முன்வைத்த போதிலும் கூட, சீனா தொடர்பான அணுகுமுறைகளில் ட்ரம்பின் நிர்வாகத்தின் அணுகுமுறையையே பைடன் நிர்வாகமும் தொடர்ந்தது.

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் கட்சி ரீதியில் மோதுவது, ஒருவரையொருவர் கடுமையாக சாடுவது என்பதெல்லாம் உள்நாட்டு அரசியல் விவகாரம் மட்டும்தான். சர்வதேச உறவுகளைப் பொறுத்தவரையில் அமெரிக்க நலன் என்பதில் அனைவரும் ஒன்றாகவே இருக்கின்றனர். சீனா தொடர்பான ட்ரம்ப் நிர்வாகத்தின் அணுகுமுறையையே பைடன் நிர்வாகம் மென்போக்கில் முன்னெடுத்தது.

தற்போது ட்ரம்பின் இரண்டாவது நிர்வாக காலத்தில் சீனா தொடர்பில் கடுமையான நிலைப்பாடுகளை எடுப்பதற்கான வாய்ப்பே தெரிகின்றது ஏனெனில், சீனா இராணுவ மற்றும் தொழில்நுட்ப விடயத்தில் அமெரிக்காவுக்கு பெரும் சவாலாக மாறியிருக்கும் ஒரேயொரு சக்தி. இந்த நிலையில் அதனை எதிர்கொள்ளும் உபாயங்கள் தொடர்பில் அமெரிக்க ஆளும் தரப்பு சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகி விட்டது.

உலக அரசியலில் ஏற்படும் சடுதியான மாற்றங்களுக்குள் ஈழத்தமிழர் பிரச்சினையெல்லாம் ஒரு விடயமாகவே இருக்கப் போவதில்லை.

இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரையில் அதிகம் நாடு தழுவிய அணுகு முறையே மேலோங்கியிருக்கின்றது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் காணப்பட்ட உலக அரசியல் சூழல் தற்போது தலைகீழ் நிலையை அடைந்திருக்கின்றது.

மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னரைப் போன்று உலகம் அதிக கவனம் செலுத்தக்கூடிய நிலையில் இல்லை.

ஏனெனில் காஸாவில் ஹமாஸூக்கு எதிரான இஸ்ரேலிய நடவடிக்கையின் போது, மேற்குலகின் அணுகுமுறை முற்றிலும் வேறாக இருக்கின்றது. அத்தோடு இப்போது நீங்கள் இல்லாவிட்டால் அவர்கள் என்றவாறு தெரிவுகள் உருவாகி விட்டன. சிறிய நாடுகள் மீது மனித உரிமைகள் சார்ந்து அதிக அழுத்தங்களை பிரயோகித்தால் அவர்கள் சீனாவை நோக்கிச் சாய்ந்து விடும் நிலைமை ஏற்பட்டு விடலாம். இது மேற்குலகுக்கு ஒரு சவாலாக மாறி விட்டது.

இந்தப் பின்புலத்தில் தான், ஈழத் தமிழர் விவகாரம் கவனிப்பாரற்ற விவகாரமாக சுருங்கிவிட்டது. இந்த அரசியல் சூழலை கருத்தில் கொண்டு தான் தமிழர் தரப்புகள் சிந்திக்க வேண்டும்.

அவ்வாறில்லாது தொடர்ந்தும் ஒரு சில சுலோகங்களில் சுகம்காண முற்பட்டால் வழமை போல் பேச்சு பல்லக்கு தம்பி பொடி நடை என்பது போலவே ஈழத் தமிழர் அரசியல் முற்றுப் பெறும்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


15 பெப்ரவரி 2025 - 21 பெப்ரவரி 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr இரத்தினவடிவேல் மயில்வாகனம்

மலர்வு:- 02.04.1927 உதிர்வு:-22.02.2012

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டு சிவபதம் அடைந்த அமரர் டாக்டர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களின் 13வது ஆண்டு நினைவு நாள் 01 மார்ச் 2025 சனிக்கிழமையாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களை நினைவு கூர்ந்து சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம்

வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் ஆறாவது ஆண்டு நினைவு தினம் 20 பெப்ரவரி 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீதரன் கிருஷ்ணவேணி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 16 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துஷியந்தி நவநாதன்

யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிரு ந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது நான்காவது ஆன்டு நினைவு நாள் 13 பெப்ரவரி 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 16வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சீனித்தம்பி செல்வம்

அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 16வது ஆண்டு நினைவுநாள் 18 பெப்ரவரி 2025 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி பிரசாந்தி அருச்சுனன்

வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடா Northyorkஐ வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது மூன்றாவது ஆண்டுத் திதி நினைவு நாள் 10 பெப்ரவரி 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



10 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கோகுலன் நந்தகுமாரின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கோகுலன் தனது பெற்றோர், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



10 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி தியாரா ரகுமாறன் செல்வன் சகாஜன் ரகுமாறன் சகோதரங்கள் தமது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



10 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி தியாரா ரகுமாறன் செல்வன் சகாஜன் ரகுமாறன் சகோதரங்கள் தமது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




10 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் Northyork கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுசன் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




11 பெப்ரவரி 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுதாகரன் சாமினி இணையர்கள் தைப்பூசத் திருநாள் உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



13 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



13 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



13 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



29 ஜனவரி 2025 புதன்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



16 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



18 பெப்ரவரி 2025 செவ்வாய்க்கிழமை அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 16வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



20 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம் இசை ஆசிரியர் அமரர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம்

புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம், இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 37வது ஆண்டு நினைவு நாள் 17 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை யாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 23 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்க வுள்ளார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர் களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத் தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# உக்ரேன் ஜனாதிபதியை சர்வாதிகாரி என்று வர்ணித்த டிரம்ப்



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் யுக்ரேன் அதிபர் வொலோடிமிர் ஸெலன்ஸ்கியை `சர்வாதிகாரி' என்று அழைத்துள்ளது, இருநாட்டு தலைவர்களுக்கும் இடையே உள்ள பிரச்சனையை ஆழப்படுத்தியுள்ளது.

ரஷ்யா–யுக்ரேன் போர் தொடர்பாக சௌதி அரேபியாவில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக கடந்த வாரம் டிரம்ப் தெரிவித்திருந்தார். இந்த பேச்சுவார்த்தையில் யுக்ரேன் தவிர்க்கப்பட்டுள்ளது என்ற விமர்சனத்தை ஸெலன்ஸ்கி முன் வைத்திருந்தார்.

மேலும் டிரம்ப், `ரஷ்யாவால் நிர்வகிக்கப்படும் தவறான தகவல்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று ஸெலன்ஸ்கி விமர்சித்திருந்தார். இதனைத் தொடர்ந்து, டிரம்ப் ஸெலன்ஸ்கியை `சர்வாதிகாரி' என்று அழைத்துள்ளார்.

அமெரிக்காவின் ஃப்ளோரிடாவில் சௌதி அரேபியா நடத்திய முதலீட்டு மாநாட்டில் பேசிய டிரம்ப், `ஜோ பைடனை ஒரு ஃபிடிலை (இசைக் கருவி) இசைப்பது போன்று இசைக்கவே ஸெலன்ஸ்கிக்கு திறமையிருக்கிறது,' என்று கூறினார்.

டிரம்ப், ஸெலன்ஸ்கியை `சர்வாதிகாரி' என்று அழைத்தது ஐரோப்பிய தலைவர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ஜெர்மனியின் ஆட்சித் துறைத் தலைவர் ஓலாஃப் ஷோல்ட்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய தலைவர்கள் தங்களின் கண்டனத்தை பதிவு செய்துள்ளனர்.

அதிபர் ஸெலன்ஸ்கியின் ஜனநாயக மாண்பை புறக்கணித்து கருத்து தெரிவிப்பது மிகவும் தவறானது, அபாயகரமானதும் கூட, என்று அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் தன்னுடைய ஆதரவை ஸெலன்ஸ்கிக்கு தெரிவிப்பதை உறுதி செய்தார். மேலும் இந்த விவகாரம் தொடர்பாக ஸெலன்ஸ்கியை அலைபேசியில் அழைத்து பேசியுள்ளார் ஸ்டார்மெர். ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்பட்ட யுக்ரேன் தலைவரான ஸெலன்ஸ்கிக்கு ஆதரவு அளிப்பதாக பிரதமர் பேசியுள்ளார்,' என்று பிரிட்டன் அரசாங்க செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

போர் காலங்களில் தேர்தல்களை ஒத்தி வைப்பது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணமாக உள்ளது. இரண்டாம் உலகப் போரின் போது பிரிட்டனும் தேர்தலை நடத்தவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

ஸெலன்ஸ்கியின் ஐந்து ஆண்டு கால ஆட்சியானது கடந்த ஆண்டு மே மாதத்தோடு முடிவுக்கு வந்தது. ஆனால், 2022–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ரஷ்யா, யுக்ரேன் மீது முழு அளவிலான படையெடுப்பில் ஈடுபட்டது. அதனைத் தொடர்ந்து, யுக்ரேனில் இராணுவச் சட்டம் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே தேர்தல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஸ்வீடன் பிரதமர் உல்ஃப் க்றிஸ் டெர்சன் டிரம்பின், `சர்வாதிகாரி' எனும் வார்த்தை பிரயோகத்தை கடுமையாக சாடினார். ஜெர்மனியின் வெளியுறவுத்துறை அமைச்சர் அன்னலேனா பேர்போக் டிரம்பின் விமர்சனத்தை `அபத்தம்' என்று கூறினார். உண்மையில் ஒரு ட்வீட் பதிவிடுவதற்கு பதிலாக உலக எதார்த்தத்தை கொஞ்சம் நீங்கள் பார்த்தால் ஐரோப்பாவில், சர்வாதிகாரத்தின் கீழ் வசிக்கும் ஐரோப்பிய மக்கள் யார் என்று உங்களுக்கு தெரிந்து விடும். ரஷ்ய மக்களும் பெலாரூஸ் மக்களும் தான் அவர்கள் என்று ஜெட்.டி.எஃப் செய்தி நிறுவனத்திடம் கூறினார் அன்னலேனா.

ஏற்கெனவே ட்ரூத் சோசியல் எனும் தன்னுடைய சமூக வலைதளத்தில் `சர்வாதிகாரி' என்று ஸெலன்ஸ்கியை விமர்சனம் செய்த டிரம்ப் மீண்டும் ஃப்ளோரிடாவில் பேசும்போது அதே வார்த்தையை பிரயோகித்தார்.

அவர் தேர்தலை நடத்த மறுத்து விட்டார். யுக்ரேனில் தேர்தல் கருத்துக் கணிப்பில் அவர் மிகவும் பின் தங்கியுள்ளார். ஒவ்வொரு நகரமும் அழிக்கப்பட்டு வருகின்ற நிலையில் நீங்கள் எப்படி அதில் முன்னணியில் செயல்படக் கூடும்,' என்று ட்ரம்ப் கேள்வி எழுப்பினார்.

யுக்ரேனில் இருக்கும் அரிய தாது வளத்தை பெறுவதற்கான அவருடைய முயற்சி குறித்து மேற்கொண்டு பேசிய அவர், ஸெலன்ஸ்கியின் அரசு அந்த ஒப்பந்தத்தை உடைத்தது என்று கூறினார். ஏற்கெனவே தன்னுடைய சமூக வலைதள பக்கத்தில், `ஸெலன்ஸ்கி மோசமான பணியை செய்துள்ளார். அவருடைய நாடு தகர்க்கப்பட்டுள்ளது. `பல இலட்சக் கணக்கானவர்கள்' தேவையின்றி இறந்துள்ளனர்' என்று குறிப்பிட்டதையே அவரின் இந்த பேச்சு பிரதிபலித்தது. அதே நேரத்தில் அவர், `அமெரிக்கா போரை நிறுத்துவது தொடர்பாக ரஷ்யாவுடன் வெற்றிகரமாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது,' என்றும் கூறினார்.

ஸெலன்ஸ்கியின் `தவறான தகவல்கள்' என்ற விமர்சனத்துக்கே டிரம்ப் இவ்வாறு பதில் அளித்துள்ளார் என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா போர் தொடங்கிய பின், முதல்முறையாக செவ்வாய்க்கிழமை அன்று (பிப்ரவரி 18) ரஷ்யா மற்றும் அமெரிக்க அதிகாரிகள் உயர்மட்ட ஆலோசனையை நடத்தினார்கள்.

தற்போது யுக்ரேனில் நடைபெற்று வரும் போருக்கு அந்த நாடு தான் காரணம் என்று ஃப்ளோரிடாவில் செவ்வாய்க்கிழமை அன்று டிரம்ப் பேசியது தான் இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே வார்த்தைப் போர் ஏற்படக் காரணமாக அமைந்தது.

ஏமாற்றப்பட்டதாக உணரும் யுக்ரேனியர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் செய்தி என்ன என்ற கேள்வியை பிபிசி டிரம்பிடம் கேட்டது. அதற்கு பதில் அளித்த அவர், `அவர்கள் வருத்தம் அடைந்துள்ளனர் என்று நான் கேள்விப்பட்டேன். அவர்களுக்கு தலைமை இல்லை என்று அவர்கள் வருத்தத்தில் உள்ளனர். ஆனால் மூன்று ஆண்டுகள் அவர்களுக்கு தலைமை இருந்தது. அதற்கு முன்பும் அவர் களிடம் தலைமை இருந்தது. இந்த பிரச்னைக்கு மிக எளிதில் தீர்வு கண்டிருக்கலாம்,' என தெரிவித்தார். நன்றி:– பிபிசி






Celebrating 32 years of excellence, Eelanadu, a Tamil community newspaper in Canada

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா

Kalaimamni, **Dr. Nithyasree Mahadevan** presents

**Sangeetha Sangamam 2025 - Carnatic Musical Concert**

கலைமாமணி **டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன்** வழங்கும்

# சங்கீத சங்கமம் 2025





சிறப்புரை

## வேர்களைத் தேடுங்கள்

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள்

**Sunday, June 1, 2025 @ 5:30pm**

**METROPOLITAN CENTRE**
3840 FINCH AVE EAST
**SCRBOROUGH ( FINCH/ KENNEDY)**

தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ்
**416-841-9600**
eelanadu1993@gmail.com

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# காலச் சூழலுக்கேற்ப அரசியல் களம் மாற வேண்டியது அவசியம்! போராளிக் கட்சிகளையும் உள்ளடக்கி பேச்சுவார்த்தை நடக்கும்!

காலச் சூழலுக்கு ஏற்ப அரசியல் களமும் அதற்கான முடிவுகளும் மாற்றம் பெறவேண்டியது அவசியமாகும். அதற்கேற்ப நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் அரசியல் பரப்பில் உள்ள கட்சிகளுடன் அவரவர் கட்சிகளின் கொள்கைகள் மாறுபடாது இணக்கப்பாட்டை ஏற்படுத்தி வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூர் அதிகார சபைகளை வெற்றி கொள்வதற்கான சாதக நிலைகளை உருவாக்க வேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் 18 பெப் 2025 நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு கூறிய சிவஞானம் மேலும் குறிப்பிடுகையில், தற்போது கடந்த காலங்களைப் போல் அல்லாது அரசியல் தளம் மாற்றமடைந்துள்ளது. இது தமிழ் தரப்பினரின் அரசியல் களத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

இதேவேளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தையும் தமிழ் அரசியல் புலம் சார்ந்த கட்சிகள் கைப்பற்ற வேண்டியது அவசியமாக உள்ளது.

இந்த நிலையில், தமிழ் அரசியல் பரப்பில் உள்ள கட்சிகள், கொள்கைகள், பாதைகள் வேறு வேறாக இருந்தாலும் தங்களின் நிலைப்பாடுகளில் இருந்து கொண்டு ஒன்றிணைவது அவசியமாகும்.




இதில் உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்த அனைத்து போராளிக் கட்சிகளும் அடங்குவதாக இருக்க வேண்டும் என்பதுடன் இது தொடர்பான கருத்தாடல்கள் கட்சிகளின் தலைவர்களுடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை தற்போது அனைவரும் ஒரு புதுத் தளத்துக்கு வருவதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அது நிறைவுற்ற பின்னரே தேர்தலில் தற்போதைய களச் சூழலுக்கேற்ப எவ்வாறு ஒரே நிலைப்பாட்டுடன் போட்டியிடுவது என்பதை தீர்மானிக்க முடியும்.

அது மட்டுமன்றி கூட்டாக போட்டியிடுவதா, இரண்டு அல்லது மூன்று தரப்பாக வாக்குகள் சிதறாத வண்ணம் போட்டியிடுவதா என்பது பற்றியும் அடைவை எட்ட முடியும்.

அத்துடன் தமிழ் தரப்பின் போட்டியாளர்கள், எந்தவொரு கட்சியும் மற்றைய தரப்பின் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளாமல் சேறுபூசல்களில் ஈடுபடாமல், ஒரே குறிக்கோளுடன் வெற்றி இலக்கை அடையும் பொறிமுறையை உள்ளடக்கிய வகையில் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து இதற்கான கள நிலையை உருவாக்க வேண்டும்.

அந்த வகையில் அவரவர் தத்தமது சுயத்தோடு நின்று பேசி ஒருமித்த கருத்தோடு வெற்றி வாய்ப்பு, களச் சூழல் யாருக்கு பொருத்தமாக இருக்குமோ அதற்கேற்ப நகர்வுகளை முன்னெடுப்பதும் அவசியமாகும் என தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் தற்போது பொதுச் செயலாளராக சுமந்திரன் தெரிவாகியுள்ள நிலையில், கட்சியின் முடிவுகளில் மாற்றங்கள் ஏற்படுமா என ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு, அவ்வாறான எதுவும் இனி இடம் பெற வாய்ப்பிருக்காது என்றும் சிறீதரனை கூட கட்சியிலிருந்து வெளியேற்ற இடமளிக்கப்படாது என்று அவர் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த தேர்தல் காலங்களில் கட்சியில் இருந்து விலகாமல் விலகி போய் எதிரணியில் இருந்து தேர்தலில் போட்டியிட்டவர்களை நீக்குவது என்பது மத்திய குழுவின் தீர்மானம். அது இறுதியானது.

ஆனால் தேர்தலில் போட்டியிடாமல் ஆதரவு தெரிவித்தவர்களிடம் விளக்கமே கோரப்பட்டுள்ளது. விளக்கம் கோரப்பட்டது என்பது நீக்குவது அல்ல. அவர்கள் பொருத்தமான விளக்கம் சொன்னால் ஒழுக்காற்று குழு அது தொடர்பில் தீர்மானிப்பார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளருக்கு தான் ஆதரவு தெரிவிப்பேன் என மத்திய குழுவிடம் மிக தெளிவாக கூறி விட்டு தான் ஆதரவு தெரிவித்தார்.

அது மத்திய குழுவின் தீர்மானத்தை மீறிய செயல் தான். அதற்காக அது தொடர்பில் அவரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. விளக்கத்தின் அடிப்படையில் ஒழுக்காற்று குழு முடிவெடுக்கும்.

சிறிதரனை கட்சியை விட்டு நீக்கும் எண்ணம் யாருக்கும் இல்லை. யாரும் மத்திய குழுவில் இது தொடர்பில் பேசவும் இல்லை என தெரிவித்தார்


CANADA HINDU MAAMANTRAM
கனடா இந்து மாமன்றம்

## கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
## சர்க்கரைப் பொங்கல் விழா - 2025
## சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: March 22, 2025 (Saturday) 9.00 AM

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2020 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2011 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.
5. ஏப்பிரல் 27, 2025ல் நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 05, 2025க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ........................................

குடும்பப் பெயர்: ........................................

பிரிவு: ........................................

பிறந்த திகதி: ........................................

தொலைபேசி எண், email: ........................................

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 416.356.7323
647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 05, 2025**

# விகாரை அரசியல்!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் என்பது சுத்தம் செய்வதை மட்டும் குறிக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டமன்று. அதற்குப் பின்னால் ஒரு பெரிய நோக்கம் உள்ளது. நமது சூழல் மட்டுமல்ல. நமது உள்ளத்தில் உள்ள அழுக்குகள் முதல் ஒரு பண்பான வாழ்க்கைக்கான தடைகளை அகற்றுவதும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும். இவ்வாறு கூறியிருப்பவர் பிரதமர் ஹரினி.

கடந்த ஒன்பதாம் திகதிகாலை. மட்டக்குளி கடற்கரைப் பூங்காவில் இடம்பெற்ற கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 'அழகிய கடற்கரை கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலம்' நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

உள்ளத்தில் உள்ள அழுக்குகளையும் ஒரு பண்பான வாழ்க்கைக்கான தடைகளையும் அகற்ற வேண்டும் என்று ஹரிணி கூறுகிறார். அப்படியென்றால் இலங்கைத் தீவின் நீண்டகால அழுக்கு எது? இனவாதம் தான். அதை அகற்ற வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் அதைச் செய்ய முடியுமா?

முடியும் என்று நம்பத் தக்கவிதமாக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமையவில்லை. கடைசியாக நடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அனுரவின் முகபாவனையிலும் அது தெரியவில்லை.

அதை விட முக்கியமாக நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக வடக்கிலும் கிழக்கிலும் பிரதான சாலைகளில் அமைந்திருந்த சில சோதனைச் சாவடிகளும் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடங்களுக்குள் நுழையும் வாசல் பகுதியில் அமைந்திருந்த சோதனைச் சாவடிகளும் அகற்றப்பட்டன. ஆனால் தேர்தல் முடிந்த பின் அவை மீண்டும் முளைத்து விட்டன. இந்த விடயம் கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஐநா உயர் அதிகாரிகள் குழுவுக்குச் சுட்டிக் காட்டப்பட்டது. இராணுவ மயநீக்கம் என்பது எவ்வளவு கடினமானது என்பதனை விளங்கிக்கொள்ள இது உதவும்.



இப்படித்தான் இருக்கிறது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மாற்றங்கள். இவ்வாறான ஏமாற்றகரமான ஒரு பின்னணியில் தையிட்டி விகாரையில் கையை வைத்து அடுத்தடுத்த தேர்தல்களில் வெற்றி வாய்ப்புகளைக் குறைத்துக் கொள்ள அரசாங்கம் தயாராக இருக்குமா?

இலங்கைத் தீவின் இன யதார்த்தம் அது தான். தமிழ்ப் பகுதிகளில் எதிர்ப்புக் கூடும் பொழுது அதைக்காட்டி சிங்கள பௌத்த வாக்குகளைத் திரட்டலாம். தமிழ் எதிர்ப்பைத் தணிப்பதற்காகத் தமிழ் மக்களுக்கு விட்டுக் கொடுத்தால் சிங்களபௌத்த வாக்குகளை இழக்க வேண்டியிருக்கும். சில மாதங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலும் பின்னர் மாகாண சபைத் தேர்தலும் வைக்கப்பட வேண்டும். எனவே இது ஒரு தேர்தல் ஆண்டு. இத்தேர்தல் ஆண்டில் சிங்கள பௌத்த வாக்காளர்களை இழப்பதா அல்லது தையிட்டியைக் கிளீன் பண்ணுவதா என்று அரசாங்கம் முடிவு எடுக்க வேண்டும்.

அந்த விகாரையை படையினரிடமிருந்து பொறுப்பெடுத்து புத்தசாசன அமைச்சு நிர்வகிக்கப் போவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதன் படைப் பரிமாணத்தைக் குறைத்து சிவில் பரிமாணத்தைக் கூட்டுவதன் மூலம் தமிழ் மக்களின் எதிர்ப்பைத் தணிக்கலாம் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அவ்வாறு நடந்தால் படைத் தரப்பு அந்த பகுதியில் இருந்து



விலகி ஒதுங்கி நிற்கும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால் புத்தசாசன அமைச்சையும் படைத் தரப்பையும் பிரித்துப்பார்க்க முடியாது. சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் வெவ்வேறு பகுதிகள் அவை. எனவே புத்த சாசன அமைச்சு அதனை நிர்வகித்தாலும் படையினரின் நிழலில் தான் அது தொடர்ந்து பாதுகாக்கப்படும்.

உதாரணமாக, தையட்டியில் இருந்து சுமார் 13 கிலோமீட்டர் தொலைவில் மாதகல் கடற்கரையில் சம்பில் துறை முகம் காணப்படுகிறது. இது புராதன இலக்கியங்களில் குறிப்பிடப்படும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு புராதன துறைமுகம் ஆகும். ஆனால் இப்பொழுது அந்தப் பகுதி முழுவதுமாக சிங்கள பௌத்த மயப்படுத்தப்பட்டு விட்டது. அதற்குச் சிங்கள இலக்கியங்களில் கூறப்படும் ஜம்புகோளப் பட்டினம் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. அப்பகுதி முழுவதும் சிங்கள பௌத்தக் கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. யுத்த வெற்றி வாதத்தின் சுற்றுலாப் பயணிகளாக வரக்கூடிய சிங்கள மக்களைக் கவர்வதற்கு அங்கே ஒரு பெரிய விருந்தினர் விடுதி கட்டப்பட்டுள்ளது. சம்பில்துறை ஜம்பு கோளப் ப்பட்டினமாக மாறிவிட்டது.

அந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து அங்கு வாழும் இந்துக்கள் ஒரு பெரிய சிவன் சிலையை அங்கே நிறுவியிருக்கிறார்கள். ஆனால் அந்த பகுதிக்குப் போய் வந்தால் தெரியும், சிங்கள பௌத்த மயமாக்கப்பட்ட அந்தப் பகுதிக்குள் பரம சிவன் அனாதை போல நிற்கிறார்.

சம்பில்துறையைப் போலவே தையிட்டிக்கும் வரலாற்று முக்கியத்துவம் உண்டு. ஏற்கனவே அங்கு ஆதி பௌத்த விகாரை ஒன்று காணப்பட்டது என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அதை வைத்து சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது அந்தப் பகுதியை சிங்கள பௌத்த மயப்படுத்தி வருகின்றது. அந்த ஆதி பௌத்த விகாரையானது அநேகமாக தமிழ் விகாரையாகவும் இருக்கலாம். ஆனால் இப்பொழுது தமிழர்கள் மத்தியில் பௌத்தம் பயிலப்படும் மதமாக இல்லை. எனவே அதைத் தமிழ் பௌத்த விகாரையாகக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை இல்லை.

அந்த ஆதி விகாரை இருந்த இடம் அப்படியே இருக்கிறது. இப்பொழுது கட்டப்படும் விகாரையானது ஒரு புதிய இடத்தில் கட்டப்படுகிறது. மிகக் குறிப்பாக அது ஒரு சிங்கள பௌத்த விகாரையாகத்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில் தமிழ் அடையாளம் கிடையாது.

அதை விட முக்கியமாக, அது ஒரு தனியார் காணியில் கட்டப்பட்டுள்ளது. அந்தக் காணியின் உரிமையாளர் ஒரு ஓய்வு பெற்ற நில அளவையாளரான மலேசியன் பெஞ்சனியர் என்று கூறப்படுகிறது. அவருடைய பெண் வாரிசு ஒன்று மலேசியாவில் இருந்து வந்து அந்த விகாரைக் காணி தொடர்பாக ஒரு தமிழ் அரசியல்வாதியோடு உரையாடியதாகவும் தகவல் உண்டு.

பின்னர் படைத்தரப்பினரை அவர் சந்தித்ததாகவும் ஒரு தகவல் உண்டு. அவர் ஒரு முதிய பெண் என்றும் இப்பொழுது எங்கே இருக்கிறார். இருக்கிறாரா இல்லையா போன்ற விவரங்களும் தெரியாது என்று மேற் சொன்ன அரசியல்வாதி எனக்குச் சொன்னார்.

இப்பொழுது பிரச்சினை அந்தக் காணி தனியாருடையதா அரசாங்கத்துடையதா என்பது அல்ல. அது யாருடையதாகவும் இருக்கட்டும். அங்கே கட்டப்பட்ட விகாரை தமிழ் மக்களுக்காக கட்டப்படவில்லை என்பது மட்டும் உண்மை. அது சிங்கள பௌத்த மயமாக்கலின் ஒரு பகுதியாகத் தான் அங்கே கட்டப்பட்டுள்ளது என்பது தான் இங்குள்ள பிரச்சினை.

தமிழ்ப் பகுதிகளில் சிங்கள வியாபாரிகளும் முதலீட்டாளர்களும் காணிகளை விலை கொடுத்து வாங்குகிறார்கள். குறிப்பாக சில இடங்களில் போலீஸ் நிலையம் அமைப்பதற்கு போலீஸ் திணைக்களம் அவ்வாறு தமிழ் மக்களிடம் காணிகளை வாங்கியிருப்பதாகக் கூறப்படுகின்கிறது. எனவே அரசாங்கம் காணியை வாங்குவது இங்கு பிரச்சினை அல்ல. அரசாங்க கட்டுமானங்கள் அமைக்கப்படும் காணியின் உரிமையாளர் யார் என்பதும் இங்கு பிரச்சனை அல்ல. அதாவது இதை வெறும் சட்டப் பிரச்சினையாக மட்டும் கருத முடியாது. மாறாக இங்கே பிரச்சனை அந்த விகாரை எதற்காகக் கட்டப்படுகிறது என்பது தான்.

சந்தேகத்துக்கிடமின்றி அது தமிழ் மக்களுக்காக கட்டப்படவில்லை. அது 2009க்கு பின்னரான சிங்கள பௌத்த மயமாக்கலின் ஒரு பகுதியாகத்தான் கட்டப்படுகிறது. தையிட்டிலிருந்து 13 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சம்பில் துறைமுகத்தை எப்படி சிங்கள மயப்படுத்தியிருக்கிறார்களோ அப்படித் தான் இதுவும்.

இரண்டுமே 2009க்கு பின்னர் கட்டப்பட்டவை. எனவே இங்கு தமிழ் மக்கள் எதிர்க்க வேண்டிய விடயம் அது சிங்கள பௌத்த மயமாக்கலின் ஒரு குறியீடு என்பது தான். எனவே பிரச்சனையை அந்தக் கோணத்தில் இருந்து தான் அணுக வேண்டும். அந்தக் கோணத்தில் இருந்து தான் தீர்க்கவும் வேண்டும்.

அதை ஒரு சட்டப் பிரச்சினையாக அணுகி சட்டத் தீர்வை எதிர்பார்ப்பது என்பது இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக உள்ள சட்டத்தை தமிழ் மக்கள் நம்புகிறார்கள், எதிர்பார்ப்போடு பார்க்கிறார்கள் என்று பொருள்படும். இல்லை. நாட்டின் சட்டம் எப்பொழுதும் தமிழ் மக்களுக்கு எதிராக வளைக்கப்படும் என்பதற்கு குருந்தூர் மலை, வெடுக்கு நாரிமலை கிழக்கில் மேய்ச்சல் தரை போன்ற உதாரணங்கள் உண்டு.

பயங்கரவாத தடைச் சட்டத்தைத் தன்னுள் கொண்டிருக்கும் இலங்கைத் தீவின் சட்டக் கட்டமைப்பானது தமிழ் மக்களுக்கு எதிராக எப்பொழுதும் வளைக்கப்படுவதுண்டு. அதே சட்டக் கட்டமைப்பிடம் தையட்டி விவகாரத்தில் தீர்வை எதிர்பார்க்கலாமா? எனவே இக்கட்டுரையின் தொடக்கத்தில் பிரதமர் ஹரிணி கூறுவதன் அடிப்படையில் கிளீன் சிறீலங்காவை தையிட்டியில் இருந்து தொடங்கலாமே?


**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா "சங்கீத சங்கமம் 2025" 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற் செல்வர் – சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு. திருமுருகன் அவர்கள் "வேர்களைத் தேடுங்கள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றார்.**

**கலைமாமணி டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. மேலதிக விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும். தொடர்புகளுக்கு ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

# டிரம்பின் கொள்கை:- இலங்கைக்குப் பாதகமா?



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் ஆட்சிக்கு வந்திருப்பது, இலங்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அச்சம் ஏற்படத் தொடங்கியிருக்கிறது.

ஏனென்றால், அவர் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பூகோள அரசியல் தொடர்பாகவும், எடுக்கின்ற முடிவுகள் அனைத்தும் அதிர்ச்சியை ஏற்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன. அவரது செயற்பாடுகள் அமெரிக்காவை மையப்படுத்தியவையாக, அமெரிக்காவின் நலன்களை மாத்திரம் மையப்படுத்தியவையாக இருப்பது தான், மிகப்பெரிய சிக்கலாக மாறியிருக்கிறது.

அமெரிக்காவுடன் இருதரப்பு வர்த்தகம் செய்வதாயின், அது இரண்டு தரப்புகளுக்கும் சார்பானதாக இருக்க வேண்டும் என்பதில் ட்ரம்ப் உறுதியாக இருக்கிறார். கனடாவுடன் அவர் தொடங்கியிருக்கின்ற வர்த்தகப் போர், இதனை அடிப்படையாகக் கொண்டது தான்.

கனடாவினால் அமெரிக்காவுக்கு ஆண்டு தோறும் 200 பில்லியன் டொலர் இழப்பு ஏற்படுவதாக ட்ரம்ப் கூறுகிறார். 2023ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையில் சுமார் 68 பில்லியன் டொலர் வர்த்தக இடைவெளி காணப்பட்டது.

அதாவது அமெரிக்காவின் இறக்குமதிகள் அதிகமாகவும், கனடாவுக்கான ஏற்றுமதிகள் குறைவாகவும் இருந்தன. இதனால் 'கனடா இலாபம் அடைகிறது, அதன் பாதுகாப்புக்கும் நாங்களே செலவிட வேண்டி இருக்கிறது' டொனால்ட் ட்ரம்ப் கருதுகிறார்.

அதன் விளைவாகவே, கனேடிய பொருட்களுக்கு 25 சதவீத வரியை விதிக்கும் திட்டத்தை அறிவித்திருந்தார். சட்டவிரோத குடியேற்றவாசிகள் பிரச்சினை மற்றும் போதைப்பொருள் ஊடுருவல் போன்றவற்றையும் அவர் காரணம் காட்டியிருந்தாலும், வர்த்தக இடைவெளியே இந்த விடயத்தில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இந்த விடயத்தை தனியே கனடாவுடன் மாத்திரம் கையாளவில்லை. அதனை உலகம் முழுவதற்கும் பிரயோகிக்க முனைகிறார். அமெரிக்காவுடன் நீண்ட காலமாக வர்த்தக கூட்டாளிகளாக, பாதுகாப்பு கூட்டாளிகளாக, அல்லது மூலோபாய கூட்டாளிகளாக இருக்கும் நாடுகள் என்று கவனத்தில் கொள்ளாமல், தனியே அமெரிக்காவுக்கான வருமானத்தையும், ஏற்றுமதி இறக்குமதியையும் மாத்திரம், கணக்கில் கொண்டு தீர்மானங்களை எடுக்க முனைகிறார் அவர்.

அவரது இந்த நிலைப்பாடு இலங்கைக்கு சாதகமான ஒன்று எனக் கருத முடியாது. கனடா, மெக்ஸிக்கோ, சீனா மீது ட்ரம்ப் அதிக வரியை அறிவித்த போது, அது இலங்கைக்கு சாதகமாக இருக்கும் என சிலர் கணிப்புகளை வெளியிட்டிருந்தார்கள்.

ஏனென்றால், இந்த நாடுகளில் இருந்து ஏற்றுமதியாகும் பொருட்களுக்கு, அதிக வரிகளை விதிக்கும் போது, இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியை அதிகரிக்க முடியும் என்றும், அங்கு குறைந்த விலையில் பொருட்களைச் சந்தைப் படுத்த முடியும் என்றும் அவர்கள் கருதினார்கள்.

அமெரிக்க சந்தைக்கும் ஐரோப்பிய சந்தைக்கும் இலங்கை மிகப்பெரிய அளவிலான ஏற்றுமதிகளைச் செய்து கொண்டிருக்கின்றது. இந்த இரண்டு சந்தைகளும், இலங்கையைப் பொறுத்த வரையில் மிக முக்கியமானவை.

அதனால் இந்த நாடுகளின் வர்த்தகச் சலுகைகளையும் வரிச் சலுகைகளையும் இலங்கை அதிகஅளவில் நம்பியிருக்கிறது. இதனைப் பயன்படுத்தி, வேறு நாடுகளில் இருந்து இந்த நாடுகளுக்கு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்ற மோசடியும் நடந்து வருகிறது.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது என்ற போர்வையில், இலங்கை தயாரிப்பு என்ற போர்வையில், அமெரிக்காவினால் அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தினால், வரி விதிக்கப்படுகின்ற நாடுகளில் இருந்து பொருட்கள் கொண்டு வரப்பட்டு, இங்கிருந்து மறு ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒரு சிக்கலும் உள்ளது.

அது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றன, இலங்கைக்கான வர்த்தக சலுகைகளை, கடுமையாக்குவதற்கும் ஒரு காரணமாக இருந்தது. இப்பொழுது இலங்கை வரிவிதிப்புகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நாடாக இருக்கப் போகிறதா என்பதை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இன்னமும் தீர்மானிக்கவில்லை.

ஆனால், அவரது கொள்கை, எல்லா வர்த்தகப் பங்காளிகளும், இருதரப்பு வர்த்தக சமநிலையை பேணுவதாக இருக்க வேண்டும் என்பதாக இருக்கிறது. அமெரிக்கா எவ்வளவு பொருட்களை இறக்குமதி செய்கிறதோ அந்தளவு பொருட்களை அந்த நாடு இறக்குமதி செய்ய வேண்டும் என்பதே அவரது கொள்கை. அதாவது, இரண்டு நாடுகளுக்கும் இடையே வர்த்தக இடைவெளி இருக்கக் கூடாது.

இந்த விடயத்தில் பல குழப்பமான சிக்கலான விடயங்கள் இருக்கின்றன. அதனை நடைமுறைப்படுத்துவதற்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதனைத் தாண்டி ட்ரம்ப் இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் உறுதியாக இருக்கிறார். அவர் இலங்கையுடனும் அதே அணுகுமுறையை கையாளுவாரேயானால் அதாவது வர்த்தக சமநிலையை பேணுவதை வர்த்தக இடைவெளி இல்லாத நிலையை உருவாக்குவதில் உறுதியான நிலைப்பாட்டை எடுத்தால் இலங்கை கடுமையான நெருக்கடியை எதிர்கொள்ளும். ஏனென்றால் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகம் சம நிலையான ஒன்று அல்ல. இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் அளவு மிக மிக அதிகம். ஆனால், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது மிக மிகக் குறைவு.

2022 ஆம் ஆண்டு இலங்கைக்கான அமெரிக்க பொருட்களின் ஏற்றுமதி 337 மில்லியன் டொலர்களாகவும், அமெரிக் காவுக்கான இலங்கையின் ஏற்றுமதி 3.4 பில்லியன் டொலர்களாகவும் இருந்தது. அதாவது 2022ல் வர்த்தக இடைவெளி 3.1 மில்லியன் டொலர்களாகும். இது 2021 ஆம் ஆண்டு விட 25 சதவீதம் அதிகம். 2023 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் நவம்பர் மாத காலகட்டத்தில் இந்த வர்த்தக இடைவெளி, 4.41 மில்லியன் 'டொலர்களாக அதிகரித்தது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் நவம்பர் மாத காலப்பகுதியில் இந்த இடைவெளி 5.24 பில்லியன் டொலர்களாக உயர்ந்தது. 2024 நவம்பர் மாதத்தில் மாத்திரம் அமெரிக்கா, இலங்கை இடையிலான வர்த்தக இடைவெளி, 502 மில்லியன் டொலர்களாக இருந்தது.

இருதரப்பு வர்த்தகம் என்று வரும் போது இது ஒரு மிகப்பெரிய வித்தியாசம் என்பதில் சந்தேகம் இல்லை. டொனால்ட் ட்ரம்பை பொறுத்த வரையில் இத்தகைய ஒரு இடைவெளியை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அவர் சமமாக வர்த்தகம் செய்ய விரும்புகின்ற ஒருவராக இருப்பதால், அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் அனைத்தினதும், வர்த்தக இடைவெளிகள் தொடர்பாக ஆராயப் போவதாக கூறியிருக்கிறார். இது இலங்கைக்கு நல்லதொரு சகுனம் அல்ல.

ஏனென்றால், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் பெறுமதிக்கு இணையாக இலங்கையினால் இறக்குமதி செய்ய முடியாது. அதை இலங்கையின் பொருளாதாரத்தினால் தாங்கிக் கொள்ள முடியாது. அதைவிட அந்தளவு பொருட்கள் இலங்கைக்குத் தேவைப்படவும் வாய்ப்பில்லை.

அமெரிக்காவின் பொருளாதாரம், பரப்பளவு, சனத்தொகை போன்றவற்றுடன் ஒப்பிடுகையில் இலங்கை மிக மிகச் சிறியது. எனவே, இந்த வகையில் ஒப்பீடு செய்து சமமான வர்த்தகத்தை மேற்கொள்வது சாத்தியம் இல்லை. அதனை அமெரிக்கா எந்தளவுக்கு புரிந்து கொள்கிறது என்று தெரியவில்லை.

ஆனால், இப்போதுள்ள இடைவெளியை பேணுவதை தொடர்ந்து அமெரிக்கா அனுமதிப்பதற்கான சாத்தியங்கள் குறைவாகவே தென்படுகிறது. அமெரிக்காவுடன் மிக நெருக்கமாக இருக்கின்ற கனடா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றையே ட்ரம்ப் தூக்கி எறிய தொடங்கி விட்டார். அவற்றுடன் தனியே பொருளாதார ரீதியான நலன்களின் அடிப்படையிலேயே செயற்படத் தீர்மானித்து விட்டார். அவற்றின் அடிப்படையிலேயே முடிவுகளை எடுத்து, வர்த்தகத்தையும் வரிகளையும் செயற்படுத்துகின்ற நிலைக்கு வந்திருக்கிறார்.

இல்லாவிட்டால் அதிக வரிகளை விதித்து, அந்த நாட்டின் பொருட்களின் இறக்குமதியை தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு முயற்சிக்கிறார். இது அமெரிக்க மக்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தினாலும், அமெரிக்காவை மிகப் பெரிய செல்வந்த நாடாக மாற்றும் என ட்ரம்ப் நம்புகிறார். அமெரிக்காவை செல்வந்த நாடாக மாற்றுவ தற்காக இலங்கையை பிச்சைக்கார நாடாக மாற்ற முடியாது.

ட்ரம்பின் கொள்கைப்படி வர்த்தகம் செய்ய இலங்கை வேண்டுமானால் இலங்கை மீண்டும் வங்கரோத்து நிலைக்குள் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும். எனவே, அமெரிக்கா பொருளாதார மற்றும் வர்த்தக ஏற்பாடுகள் தொடர்பாக எடுக்கப் போகும், முடிவுகள் இலங்கைக்கு மிக மிக முக்கியமானவை.

ஏற்கெனவே அமெரிக்காவின் நிதி உதவிகள் நிறுத்தப்பட்டு விட்டன. வர்த்தக தொடர்புகளும் நிறுத்தப்பட்டு விட்டால், இலங்கை பொருளாதார ரீதியாக பெரியளவிலான பாதிப்பை சந்திக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

"அந்தணன் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகும் அறவோரை அந்தணர் ஆவார்.

"குணம் என்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிது"

நல்ல பண்புகளாகிய குன்றின் மேல் ஏறி நிற்கும் சான்றோரின் சினத்தை ஒரு கணமே சமாளித்தல் முடியாததாகும் - குறள்

# மும்மொழிக் கொள்கையை ஏற்றால் தான் நிதி விஷத்தைச் சாப்பிட்டால் தான் சோறு போடுவோம் என்பதா?

தமிழ்நாடு அரசு மும்மொழிக் கொள்கையை ஏற்றால் தான் நிதி தருவோம் என மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான கூட்டணி அரசு நிர்பந்தம் செய்வது என்பது விஷத்தைச் சாப்பிட்டால் தான் சோறு போடுவோம் என்பது போன்றது என கவிஞர் வைரமுத்து கடுமையாக விமர்சித்துள்ளார்.

மும்மொழிக் கொள்கை திணிப்பு தொடர்பாக தமது எக்ஸ் பக்கத்தில் கவிஞர் வைரமுத்து பதிவிட்டுள்ளதாவது:



இந்தி என்ற மொழி
தன்னளவில் இயங்குவது
அதன் உரிமை
இன்னொரு
தேசிய இனத்தின் மீது
திணிக்கப்படும் போது
அது புல்லுருவி போல்
உள்ளிருந்து
தாய்மொழியின்
உயிரை உறிஞ்சிவிடும்
இந்தியின்
ஆதிக்கம் அதிகமான
மராத்தி போன்ற மொழிகளுக்கு
நேர்ந்த கதி அதுதான்
தமிழுக்கும்
அது நேர்ந்து விடக்கூடாது
என்று தான்
மும்மொழிக் கொள்கையை
மும்முரமாய் எதிர்க்கிறோம்
மும்மொழிக் கொள்கையை
ஏற்றால்தான் நிதிதருவோம்
என்பது
விஷத்தைச் சாப்பிட்டால்தான்
சோறு போடுவோம்
என்பது போன்றது
ஏற்றுக்கொள்ள முடியாது
தமிழ்நாட்டு அரசின்
நிலைப்பாட்டோடு
தமிழர்கள் கெட்டியாக
ஒட்டி நிற்கிறார்கள்
அறிஞர் அண்ணாவும்
உடன் இருக்கிறார்

மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கை மும்மொழிக் கொள்கையை மாநிலங்களில் திணிக்கிறது. இதனை தமிழ்நாடு அரசு ஏற்க மறுத்து வருகிறது. இதனால் தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய கல்வித்துறைக்கான நிதியை மத்திய அரசு தராமல் நிலுவையில் வைத்து வருகிறது.

இது தொடர்பாக அண்மையில் கருத்து தெரிவித்த மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திரன், தமிழ்நாடு அரசு மும்மொழிக் கொள்கையை ஏற்க மறுக்கிறது. அதனால் நிதியை தர மறுக்கிறோம் என பேசியது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய நிதி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் இந்தப் பேச்சுக்கு தமிழ் நாட்டில் பாஜக தவிர அனைத்து அரசியல் கட்சிகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஆளும் திமுக கூட்டணி கட்சிகள் இன்று போராட்டம் நடத்துகின்றன. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மாணவர்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றனர்.

இந்த நிலையில் கவிஞர் வைரமுத்துவும் மும்மொழிக் கொள்கை திணிப்புக்கு எதிராக தமது குரலை வெளிப்படுத்தி இருக்கிறார்.

# ஜெயலலிதாவிடம் பறிமுதல் செய்த 27 கிலோ நகை, 1526 ஏக்கர் சொத்துக்களை தமிழ்நாடு அரசு என்ன செய்யப் போகிறது?

தமிழ்நாட்டின், மறைந்த முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட தங்க நகைகள், பணம் மற்றும் சொத்து ஆவணங்கள் மூன்று டிரங்க் பெட்டிகளில் தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏகே-47 ஆயுத மேந்திய போலீசாரின் பாதுகாப்புடன், 15 பெப் 2025 மாலை பெங்களூருவில் உள்ள நீதிமன்றத்தில் இருந்து சென்னைக்கு அவை கொண்டு வரப்பட்டன.

கடந்த 1996ஆம் ஆண்டில் ஜெயலலிதாவிடம் இருந்து இவை கைய கப்படுத்தப்பட்டன. அவை, 36வது கூடுதல் சிவில் மற்றும் செஷன்ஸ் நிதிபதி ஹெச்.எஸ்.மோகன் உத்தரவின் கீழ், இப்போது தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

வைரக் கற்கள், மரகதங்கள், மாணிக் கங்கள் பதிக்கப்பட்ட நகைகள் உள்பட 27 கிலோகிராம் தங்க நகைகள், மூன்று வெள்ளிப் பொருட்கள் ஆகியவை கையகப்படுத்தப்பட்டவற்றில் அடக்கம்.

ரூ.59,870 மற்றும் ரூ.1,60,514 மதிப்புள்ள பழைய ரூபாய் நோட்டுகள் (அப்போதைய ரூபாய் நோட்டுகள்), 10 கோடியே 18 லட்சத்து 75 ஆயிரத்து 591 ரூபாய் (ரூ.10,18,78,591.67) மதிப்பிலான நிரந்தர வைப்பு நிதி (2023இன்படி) ரசீதுகள் ஆகியவையும் தமிழ்நாடு காவல் துறை குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இவற்றை உள்துறை இணை செயலாளர் ஜே.ஆன் மேரி ஸ்வர்ணா தலைமையிலான தமிழக அதிகாரிகள், சிறப்புப் புலனாய்வுப் பிரிவு எஸ்.பி. விமலா, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் மற்றும் பிற அதிகாரிகளிடம் நீதிமன்றம் ஒப்படைத்தது.





ஒப்படைக்கப்பட்ட சொத்து ஆவணங்களில் சென்னை, காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருப்பத்தூர், தூத்துக்குடி ஆகிய இடங்களில் அமைந்துள்ள 6 நிறுவனங்களுக்குச் சொந்தமான 1,526 ஏக்கர் நிலத்தின் சொத்துகளின் ஆவணங்களும் அடக்கம். ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில் இந்த உத்தரவு கடந்த 2014ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளை என்ன செய்வது என்பதை முடிவு செய்வது தமிழக அரசின் பொறுப்பு என்று நீதிமன்றம் கூறியுள்ளது. அதாவது, சொத்துகளை மதிப்பிட்டு ஏலத்தில் விற்று பணத்தை மீட்டெடுக்கலாம் அல்லது கருவூலத்திற்கு அனுப்பலாம்,' என்று சிறப்பு அரசு வழக்கறிஞர் கிரண் எஸ்.ஜவாலி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

'இந்த வழக்கில் மக்களின் உணர்ச்சிகள் பெருமளவு சம்பந்தப்பட்டு இருப்பதாலும், இந்தப் பொருட்கள் சட்டவிரோத சொத்துகள் என அறிவிக்கப்பட்டு, அதற்கேற்ப தமிழக அரசு பறிமுதல் செய்ய உத்தரவிடப் பட்டு இருப்பதாலும், கையகப்படுத் தப்பட்ட நிலங்களை என்ன செய்வது என்று தமிழக அரசே முடிவு செய்வது சரியாக இருக்கும்,' என்று நீதிமன்ற உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

அதோடு அவற்றை என்ன செய்யலாம் என்பதற்குச் சில வழிகளையும் நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது.

அதாவது, 'இந்த நிலங்கள், பொது நோக்கங்களுக்காகவோ, வளர்ச்சிக் கான நிலங்களாகவோ அல்லது நிலமற்ற மக்களுக்கு வழங்கவோ பயன்படுத்தப்படலாம். இல்லையேல், அந்த நிலங்களை விற்று அரசு நிதி திரட்டவும் பயன்படுத்தலாம்,' என்று உத்தரவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் நகைகள் மற்றும் நிலங்களை ஏலம் விடலாம் எனவும் அந்த வருமானத்தைப் பொது நோக்கத்திற்காகப் பயன்படுத்தலாம் எனவும் நீதிபதி மோகன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கின் உண்மைகளையும், நீதியையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு இந்த வருவாயை மாநிலம் முழுவதும் உள்ள குழந்தைகளின் ஆரம்பக் கல்விக்குத் தேவையான உள்கட்டமைப்புகளைக் கிராமப்புறங்களில் உருவாக்கப் பயன்படுத்தும்' என்று தான் நம்புவதாகவும் அவர் கூறினார். அரசியலமைப்புச் சட்டத்தைப் பின்பற்றி, மக்களின் நலனுக்காகத் தங்கள் கடமைகளை எச்சரிக்கையாகவும், கவனமாகவும் அதிகாரத்தில் இருப்பவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்ற செய்தியை இது தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு அனுப்பும்,' என்றும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

வி.கே.சசிகலா மற்றும் இளவரசியிடம் இருந்து வசூலிக்கப்பட்ட 20 கோடியே 20,000 ரூபாய் அபராதத் தொகையில், கர்நாடக அரசுக்கு ஐந்து கோடி ரூபாயும், விசாரணை நடத்துவதற்கும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கும் ஏற்பட்ட செலவுகளுக்காகக் கூடுதலாக எட்டு கோடி ரூபாயும் வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

சொத்துக் குவிப்பு வழக்கில் தனது தண்டனையை உறுதி செய்த கர்நாடக உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து ஜெயலலிதா மே 11, 2015 அன்று உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். அந்த மேல் முறையீட்டு மனுவில் உச்சநீதி மன்றம் முடிவெடுப்பதற்கு முன் பாகவே அவர் டிசம்பர் 6, 2016இல் காலமானார்.

அவரது சொத்துகளை ஏலம் விடவோ, விற்கவோ சிறப்பு பொது வழக்கறிஞரை நியமிக்கக் கோரி வழக்கறிஞர் டி நரசிம்மமூர்த்தி சிறப்பு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அதைத் தொடர்ந்து, சிறப்பு பொது வழக்கறிஞர் 2024இல் நியமிக் கப்பட்டு, இறுதி உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டன. நன்றி:- பிபிசி

Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2




## மணமகள்

| ID | | Details |
|---|---|---|
| ID08121182 | F | 27yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka |
| ID08121175 | F | 35yrs, 5' , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka |
| ID08121174 | F | 34yrs, 5'2" , Single , Aswini , 9 Sevai , Bachelors.. , Work , Sri Lanka |
| ID08121169 | F | 26yrs, 5'1" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. Executive.. , Sri Lanka |
| ID08121167 | F | 46yrs, 5'4" , Divorced , Not Specified , N/A Sevai , High School , House Wife , Sri Lanka |
| ID08121165 | F | 34yrs, 5'2" , Single , Kettai , 6 Sevai , Masters Degree , Researcher , Canada |
| ID08121164 | F | 26yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , Sri Lanka |
| ID08121159 | F | 25yrs, 5'4" , Single , Rohini , 2 Sevai , Bachelors.. , Tba , Canada |
| ID08121156 | F | 29yrs, 5'10" , Single , Chathayam/sadayam , 8 Sevai , Bachelors.. , Senior Consultant.. , Canada |
| ID08121154 | F | 26yrs, 5'3" , Single , Thiruvaathirai , 8 Sevai , Diploma , Nurse , Canada |
| ID08121153 | F | 27yrs, 5'5" , Single , Uthiram , 11 Sevai , Bachelors.. , Tba , United Kingdom |
| ID08121152 | F | 33yrs, 5'6" , Single , Punarpoosam , 12 Sevai , Ph.D , Doctor , United States |
| ID08121151 | F | 27yrs, 5'4" , Single , Aayilyam , N/A Sevai , High School , Jewel Shop , Canada |
| ID08121149 | F | 28yrs, 5'4" , Single , Chithirai , 3 Sevai , Bachelors.. , Financial. , Canada |
| ID08121145 | F | 33yrs, 5'6" , Divorced , , Sevai , Bachelors.. , Businesswoman , Netherlands |
| ID08121131 | F | 35yrs, 5'4" , Single , Chithirai , N/A Sevai , Bachelors.. , Project Coordinator , Canada |
| ID08121130 | F | 33yrs, 5'7" , Single , Punarpoosam , 5 Seva , Bachelors.. , Data , Canada |
| ID08121125 | F | 26yrs, 5'3" , Single , Punarpoosam , 1 Seva , High School , Admin Clerk.. , Canada |
| ID08121122 | F | 33yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Researcher , Canada |
| ID08121119 | F | 46yrs, 5'5" , Single , Uthiraadam , 10 Sevai , Bachelors.. , Law Clerk , Canada |
| ID08121116 | F | 30yrs, 5'4" , Divorced , , Sevai , Masters Degree , , India |
| ID08121100 | F | 26yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Account , Sri Lanka |
| ID08120721 | F | 23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka |
| ID08120718 | F | 29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada |
| ID08121099 | F | 21yrs, 5'4" , Single , Pooram , 4 Sevai , High School , Cashier , Canada |
| ID08120695 | F | 28yrs, 5'4" , Single , Swaathi , 5 Sevai , Bachelors.. , Financial. , Canada |
| ID08121095 | F | 30yrs, 5'4" , Divorced , , Sevai , Bachelors.. , Business , India |
| ID08121115 | F | 24yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Accounting , Canada |
| ID08121111 | F | 37yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka |
| ID08121110 | F | 33yrs, 5'3" , Single , Moolam , 12 Sevai , Masters Degree , Doctor , Canada |

## மணமகன்



| ID | | Details |
|---|---|---|
| ID08121183 | M | 36yrs, 5'10" , Single , Anusham , 5 Sevai , Diploma , Business , Sri Lanka |
| ID08121181 | M | 35yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , TTC , Canada |
| ID08121180 | M | 49yrs, 5'6" , Single , Aswini , 9 Sevai , Masters Degree , Engineer , Sri Lanka |
| ID08121178 | M | 30yrs, 6'2" , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Software engineering , Sri Lanka |
| ID08121176 | M | 28yrs, 5'6" , Single , Moolam , 7 Sevai , Postgraduate.. , Television.. , Sri Lanka |
| ID08121171 | M | 26yrs, 6' , Single , Swaathi , N/A Sevai , Bachelors.. , Engineer , Canada |
| ID08121168 | M | 42yrs, 5'10" , Divorced , Punarpoosam , N/A Sevai , Diploma , Own Company , Canada |
| ID08121155 | M | 28yrs, 5'8" , Single , Thiruvaathirai , 6 Sevai , High School , Resturent , Canada |
| ID08121146 | M | 41yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , High School , Employ , Canada |
| ID08121146 | M | 41yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , High School , Employ , Canada |
| ID08121146 | M | 41yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , High School , Employ , Canada |
| ID08121144 | M | 29yrs, 6' , Single , Poorattathi , Sevai , Ph.D , Researcher , United States |
| ID08121143 | M | 27yrs, 5'6" , Single , Poosam , N/A Sevai , Masters Degree , IT Specialist , Canada |
| ID08121142 | M | 32yrs, 5'4" , Single , Kettai , 3 Sevai , High School , Printers , Sri Lanka |
| ID08121140 | M | 38yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Electrical.. , Canada |
| ID08121136 | M | 41yrs, 5'7" , Single , Rohini , N/A Sevai , Diploma , Accountant , Sri Lanka |
| ID01211348 | M | 29yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , Bachelors.. , Marketing , Canada |
| ID08121127 | M | 28yrs, 5'5" , Single , Thiruvaathirai , N/A Sevai , Bachelors.. , Tims , Canada |
| ID08121120 | M | 32yrs, 5'7" , Single , Aswini , N/A Sevai , Diploma , Tourisum , Sri Lanka |
| ID08121118 | M | 35yrs, 5'8" , Single , Thiruvonam , 10 Sevai , Masters Degree , Manager Reporting.. , Canada |
| ID08121101 | M | 36yrs, 5'7" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Driver , Canada |
| ID08121092 | M | 31yrs, 5'4" , Single , Aayilyam , N/A Sevai , High School , Driver , Canada |
| ID08120734 | M | 36yrs, 5'7" , Annulled , Bharani , 5 Sevai , Masters Degree , Product manager , Sri Lanka |
| ID08120733 | M | 27yrs, 5'7" , Single , Anusham , N/A Sevai , Bachelors.. , Research Technician , United States |
| ID08121090 | M | 39yrs, 5'7" , Divorced , Poosam , N/A Sevai , High School , Ware house.. , Canada |
| ID08120730 | M | 29yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering , Sri Lanka |
| ID08121088 | M | 35yrs, 5'9" , Single , Pooram , 1 Sevai , Postgraduate.. , Marketing.. , Sri Lanka |
| ID08121105 | M | 34yrs, 5'6" , Single , Uthiraadam , N/A Seva , Masters Degree , Engineer , Canada |
| ID08121104 | M | 35yrs, 6'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Lawyer , Canada |
| ID08121103 | M | 34yrs, 5'11" , Single , Aayilyam , 11 Sevai , Postgraduate.. , Asst Manager , Canada |

# தையிட்டி விகாரைப் போராட்டமும் வடக்கின் அரசியற் களமும்!

தையிட்டியில் புதிதாக அமைக்கப் பட்டிருக்கும் திஸ்ஸ ராஜமகா விகாரையை அகற்றக் கோரி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி யின் தலைவர் கஜேந்திரகுமார் போரா ட்டமொன்றை ஆரம்பித்துள்ளார். தொடக்கத்தில் இரண்டு ஆண்டுகளு க்கு முன் கஜேந்திரகுமாருக்கு நெரு க்கமான பத்து இருபது பேருடன், சிறிய வட்டத்திலிருந்த போராட்டம் இப்பொழுது ஈ.பி.டி.பியினர் உட்படப் பல்வேறு தரப்பினர் கலந்து கொள் கின்ற அளவுக்குச் சற்றுப் பெரிய வட்டமொன்றாக விரிந்துள்ளது.

ஆனாலும் இந்தப் போராட்டம் வெற்றி யளிக்குமா? இது புதிய அரசாங்கத்து க்கு நெருக்கடியைக் கொடுக்குமா? இந்தப் போராட்டத்தைத் தேசிய மக்கள் சக்தி எப்படிக் கையாளப் போகிறது? வடக்கில் தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கைக் கட்டுப்படுத் துவதற்கு இது உதவுமா? இந்தப் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழ ரசுக் கட்சி உட்பட ஏனைய தரப்பின் முழுமையான ஆதரவு கிட்டுமா? மத விவகாரத்துடன் இந்த விடயம் இணைந்துள்ளதால், தேசிய ஒருமைப் பாட்டை இது நெருக்கடிக்குள்ளாக் குமா? அந்த வகையில் உணர்ச்சி கரமான எதிர்விளைவுகளை உண்டாக் குமா? என்று பல கேள்விகளை இது எழுப்புகிறது.

முதலில் இதொரு சட்டப்பிரச்சினை யாகும். எப்படியென்றால்

1இந்த விகாரை அமைந்துள்ள காணி தனிப்பட்ட உரிமையாளர்களுக்குச் சொந்தமானது. அதாவது மக்களு டைய வாழிடமாகும். ஆகவே அவர் களுடைய காணியில் அவர்களுடைய அனுமதியைக் கோராமல் விகாரையை அமைத்தது தவறு. பௌத்த அடை யாளங்கள், தொன்மையான எச்சங்கள் அங்கே இருப்பதாக விகாரையை அமைக்கும் தரப்பு வாதிட்டால், ஏற்கனவே அதற்குரிய ஆதாரங்களை முன் வைத்து வர்த்தமானி அறிவித்த லைச் செய்து காணி உரிமையாளர் களிடமிருந்து காணியை அரசாங்கத் தின் மூலமாகப் பொறுப்பேற்றிருக்க வேண்டும். அதற்குப் பின் உரிய முறைப்படி அரசாங்கம் காணியை விகாரை அமைக்கின்ற தரப்புக்கு விதி முறைப்படி வழங்கியிருக்க வேண்டும். இதெல்லாம் விதிமுறைகளின்படி நடந்திருந்தால் தான் சட்டத்துக்குட் பட்டதாக இருந்திருக்கும். ஆனால் இவை எதுவுமே நடக்கவில்லை.

2.அப்படித்தான் அரசாங்கம் முறைப்படி நடந்து விகாரையை அமைப்பதற்கான அனுமதியைக் கொடுத்திருந்தாலும் அதற்குப் பின் விகாரையை அமைப்ப தற்கான அனுமதியை குறித்த பிரதேசத் துக்குரிய பிரதேச சபையிடமோ, நகரசபையிடமோ குறித்த தரப்புப் பெற்றிருக்க வேண்டும். அப்படி எது வும் நடக்கவில்லை.

3.இந்த விடயம் தொடர்பாக யாழ்ப் பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் நல்லாட்சிக் காலத் திலிருந்தே விவாதிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத் தின்படி குறித்த விகாரையைக் கட்டும் பணிகள் நிறுத்தப்பட வேண்டும் என்றே வலியுறுத்தப்பட்டுள்ளது. அதையும் மீறியே விகாரையின் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளன. ஆகவே, இங்கும் அரசாங்கத் தின் நடைமுறை விதிகள் மதிக்கப் படாமல் மீறப்பட்டுள்ளன. அதாவது, ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானங் களை நாட்டின் உயர் பீடத்தினர் மதிக்காமல் மீறி நடப்பதென்பது, அதனுடைய இயங்கு திறனையும் அடிப்படையையும் செயலிழக்க வைப் பதாகும். இது தற்போதைய ஒருங்கி ணைப்புக் குழுவின் தீர்மானங்களுக்கு முரணான மீறிய செயல்கள் தொடர்ந் தும் நடப்பதற்கான முன்மாதிரியை இது உருவாக்குவதாகவே அமை யும்.



ஆக மொத்தத்தில் மூன்று இடங்களில் சட்டத்துக்கு முரணான முறையில் விகாரை அமைக்கப்பட்டுள்ளது என்பது நிரூபணமாகிறது. என்பதால், இதற்கான பொறுப்பை அரசாங்கமும் விகாரையை அமைத்த தரப்பினரும் ஏற்க வேண்டும். பொறுப்பை ஏற்றுக் கொள்வதென்பது, அதற்கான நிவாரண த்தை அளித்தலாக இருக்க வேண்டும். அத்துடன், தமது தவறுக்காக தண்டனையைப் பெற வேண்டும்.

ஏனென்றால், அரசாங்கமானது எப் போதும் சட்டத்தையும் அதன் விதி களையும் மதித்து நடந்து தன்னை முன்னுதாரணமாக்க வேண்டும். அப் போது தான் மக்களும் அதைப் பின் தொடர்வர். அரசாங்கமே அதை மீறி னால் மக்களும் அதை மீறவே முயற்சிப்பர். அரசன் எவ்வழியோ குடி கள் அவ்வழி.

இங்கே அடிப்படைப் பிரச்சினைகளாக இருப்பது —

1.யுத்தகாலத்தில் படையினரால் ஆக்கிர மிக்கப்பட்ட தனியாருக்குச் சொந்த மான (மக்களின் குடியிருப்பு மற்றும் பயிர்ச்செய்கைக்கான) காணிகள், யுத்தம் முடிந்து 15 ஆண்டுகளுக்குப் பின்னரும் மக்களிடம் மீளளிக்கப்பட வில்லை. இன்னும் அவை படை யினரின் கட்டுப்பாட்டிலுள்ள பாது காப்பு வலயங்களாகவே உள்ளன. இந்த நிலை வடக்குக் கிழக்கு முழுவதிலும் உண்டு.

2.பாதுகாப்பு வலயங்களாக இருப்பதால் தான் அவற்றில் இவ்வாறான பிரச் சினைகள் உருவாகின்றன. வடக்குக் கிழக்கில் இதற்குப் பல உதாரணங்கள் உண்டு. யுத்தம் முடிந்து, விடுதலைப் புலிகள் முற்றாகவே அழித்தொழிக்கப் பட்ட பின்னர், எதற்காகப் படையினர் தனியார் காணிகளில் நிலை கொண்டி ருக்க வேண்டும்? எதற்காக படை வலயங்கள் இன்னும் இருக்கின்றன? பாதுகாப்புத் தரப்பினருக்கு இன்னமும் அச்சமும் சந்தேகமும் பதட்டமும் நீங்கவில்லை என்றால், அவர்கள் தனியார் காணிகளை விட்டு நீங்கி, அரச காணிகளில் நிலை கொள்ளலாம். அது தான் இயல்பு நிலையை உரு வாக்குவதற்கு வாய்ப்பாகும். அரசாங்க த்தின் கொள்கையும் நடவடிக்கை யிலும் ஒன்று யுத்த காலத்திலிருந்து மக்களை அமைதிக் காலத்துக்கு, நம்பிக்கையான சூழலுக்கு, இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வருதலாகும்.

அப்படியிருக்கும் போது அதற்கு மாறாக மக்களின் காணிகளில் படை வலயங்கள் தொடருமாக இருந்தால் அமைதியும் சந்தேகமும் நம்பிக்கை யீனமும் பகையுணர்ச்சியுமே மேலோங் கும். அதுவே இங்கே நிகழ்கிறது. அதனுடைய அடையாளமே இந்தப் போராட்டமும் இப்போது உருவாகி யுள்ள நெருக்கடிச் சூழலுமாகும். இதைக் கவனப்படுத்த வேண்டிய பொறுப்பு சமாதான விரும்பிகள் அனைவருக்கும் உரியது. கூடவே தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்கள் அனைத்துக்கும் அனைத்து அரசியற் கட்சிகளுக்கும் உண்டு.

3.யுத்தத்திற்குப் பிறகு மகிந்த ராஜ பக்ஸ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆட்சி என 15 ஆண்டுகள் கடந்துள்ளது. இப் பொழுது அநுர குமார திசநாயக்கவின் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக் காலம். எல்லா ஆட்சிக் காலத்திலும் அமைதி நல்லிணக்கம் தேசிய ஒருமைப்பாடு, சமாதானம் பற்றிப் பேசப்படுகிறது. ஆயிரம் வார்த்தை களை விட, நூறு பிரகடனங்களை விட, ஒரு செயல் போதும் நம்பிக் கையை உருவாக்குவதற்கு. அதையே அரசாங்கம் செய்ய வேண்டும். ஆம், அநுரவின் (தேசிய மக்கள் சக்தி) அரசாங்கம் செய்ய வேண்டும். இது மாற்று அரசாங்கம். மக்களுடைய ஆட்சி. மக்களுக்கான ஆளும்தரப்பு என்பதால், அதற்கமைய துணிகரமாக மாற்று நடவடிக்கையாக அமைதிக் கான, இயல்புச் சூழலின் உருவாக்கத் துக்கான வழிகளை உருவாக்க வேண்டும். இல்லையென்றால், முந்திய ஆட்சிக்கும் இப்போதுள்ள ஆட்சி க்கும் இடையில் என்ன வேறுபாடு? என்ற கேள்வியே மக்களிடம் எழும்.




4. ஆகவே அரசாங்கத்தின் பாதுகாப்புக் கொள்கை தொடர்பாக விஞ்ஞான பூர்வமான நிலைப்பாடு இங்கே முக்கிய மாகிறது. இது தனியே பாதுகாப்பு அமைச்சின் தீர்மானமாக மட்டும் அமையாது. அரசியற் தரப்புடன் இணைந்த தீர்மானமாக இருக்க வேண்டும். ஏனென்றால், அரசியல் நெருக்கடிகளே (அரசியற் தவறுகளே) பாதுகாப்பு நெருக்கடிகளை பாது காப்புப் பிரச்சினைகளை பாதுகாப்பு அச்சுறுத்தல்களை உருவாக்கியது. ஆகவே அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் போது அதற்கான சூழலை உருவாக்கும் போது அரசி யற் தவறுகளைச் சீராக்கும்போது பாதுகாப்புப் பிரச்சினைகள் இல்லா தொழிந்து விடும். எனவே இதைக் குறித்து அரசாங்கம் (ஜனாதிபதி) ஆழமாகச் சிந்திக்க வேண்டும். சரி யாகச் சிந்தித்துச் செயற்பட்டால், தேவையற்ற பாதுகாப்புச் செலவீனமும் குறையும் இந்த மாதிரிப் போராட்டங் களும் அரசியல் நெருக்கடிகளும் உரு வாகாது.

5.வடக்குக் கிழக்கில் படைகள் தொட ர்ந்தும் நிலை கொண்டிருப்பதும் படை வலயங்கள் தொடர்ந்தும் இருப் பதும் வடக்குக் கிழக்கு வாழ் மக்களுக்கு மட்டுமல்ல, முழு இல ங்கை மக்களுக்கும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையீனத்தையே ஏற்படுத் துகிறது. இன்னும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்கள் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை என்ற உணர்வே சிங்கள மக்களுக்கும் சர்வதேச சமூக த்துக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் ஏற்படுகிறது. அது அரசாங்கத்தின் தோல்வியையே குறிக்கிறது.அதாவது இலங்கை இன்னும் முழுமையான அமைதிக்குத் திரும்பவில்லை என்பதோடு, போரில் இன்னும் அரசுக்கு முழுமையான வெற்றி கிடைக்க வில்லை. பாதி வெற்றியையே படைத்

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



தரப்பு பெற்றுள்ளது. இன்னமும் அது தன்னுடைய அச்ச நிலையிலிருந்து மீளவில்லை. அதனால்தான் இந்தப் பாதுகாப்பு வலயங்களும் படைக் குவிப்புமாகும் என்பதாக.

6.யுத்தம் முடிந்த பின்னும் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்து, அபகரித்து வைத்திருப்பது, மக்களுக்கு அரசாங் கம் இழைக்கின்ற அநீதி என்பதோடு, மீள் குடியேற்ற விதிகளுக்கு முரணா னதுமாகும். கூடவே அந்த மக்களை மீள் நிலைக்குத் திரும்ப விடாது, அவர்களுடைய கிராமங்களை மீளுயிர்ப்புச் செய்ய விடாது அரசே தடுப்பது, அரசியற் தவறாகும். அத்துடன், மக்களுடைய உரிமையை மறுதலிக்கும் ஒரு செயற்பாடுமாகும்.

இவ்வாறு பல விதமான அரசியற் தவறுகளின் கூட்டு விளைவாகவே தையிட்டி விகாரைப் பிரச்சினை உள்ளது. தையிட்டிப் பிரச்சினை மட்டுமல்ல, அதைப்போலுள்ள ஏனைய பல பிரச்சினைகளும் உள்ளன. இவற்றைத் தீர்ப்பதற்கு அரசியல் வழிமுறையே சரியானது. அரசியல் உபாயங்கள் பெருமளவுக்குக் கை கொடுக்காது. ஏன் அரசியல் உபாயங் கள் கைகொடுக்காது என்றால், எதன் பொருட்டும் அரசாங்கம் மக்களுடன் சூதாட முடியாது. சூதாடக் கூடாது.

இப்போதுள்ள சூழலில், இந்தப் பிரச்சி னைக்கும் இது போன்ற பிரச்சினை களுக்கும் தீர்வு காண்பதற்குச் சில வழிமுறைகளே உண்டு.

இங்கே அரசாங்கம் தெளிவாகவும் வெளிப்படையாகவும் ஒரு நிலைப் பாட்டை எடுக்க வேண்டும். அதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

1.கடந்த காலத் தவறுகளைச் சீராக்கும் நடவடிக்கையின் ஓரம்சமாக இந்த விடயங்களைச் சட்ட விதிமுறைகளின் படி அணுகுவது, தீர்வு காண்பது. இதற்குத் தயக்கம் இருந்தால் அரசாங்கம் எதையுமே செய்ய முடி யாது. தவறுகள், தவறுகள் தான்.

2.இணக்கமான முறையில் சம்மந்தப் பட்ட தரப்புகளோடு (பாதிக்கப்பட்ட மக்களோடு) பேசி உடன்பாடு காண் பது. (22ம்பக்கம் பார்க்க)

# இலங்கையில் சுமார் 8700 கோடி ரூபா மின் திட்டத்தை அதானி நிறுவனம் கைவிட்டது ஏன்?



இலங்கையின் மன்னார் பகுதியில் முன்னெடுக்கப்பட இருந்த காற்றாலை மின்சார திட்டத்தைக் கை விட அதானி நிறுவனம் தீர்மானித்துள்ளது. இதன் பின்னணியில், இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்த இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாக உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்திய மற்றும் இலங்கை தரப்பினர் இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்த தீர்மானித்துள்ளனர்.

## காற்றலை மின் திட்டத்தை கைவிடத் தீர்மானம்

மன்னாரில் முன்னெடுக்க திட்டமிடப்பட்ட காற்றாலை மின்சார திட்டத்தைக் கைவிட தீர்மானித்துள்ளதாக இந்தியாவின் அதானி நிறுவனம் அறிக்கையொன்றின் ஊடாக அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்திலிருந்து வெளியேறவுள்ளதாக இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் அர்ஜீன் ஹேரத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தினால் இந்தத் திட்டத்தை மீள் ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால் இந்தத் திட்டத்தில் இருந்து வெளியேறத் தீர்மானித்ததாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பகுதியில் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் சுமார் 8,700 கோடி) முதலீட்டில் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

மன்னார் காற்றாலை மின்சார திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பல அனுமதிகள் கிடைத்துள்ள போதலும், சுற்றாடல் ஆய்வு அறிக்கை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அதானி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் உயர்நீதி மன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளமையினால் இந்த அறிக்கை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, திட்டத்தில் இருந்து வெளியேறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்தத் திட்டம் குறித்து அரசாங்கத் தரப்புடன் கடந்த இரண்டு வருட காலமாக கலந்துரையாடல்களை நடத்தியிருந்ததாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 484 மெகாவாட் திட்டமாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவுடன் 14 தடவைக்கும் அதிகமான கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கை, வரிவிலக்குக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் உள்ளிட்ட அனுமதிகளைப் பெற்றுக் கொள்கின்றமை தொடர்பில் அனைத்து விடயங்களும் முழுமைப்படுத்தப் பட்டுள்ளதாக அதானி கிரீன் நிறுவனத்தின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் காற்றாலை மின்சார திட்டம் தொடர்பான கட்டமைப்பு உள்ளிட்ட முன்னோடி நடவடிக்கைகளுக்காக 5 மில்லியன் அமெரிக்க டாலருக்கு அண்மித்த தொகை செலவிடப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. தமது நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழு அதிகாரிகள் மின்சக்தி அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியதாகவும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த உத்தேச திட்ட யோசனை தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழு மற்றும் திட்டக் குழு மீண்டும் நியமிக்கப்பட்டமையினால், இலங்கையின் சுயாதீன உரிமைக்கு மதிப்பளித்து அந்தத் திட்டத்தில் இருந்து வெளியேற தமது நிறுவனத்தின் பணிப்பாளர் குழு தீர்மானித்துள்ளதாக அதானி நிறுவனம் குறிப்பிடுகின்றது.

தமது நிறுவனம் எப்போதும் இலங்கைக்காக நிற்கும் என்றும், மீண்டும் அபிவிருத்தி வாய்ப்புக்காக இலங்கை அரசாங்கம் விடுக்கும் அழைப்பை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் நிறுவனத்தின் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா?

அதானி கிரீன் நிறுவனம், மன்னார் காற்றாலை மின்சார திட்டத்தில் இருந்து வெளியேறுகின்றமை தொடர்பில் இதுவரை மின்வலு அமைச்சுக்கு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை என அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.டி.எம். உதயங்க ஹேமபால தெரிவிக்கின்றார்.

எமக்கு இதுவரை அறிவிக்கவில்லை. அதானி நிறுவனம் முதலீட்டு சபைக்கு இந்த அறிவிப்பை அனுப்பியுள்ளது. நானும் அந்தக் கடிதத்தைக் கண்டேன். அது முதலீட்டு சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம். முதலீட்டு சபையினால் எமக்கு



அறிவிக்கப்பட வேண்டும். இல்லையென்றால், அந்த நிறுவனத்தினால் எமக்கு அறிவிக்கப்பட வேண்டும். இந்த விடயம் தொடர்பில் அதிகாரப்பூர்வமாக எதையும் கூற முடியாது' என்று அமைச்சின் செயலாளர் கூறுகின்றார்.

## இலங்கையில் அதானி குழுமத்தின் மற்ற முதலீடுகளின் நிலை என்ன?

மன்னார் மற்றும் பூநகரி பகுதிகளில் 500 மெகாவாட் காற்றாலை மின்சார திட்டத்தை முன்னெடுக்க அதானி நிறுவனம் இலங்கை அரசாங்கத்துடன் கையெழுத்திட்டுள்ளது. மேலும், கொழும்பு துறைமுக நகர் கொள்கலன் முனையத்தை ஒன்றிணைந்த வகையில் அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காக இலங்கை அரசாங்கத்துடன் அதானி நிறுவனம் 2021ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி கையெழுத்திட்டது.

இந்தத் திட்டத்தின் ஊடாக 51 சதவீத பங்குகள் அதானி நிறுவனத்திற்கு கிடைக்கப் பெறவுள்ளன. அதானி நிறுவனத்தின் இலங்கை முகவரான ஜோன் கீல்ஸ் நிறுவனத்திற்கு 34 சதவீத பங்குகளும், இலங்கை துறைமுக அதிகார சபைக்கு 15 சதவீத பங்குகளும் உரித்தாகின்றன. இந்தத் திட்டத்திற்காக 700 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்யப்படவுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கையில் முந்தைய ஆட்சியாளர்களால் அதானி நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் புதிய அரசாங்கம் பதவியேற்ற பிறகு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

## அதானி மின் திட்டத்திற்கு எழுந்த எதிர்ப்புகள்

அதானி நிறுவனத்தினால் இலங்கையில் முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்ட காற்றாலை திட்டத்திற்குக் கடும் எதிர்ப்புகள் எழுந்தன. குறிப்பாக மன்னார் பகுதியில் உத்தேசிக்கப்பட்ட திட்டத்திற்கே இவ்வாறு எதிர்ப்புகள் எழுந்திருந்தன. வலசைப் பறவைகளின் வருகைக்கு இந்தத் திட்டத்தின் ஊடாகப் பாரிய பாதிப்புகள் ஏற்படுவதாக சூழலியலாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

மன்னார் வழியாகவே இந்த வலசைப் பறவைகள் நாட்டிற்குள் வருகை தருவதாகக் கூறப்படுகின்றது. 30 நாடுகளைச் சேர்ந்த பறவைகள் இலங்கைக்குள் வருகை தருவதுடன், ஓராண்டுக்கு சுமார் 15 மில்லியன் பறவைகள் வருவதாகக் கூறப்படுகின்றது. அத்துடன், மன்னார் கரையோரப் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பிபிசி தமிழிடம் அந்தப் பகுதி மீனவர்கள் குறிப்பிட்டனர்.

இது குறித்து பிபிசி தமிழிடம் பேசிய போது எந்தவொரு காரணத்திற்காகவும் காற்றாலை மின்சார திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் அமைக்க இடமளிக்க மாட்டோம் என்று கூறினார் மன்னார் மாவட்ட மீனவ சங்கத்தின் தலைவர் ராஜா குரூஸ்.

காற்றாலை திட்டத்தினால் மக்கள் பல்வேறு வகையில் பாதிக்கப்படுகின்றமையினால், இந்த திட்டத்திற்கு தாம் எதிர்ப்பை வெளியிடுவதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவரான அருட்தந்தை சந்தியோ மார்கஸ், பிபிசி தமிழிடம் சில மாதங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை அரசாங்கத்தினால் ஏற்கெனவே 30 காற்றாலைகள் பொருத்தப்பட்டுள்ளன. அது பல்வேறு பாதிப்புகளை மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தியுள்ளது. மக்கள் எதிர்நோக்கிய சிரமங்களை அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளோம். அதனை நிவர்த்தி செய்வதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கு பின்னர் காற்றாலை மின் திட்டத்தை அமல்படுத்தக்கூடாது என கேட்டுக்கொண்டுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

நன்றி:- பிபிசி

# தையிட்டி:- அபகரிப்புக்கு அரச அங்கீகாரம்!

- அழகு குணசீலன் -

மூக்கு இருக்கும் வரையும் சளி இருக்கும் என்பார்கள். 77 ஆண்டு கால சுதந்திரத்திற்கும், 75 ஆண்டு கால தமிழ்த் தேசியத்திற்கும் இடையிலான தொடர்பும் இது போன்றது தான்.

இந்த நிலையில் தையிட்டி விகாரை விவகாரம் மூக்கும் சளியும். சளிக்கு என்ன வைத்தியம் என்பதில் கஜேந்திர குமாருக்கும், இராமலிங்கத்திற்கும் தலையைச் சுற்றுகிறது.

தையிட்டி விகாரையை இடிப்பதா? இல்லை நஷ்ட ஈட்டுடன் வேறு இடத்தில் காணியா? தீர்வு என்ன?

இந்த கேள்விக்கு இரண்டு விடையும் பொருந்தும். ஆனால் இரண்டுக்கும் கீறினால் பெ(க)யில். இடிப்பு என்றால் பொன்னம்பலம் வாத்தியாரிடம் பாஸ், இராமலிங்கம் வாத்தியாரிடம்



பெயில். மாறிக் கீறினால் எதிர்மாறு. விகாரை அமைக்கப்பட்ட இடம் மக்களுடையது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அந்த வகையில் நிச்சயமாக அந்த மக்களுக்கு அதற்குரிய நஷ்ட ஈடு, மற்றும் காணிகளை வழங்க வேண்டிய தேவை இருக்கிறது. இது இராமலிங்கம். முன்னுக்கு சரி பின்னுக்கு பிழை. இந்தக் கூற்று குற்றச் செயல் ஒன்றை பௌத்த அமைப்பு ஒன்று செய்தது என்பதற்காக சட்ட நடைமுறையில் இருந்து நழுவுதல்.

இனி மேல் இந்த நாட்டில் இனவாதம், மதவாதத்திற்கு இடமில்லை. என்று சொல்லும் ஜே.வி.பி. அமைச்சர் இராமலிங்கம் தனது சுய தீர்ப்பில் இன, மத வாதங்களையே பேசுகிறார்.

சிறுபான்மை தேசிய இனத்தின் அடிப்படையான காணி உரிமையை நிராகரித்து, சட்டத்தை மீறிய பேரினவாத காணி அபகரிப்பை சமரசம் செய்வதே இன, மதவாதம். தையிட்டி விகாரைக்கு போடப்பட்ட அடித்தளம் வெறும் கல்லும், மண்ணும், சீமெந்தும் குழைத்ததல்ல. சிங்கள, பௌத்த பேரினவாதத்தையும் சேர்த்துக் குழை



த்து போடப்பட்ட அடித்தளம். அதை இலங்கை தேசியத்திற்குள் புதைக்கிறார் அமைச்சர்.

தீர்வுக்கு சிங்கள மக்களிடம் கருத்து கேட்கும் அரசியல் சமரசம் போன்றது.

கஜேந்திரகுமாரோ சட்டரீதியில் விகாரை அகற்றப்பட வேண்டும் என்று கோருகிறார். சட்டப்படி அபகரிக்கப்பட்ட தனியார் காணியில் அமைக்கப்பட்ட கட்டிடம் அப்புறப்படுத்தப்பட வேண்டும். அந்த கட்டிடம் விகாரை என்பதால், மதத் தலைவர்கள் அமைப்புக்கள் சட்ட

இன்று கொடி பிடிக்கும் தமிழ்த்தேசிய மக்கள்முன்னணியினரும் கூட அன்று கண்களை மூடிக் கொண்டார்கள். இப்போது பழைய அரசியல் கடனைத் திருப்பிக் கொடுக்க போராடுகிறார்கள். இது உள்ளூராட்சி தேர்தலுக்கான யுக்தி என்று கூறுகிறார் அமைச்சர் இராமலிங்கம் வேறு எதை அவரிடம் இருந்து எதிர்பார்க்க முடியும்? அவரின் யுக்தி அது.

சட்டமீறல் செயற்பாடு ஒன்றுக்கு சட்டத்திற்கு அப்பால் மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண அரசுதரப்பு முயற்சி செய்கிறது. சட்டம், நீதி ஒழுங்கை அரசியல் தலையீடுகள் இன்றி சுதந்திரமாக இயங்க அனுமதிப்போம் என்ற அரசாங்கத்தின் தலையீட்டு சமரசம் வேறு இடத்தில் காணியும், நஷ்ட ஈடும்.

நல்லாட்சியில், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் எதிர்ப்பு இன்றி அதாவது மறைமுக ஆதரவுடன் இடம்பெற்ற இந்த திட்டத்தில் கஜேந்திரகுமார் அநுர அரசுக்கு மட்டும் அசௌகரியத்தை ஏற்படுத்தவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழரசுக்கட்சிக்கும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளார்.

தற்போது சமரசவாதிகள் தென்னில

ஒருவர் - அமைப்பு, இன்னொருவரின் சொந்த காணியை அடாத்தாக பிடித்து தனக்கு விரும்பியவாறு கட்டிட நிர்மாணம் செய்ய முடியுமா? ஆம். செய்யலாம் அதற்கு வேறு இடத்தில் காணியும், நஷ்டஈடும் கொடுத்தால் போய்ச்சு. இதில் என்ன பிரச்சினை என்று ஒரு தவறான முன்மாதிரிக்கு வழி வகுக்கிறார் இராமலிங்கம்.

ஐந்து இலட்சம் மக்களிடம் கேட்கப் போகிறாராம். குற்றச்செயலுக்கு மக்களிடம் கேட்டு முடிவெடுப்பது என்றால் சட்டம் நீதித்துறை எதற்கு? அபகரிப்பை ஏற்றுக' கொள்ளும் அவர் அதற்கான சட்ட நடவடிக்கையை தவிர்த்து சமரசம் செய்கிறார். காணிச் சொந்தக்காரர்களின் கோரிக்கை இருக்க அதில் சம்பந்தப்படாத மக்களிடம் கருத்துக் கேட்பது இனப்பிரச்சினை

த்தை மீறியிருந்தாலும் சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்களே தாங்கள் கூறியதை பொய்யாக்குகிறார்கள்.

1990 காலப்பகுதியில் போரினால் இடம் பெயர்ந்த மக்களின் தனியார் காணியில் இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இது அன்றைய நல்லாட்சி அரசாங்க வீடமைப்பு அமைச்சர் சஜீத்பிரேமதாசாவின் 1125 விகாரைகளை அமைக்கும் சசுனட்ட அருண திட்டத்தின் ஒரு பகுதி. இன்றைய எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதியும் தனது தந்தையுமான ரணசிங்க பிரேமதாசாவின் 94வது பிறந்த தினத்தையொட்டி இத் திட்டத்தை அறிவித்திருந்தார்.

அப்போது நல்லாட்சியில் கோலோட்சியவர்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர்.

ங்கையில் உள்ள இந்து ஆலயங்கள் குறித்து குறிப்பிட்டு உளவியல் அச்ச உணர்வை தமிழ்மக்களுக்கு ஏற்படுத்தும் மூளை சுத்திகரிப்பு ஆரம்பித்துள்ளது. இதை அமைச்சர் இராமலிங்கம் செய்கிறார். என்.பி.பி. யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர்கள் பாவம். தமிழ்த்தேசியமும், சிங்கள பௌத்த தேசியமும் அவர்களை போட்டு மத்தளமாக அடிக்கிறது.

தையிட்டி விகாரையை தோண்டினால் பேரினவாத, தமிழ் குறுந்தேசிய புதையல்கள் கிடைக்கும். ஆனால் கிளீன் சிறிலங்காவிலும் இந்த விடயத்தில் தோண்டுவாரில்லை. இதைத் தோண்டி என்ன? சாராயத் தவறணையைத் தோண்டினால் கைச்செலவுக்கு காசு, பதவியாவது கிடைக்கும்.

இலங்கையில்... பிரச்சினையும் அரசி. யல்..தீர்வும் அரசியல்!

# தம்புள்ள நகரில் இருந்த 30 வருட பத்திரகாளி அம்பாள் கோவில் ஒரே இரவில் இடித்து அழிக்கப்பட்டது தெரியுமா?

30ஆண்டுகள் பழமையான வரலாற்றை கொண்டிருந்த தம்புள்ள நகரிலிருந்து பத்ரகாளி அம்மன் கோவில் 2013 ஆம் ஆண்டு முற்றிலுமாக இடிக்கப்பட்டது. சட்டவிரோதமாக நிர்மாணிக்கப் பட்டிருந்ததாக பௌத்த பிக்குகள் முறைப்பாடுகள் செய்த நிலையில் ஒரே இரவில் ஆலயம் முழுமையாக இடிக் கப்பட்டது

கோவிலை மூடுவதற்கு முன்னர் சில மதச் சடங்குகள் செய்ய முயற்சித்த ஆலய நிர்வாகம் கால அவகாசம் கேட்ட போதும் அவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு ஆலயம் இடிக்கப்பட்டிருந்தது


அதே நாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் என்கின்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் திருட்டுத்தனமாக சட்டவிரோதமாக அமைக்கப் பட்ட தையிட்டி விகாரையை சட்ட பூர்வமாக முயலுகின்றார்கள்

அதாவது கோட்டாபய ராஜபக்சே அதிகாரத்திலுருந்த போது ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் கட்டப்பட்ட 100 அடி உயரமான தூபி (Stupa) மற்றும் மைத்திரி-ரணில் காலத்தில் ஆளுநராகவிருந்த ரெஜினோல்ட் குரே தலைமையில் கட்டப்பட்ட விகாரை (Vihara) ஆகிய இரு சட்ட விரோத கட்டுமானங்களையும் நியாயம் செய்கின்றார்கள்

குறிப்பாக சிங்கள நிலப் பரப்புகளில் நிறுவப்பட்டுள்ள ருவன்வெலிசாய (338 அடி), ஜெதவனாராமய (400 அடி) அபயகிரி (246 அடி), மிரிசவெட்டி (197 அடி), தூபாராமய (66 அடி) ஆகிவற்றுக்கு இணையாக தமிழ் நிலப்பரப்பில் சட்டவிரோத ஆக்கிரமிப்பு சின்னமாக 100 அடியில் தூபியை நிறுவி உரிமை கோருகின்றார்கள்


இது போதாதென்று தனியாருக்கு சொந்தமான காணிகளில் சட்டவிரோதமாக நிறுவப்பட்டுள்ள மேற்படி கட்டுமானங்களுக்கு பௌத்த சாசன அமைச்சு ஊடக நிதி உதவி பெற்று பெற்று இருக்கின்றார்கள்

இதன் தொடர்ச்சியாக தற்போது இந்த விகாரை அமைந்துள்ள பகுதியில் 406 சிங்களக் குடும்பங்கள் வசித்ததாகவும்



அந்த அடிப்படையில் தமிழ் மக்கள் தங்களுடைய காணி என்று உரிமை கோருவதை ஏற்க முடியாது என இராணுவத்தினர் நாடாளுமன்ற மேற்பார்வை குழுவில் நியாப்படுத்துகின்றார்கள்


இது போதாதென்று பௌத்த சாசன




அமைச்சு அந்த நிலம் முழுமையாக விகாரைக்குரியது என வாதிடுகின்றது ஆனால் நியத்தில் எந்தக் காலத்திலும் அங்கு பௌத்த கட்டுமானங்கள் இருந்தற்குரிய எந்தவித ஆவணங்களும் கிடையாது.

(22ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும் ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். தொழில், வியாபார போட்டிகள் இருந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது. உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. தெய்வ வழிபாடு அவசியம் தேவை.





ரிஷபராசி அன்பர்களே! கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல் தீரும். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகி சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். எதிர்பார்த்த பணவரத்து திருப்தி தரும். கடன் பிரச்சனை கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும்.




மிதுனராசி அன்பர்களே! அனுகூலம் ஏற்படும். வீண்செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் கடன் விவகாரங்களில் கவனமாக செயல்படுவது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும்.




கடகராசி அன்பர்களே! வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற மனக்கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். உததியோகத்தில் சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு.





சிம்மராசி அன்பர்களே! தேவையற்ற மன சஞ்சலம் நீங்கும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சனை வராமல் தடுக்கலாம். திடீர் பண தேவை உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம். நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது.




கன்னிராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். முதலீடுகளில் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. வீண் வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் சாதுூரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை லாபகரமாக செய்வர். தேவையான பண உதவியும் கிடைக்கும். எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்வது நன்மை தரும்.





துலாம் ராசி அன்பர்களே! தடைபட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். மனதில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அதிர்ஷ்டம் உண்டாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தாலும் கொள்கைக்காக பாடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை விட்டு வாடிக்கையாளர் தேவை அறிந்து செயல்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவர். சக ஊழியர்கள் மேலதிகாரிகளால் நன்மை உண்டாகும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதையும் சமாளிக்கும் திறமை உண்டாகும். எதிர்பாலினரிடம் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். மருந்து, ரசாயனம் போன்ற தொழில்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும்.







தனுசுராசி அன்பர்களே! தடைகள் அனைத்தும் நீங்கும். வீண் குற்றச்சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பணத்தேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் திறமை உண்டாகும். அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது.




மகரராசி அன்பர்களே! தடைகள் அனைத்தும் அகலும். வேலை பளுகாரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் ஏற்பட்டு சரியாகும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது.புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். சக ஊழியர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நன்மை




கும்பராசி அன்பர்களே! எல்லாவற்றிலும் சாதகமான பலனே கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும். லாபம் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். புதிய வேலை சாதகமான பலன் கிடைக்கும்




மீனராசி அன்பர்களே! காரியங்கள் நன்றாக முடியும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் ஆர்டர் கிடைப்பதில் தாமதம் போன்றவை ஏற்பட்டாலும், தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் வேலைபளு, கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம். எல்லா பிரச்சனைகளும் சரியாகும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# தம்புள்ள நகரில் இருந்த 30 வருட பத்திரகாளி..

(21ம் பக்கத் தொடர்ச்சி) அதே நேரம் அந்த பகுதி தமிழ் மக்களின் நிலம் என உறுதிப்படுத்தி அதற்குரிய ஆதன உறுதிகளை கூட திரு கஜேந்திர குமார் பாராளுமன்றத்தில் முன்வைத்து இருக்கின்றார் இந்த நிலையில் தற்போது தமிழ் ஆளுநர் திரு வேத நாயகன் ஊடாக சட்டவிரோத ஆக்கிரமிப்பை சட்டபூர்வமாக முயலுகின்றார்கள்

சில வாரங்களுக்கு முன் சட்டபூர்வ மற்ற ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட்டு இருப்பதாக அறிவித்த திரு வேதநாயகன் தற்போது சட்ட விரோத விகாரையை நியாயம் செய்கின்றார் தனது அதிகாரத்தை தக்க வைக்க பௌத்த சிங்கள அதிகாரத்திற்கு துணை போகின்றார் சட்டவிரோதமான முறையில் ஒரு மதில் காட்டினாலே அகற்ற அப்பாவி பொது சனம் மீது சட்டங்களை ஏவி விடும் இவர்கள் சட்டவிரோத விகாரையை எப்படி நியாயப்படுத்துகின்றார்கள் என தெரியவில்லை

சட்டவிரோத கட்டுமானங்களை நியாயப்படுத்தி ஒருபோதும் இன நல்லிணக்கத்தையோ மாற்றத்தையோ ஏற்படுத்த முடியாது அதே நேரம் சட்ட விரோத விகாரையை ஏற்றுக் கொண்டால் தையிட்டியில் மற்றுமொரு சிங்கள குடியேற்றத்தை தவிர்க்க முடியாது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்

நாவற்குழியில் நிர்மாணிக்கப்பட்ட சட்டவிரோத விகாரையை தேச வீடமைப்பு அதிகார சபையூடாக சட்ட பூர்வமாக்கி அந்த சூழலில் குடியேற்றப்பட்ட சிங்கள குடியேற்றத்தை காணி உரிமம் பெற்று கொடுத்து சட்டபூர்வமாக்கி இருப்பது போல தையிட்டியில் இராணுவம் வாதிடுவது போல சிங்களவர்களை குடியேற்றுவார்கள்.

அதாவது தையிட்டி ஒரு போதும் முடிவாக இருக்க போவதில்லை தொல்லியல் திணைக்களம் பௌத்த ஆலயங்கள் இருப்பதாக உரிமை கோரும் காங்கேசன்துறை பலாலி , நாவற்குழி, நெடுந்தீவு, வல்லிபுரம் ஊர்காவத்துறை, வலிகாமம், மட்டுவில், நிலாவரை, சுன்னாகம் உடுவில், புலோலி கந்தரோடை,உட்பட்ட பகுதிகள் தோறும் நிறுவ முயற்சிக்கும் பௌத்த ஆக்கிரமிப்புகளுக்கான ஆரம்பமாக தையிட்டி இருக்கும்.

# தையிட்டி விகாரைப் போராட்டமும் வடக்கின்

(19ம் பக்கத் தொடர்ச்சி) இனிமேல் இதுபோன்ற தவறுகள் மீள நிகழாமைக்கு உத்தரவாதமளிக்க வேண்டும்.அதற்கான சட்ட உத்தரவாதத்தை அளிப்பது அவசியமாகும்.

3.அல்லது, நாட்டிலே பாரபட்சமும் பிரிவினையும் நிச்சயமாக உண்டு. படைத்தரப்பின் மூலமாக ஒடுக்குமுறை மேற்கொள்ளப்படுகிறது. வடக்குக் கிழக்கு மக்களின் அனைத்து உரிமைகளையும் வாழ்வையும் தீர்மானிக்கும் பொறுப்புப் படைத்தரப்புக்கும் பௌத்த மேலாதிக்க சக்திகளுக்குமே உண்டு என வெளிப்படையாகச் சொல்லி விடுவது. அப்படிச் சொல்லி விட்டால், பிரச்சினையே இல்லை. அதற்குப் பிறகு அங்குள்ள மக்கள் அதை எப்படி எதிர்கொள்வது என்பதைப் பற்றிச் சிந்திப்பார்கள். இப்படிச் சமாதானத்தைப் பேசிக் கொண்டு, ஏமாற்றப்படும் சமாதானத்துக்குப் பின்னால் நிற்க வேண்டிய அவசியமிருக்காது.

தேசிய மக்கள் சக்திக்கு இதொரு சவாலான விடயமே. யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக வடக்குக் கிழக்கில் வரலாற்று வெற்றியைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி, உள்ளூராட்சி மன்றத்திலும் அந்த வெற்றியைப் பெறுவதற்கு வியூகங்களை வகுக்கிறது. அதற்கு இந்தப் போராட்டங்களும் இந்தப் பிரச்சினைகளும் நெருக்கடியைக் கொடுக்கின்றன. இன்னொரு பெரிய பிரச்சினை, இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதாகும். இவை இரண்டையும் அது எப்படிக் கையாளப்போகிறது?

தையிட்டிப் போராட்டத்தை நீடிக்க விடும் உபாயத்தைப் பின்பற்றினால், காணாலாக்கப்பட்டோரின் போராட்டத்தைப் போல, நாட்கள் நீளுமே தவிர, தீர்வு கிட்டாத தீர்வு காணப்படாத ஒரு நிலையை ஏற்படுத்தலாம். அது போராடும் மக்களின் தீவிரத்தைக் குறைவாக்கி, அவர்களைக் களைப்படைய வைக்கும். அரசியற் கட்சிகள் ஓய்ந்து ஓரமாகி விடும் என அரசாங்கம் உபாயமாக யோசிக்கக் கூடும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மூன்று வகையில் தன்னை முன்னிலைப்படுத்துவதற்குச் சமகாலத்தில் முயற்சிக்கிறார்.

1.அரசியல் பேச்சுவார்த்தைகளில் தன்னுடைய தலைமைத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வது. இதற்காகவே அவர் ஏனைய கட்சிகளைக் கூட்டுச் சேர்ப்பதாகும்.

2.தையிட்டிப் போராட்டத்தை முன்னெடுப்பதன் வழியாக மக்களுக்காகப் போராடும் தரப்பாகத் தன்னை மக்களிடம் காட்டிக் கொள்வது. இதிலும் தன்னையே தலைமைச் சக்தியாக நிரூபித்துக் கொள்வது.

3.தேசிய மக்கள் சக்திக்கு வடக்கில் வலுத்திருக்கும் ஆதரவுத் தளத்தை நிர்மூலமாக்குவது. குறிப்பாக உள்ளூராட்சி மன்றுகளுக்கான தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை செல்வாக்கை மட்டுப்படுத்துவது அல்லது இல்லா தொழிப்பது.

4.இனப்பிரச்சினை, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் தேசிய ஒருமைப்பாட்டின் அடிப்படையில் தீர்வு காணும் தேசிய மக்கள் சக்தியின் முயற்சியையும் நிகழ்ச்சி நிரலையும் நெருக்கடிக்குள்ளாக்குவது.

5.தேசிய மக்கள் சக்தியின் வினைத்திறனைப் பரிசோதனைக்குள்ளாக்குவது.

6.மெய்யான அர்த்தத்தில் மீள் குடியேற்றம், படை விலகல், படை ஆதிக்கத்தைக் குறைப்பு, அரசியல் தீர்வைக் குறித்த ஆர்வத்தைத் தூண்டுதல் போன்றவற்றை உந்தித் தள்ளுவது.

7. பௌத்த மயமாக்கலை தடுத்து நிறுத்துதல்.

8.வடக்கில் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்கள், ஆதரவாளர்களுக்கும் நெருக்கடியை உருவாக்குதல் அல்லது அவர்களைப் பொறுப்புக்கூற வைத்தல்.

எப்படியோ இந்த வாரங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமே முன்னிலை பெறும் அரசியல் அடையாளமாக வடக்கில் உள்ளார். அதைக் கடந்து செல்வது தேசிய மக்கள் சக்திக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் முன்னுள்ள சவாலாகியுள்ளது.

கடந்த மாதம் வல்வெட்டித்துறையில் அநுரவுக்காக அரசாங்கத்துக்கு ஆதரவாகத் திரண்டனர் மக்கள். இந்த மாதம் அதை அண்மித்த மயிலிட்டிக் கடற்கரையில் கஜேந்திரகுமாருக்கு ஆதரவாக அரசாங்கத்துக்கு எதிராகத் திரள்கின்றனர் மக்கள். தமிழ் மக்கள் பிரித்தாளப்படுகிறார்களா? பிரிந்துள்ளனரா?

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

# Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# தனியார் காணியில் விகாரை கட்டியது சட்டவிரோதம்!

## யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட சமாதான ஆணைக்குழு தெரிவிப்பு!



தனியார் காணியில் விகாரை கட்டியமை சட்டவிரோதமான செயற்பாடு எனக் கூறும் யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு, விகாரை கட்டப்பட்டதை வன்மையாக கண்டித்ததோடு காணி உரிமையாளருக்கு நீதி கிடைக்குமா என்பது சந்தேகமே என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்துவந்த தனியார் காணியில் அவர்களது அனுமதியின்றி இராணுவத்தின் பாதுகாவலில் பௌத்த விகாரை (திஸ்ஸவிகாரை) கட்டப்பட்டமையை யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இராணுவம் போர்க்காலத்தில் கையகப்படுத்திய ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில் உள்ள வீடுகள், இந்துக் கோயில்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் பலவற்றை இடிப்பதற்கும் தரை மட்டமாக்குவதற்கும் இவர்களுக்கு யார் உத்தரவு கொடுத்தது?

அண்மையில் புதிய ஜனாதிபதி மக்களுடைய காணிகள் மக்களுக்கே வழங்கப்படும் என்று வழங்கிய வாக்குறுதியின்படி மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படுமா?

நீதிமன்றத் தீர்ப்புக்கள் மதிக்கப்படாது கட்டுமானப் பணிகள் பாதுகாப்பு படையினரின் அனுசரணையில் நடக்கும் போது (குருந்தூர் மலை விவகாரம்) தையிட்டி விகாரை விவகாரத்தில் காணி உரிமையாளர்களுக்கு நீதி கிடைக்குமா என்பது சந்தேகமே.

ஆனால் தையிட்டி விகாரை விவகாரம் இது போன்றே வேறு இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள இடங்களில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இதனை இடித்து அகற்றினால் பிரச்சினை தீருமா என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும். இடிப்பதால் தென்னிலங்கையில் மதக் கடுங்கோட்பாட்டுவாதிகளால் பிரச்சினை இன்னமும் மோசமாகும் என்பதே யதார்த்தம். அத்துடன் மத நல்லிணக்கம் எட்டாக்கனியாகி விடும். எனவே, நீதிமன்றத் தீர்ப்புக்களை எல்லா இடங்களிலும் எல்லா மக்களும் (பாதுகாப்புப் படையினர் உட்பட) மதித்து நடப்பது சாத்தியப்படக்கூடிய வழிமுறை என்று நாம் கருதுகிறோம்.

வடக்கு, கிழக்கில் போர் முடிவுக்கு வந்து 16 வருடங்களாகியும் இன்னமும் பெருமளவில் நிலை கொண்டிருக்கும் பாதுகாப்புப் படையினர் அங்குள்ள மக்களின் பாதுகாப்பையும் அடிப்படை மனித உரிமைகளையும் மதித்துச் செயற்படும்போது அது இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றகள நிலையை உருவாக்கும் என குறிப்பிட விரும்புகிறோம் என்றுள்ளது.

# தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் துப்பாக்கிச் சூடு:- மத்திய அரசுக்கு எதிராகப் போராட்டம்

காரைக்கால் மாவட்டம் கிளிஞ்சல் மேடு பகுதியில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி கைது செய்தனர். இலங்கை அரசின் தொடர் துப்பாக்கிச் சூடு மற்றும் தமிழ்நாட்டு மீனவர்களை காக்க தவறிய மத்திய பாஜக அரசை கண்டித்து காரைக்கால் மீனவர்கள் பெண்கள் தண்டவாளத்தில் படுத்து ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



காரைக்கால் மாவட்டம் கிளிஞ்சல் மேடு பகுதியில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி கைது செய்தனர். இது தமிழகம் மற்றும் புதுச்சேரி மீனவர்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில்காரைக்கால் மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய இலங்கை கடற்படையை கண்டித்து காரைக்கால் மாவட்ட 11 மீனவ கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் காரைக்கால் ரயில் நிலையத்தில் வேளாங்கண்ணி ரயில் முன்பு மீனவர்கள் குடும்பத்தோடு தண்டவாளத்தில் படுத்து போராட்டம் நடத்தியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தங்களது கோரிக்கைகளுக்கு இது வரை அரசு நடவடிக்கை எடுக்காததால் 200க்கும் மேற்பட்ட மீனவர்கள் தங்களது குடும்பத்தினருடன் காரைக்கால் ரயில் நிலையத்தில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். .தண்டவாளத்தில் தலை வைத்து படுத்து மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது



# புன் சிரிப்பு மாறாத பாரதி!

- கருணாகரன் -

தமிழ்ப் பரப்பில் பத்திரிகையாளராக அறியப்பட்ட இராஜநாயகம் பாரதி காலமாகி விட்டார். பாரதிக்கு வயது 63. மரணம் ஒருவரை எடுத்துச் செல்வதற்கு வயதில்லை. ஆனாலும் பாரதியின் மரணம் எதிர்பாராதது. அவருடைய அண்ணன் பரதனின் மரணமும் அப்படித்தான் நடந்தது. பரதன் இறக்கும் போது அவருக்கு வயது, 61. பரதன், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியமான போராளியாக இருந்தவர். 1980களின் முற்பகுதியிலிருந்து 1990களின் நடுப்பகுதி வரையில் புலிகளோடு இணைந்து செயற்பட்டவர். இலங்கை — இந்திய இராணுவங்கள் மற்றும் முரணியக்கங்களின் எதிர்ப்பு நிறைந்த சூழலில் தப்பிப் பிழைத்து, லண்டனில் தன் துணைவியோடு நடந்து சென்று கொண்டிருக்கும் போது மரணத்தை சந்தித்தவர்.

புலிகளுடைய தொலைக்காட்சியான 'நிதர்சனம்', வானொலியான 'புலிகளின் குரல்' ஆகியவற்றை உருவாக்கி, அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பாளராக நீண்டகாலம் இருந்தவர் பரதன்.

பாரதி, பரமேஸ்வராக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் படிப்பை முடித்த கையோடு ஊடகத் துறைக்குள் நுழைந்து விட்டார். 1980களின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'ஈழமுரசு'பத்திரிகையில் இணைந்து ஆசிரியர் பீடத்தில் பணியாற்றினார். அது போராட்டம் உச்சமான வளர்ச்சியை அடைந்து கொண்டிருந்த காலகட்டம். பல இயக்கங்களும் தலையிலும் மனதிலும் முரண் அரசியலைச் சுமந்து கொண்டு குறுக்கும் மறுக்கும் திரிந்து கொண்டிருந்தன. வேறுபாடின்றி இயக்கங்களை வேட்டையாடிக் கொண்டிருந்தது இலங்கை இராணுவம். இரண்டுக்குமிடையில் ஊடகவியலாளராகச் செயற்படுவதும் வாழ்வதும் சவாலாகியிருந்த நாட்கள் அது.

அப்படியான நாளொன்றில், குண்டு வெடிப்புப் பற்றிய செய்தி ஒன்றுக்காக யாழ்ப்பாணக் கச்சேரிக்குச் சென்றிருந்த போது படையிரால் கைது செய்யப்பட்டார் பாரதி. விசாரணைகளின் பின்னர் படையினரால் விடுவிக்கப்பட்டுச் சில காலம் ஈழமுரசுவில் பணியாற்றினாலும் அங்கே தொடர்ந்து இருக்க முடியவில்லை. அதற்குப் பிறகு அப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகிய 'முரசொலி' பத்திரிகையில் இணைந்தார். ஆரம்ப கால ஊடகத்துறையில் பாரதிக்கு வழிகாட்டிகளாகவும் ஊக்கிகளாகவும் எஸ். திருச்செல்வம், சிறி நடராஜா, கிறிஸ்ரி ரஞ்சன், சுப்பிரமணியம் போன்றோர் இருந்தனர். முரசொலியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது தான் பாரதி ஒரு விபத்தில் சிக்கித் தன்னுடைய கைகளில் ஒன்றை இழந்தார்.

வடக்கு கிழக்கு மாகாணசபையின் நிகழ்வொன்றுக்காக வடக்கிலிருந்து ஊடகவியலாளர்களை இந்திய அமைதிப்படை (IPKF) கூட்டிச் சென்றபோது ஏற்பட்ட வாகன விபத்து அது. அதனால், இந்திய இராணுவம் உடனடியாகவே யாழ்ப்பாணத்துக்கு பாரதியைக் கொண்டு வந்து, மேலதிக சிகிச்சைக்காக தமிழ்நாட்டுக்கு விமானத்தில் எடுத்துச் சென்றிருந்தது. அங்கே சிகிச்சை முடித்து இலங்கைக்குத் திரும்பிய பாரதி, தொடர்ந்து சில காலம் முரசொலியில் பணியாற்றினார். 1990இல் முரசொலியும் நெருக்கடிகளைச் சந்தித்த போது பாரதி அங்கிருந்து கொழும்புக்குச் சென்றார்.

கொழும்பில் வீரகேசரி, தினக்குரல் ஆகியவற்றின் ஆசிரிய பீடத்தில் ஏறக்குறைய 30ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார் பாரதி. இந்தக் காலகட்டத்தில் பாரதியின் செயற்பாடுகள் கொழும்பு மையம் என்பதற்கு அப்பால், தமிழ்ச் சமூகம் என்றே இருந்திருக்கிறது. குறிப்பாக வடக்குக் கிழக்குத் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சி, அடையாளம், அதனுடைய பாதுகாப்பு போன்றவற்றைக் கவனத்திற் கொண்டிருந்தார். இதற்கான அடிப்படைகளான அரசியல், இலக்கியம், வரலாறு, பொருளாதாரம், பண்பாடு போன்றவற்றை தன்னுடைய ஊடகச் செயற்பாட்டிலும்



தான் செயற்பட்ட ஊடகங்களின் தளவாக்கத்திலும் முன்னிலைப் பேசுபொருளாக்கினார்.

தினக்குரல் பத்திரிகையின் வாரப் பதிப்புக்கான ஆசிரியராக இருந்த போது 'புதிய பண்பாடு' என்ற தலைப்பில் பாரதி உருவாக்கியிருந்த சிறப்புப் பகுதி பாரதியின் ஆளுமை, ஆற்றல், கரிசனை, அவருடைய விரிந்த தொடர்பாடற் பரப்பின் அடையாளமாகும். இதற்காகத் தினக்குரலில் பலரையும் எழுத வைத்தார். பலரையும் என்பதன் பொருள், பல்வேறு தரப்பினரையும். பல்வேறு சிந்தனைப் போக்குடையோரையுமாகும். சிவசேகரம் (கோகர்ணன்) யதீந்திரா, அக்கரையூரான், காலகண்டன் (சி.கா. செந்தில்வேல்), பெரிய ஐங்கரன், கா. சிவத்தம்பி எனப் பலரும் எழுதினார்கள்.

பாரதியின் அரசியல் நிலைப்பாடு தமிழ்த்தேசியத்தைச் சார்ந்ததாக இருந்தாலும் மாற்றுக் கருத்தாளர்களுக்கும் இடமளித்திருக்கிறார். அந்த இடம் ஏதோ ஓரத்தில், சம்பிரதாயத்துக்காக வழங்கப்பட்டதல்ல. பாரதியின் விரிந்த மனம், விரிந்த சிந்தனையின் அடிப்படையிலானது. இதற்குக் காரணம், அவருடைய தந்தையார் சு. இராஜநாயகத்தின் அரசியலும் அவர் உருவாக்கிய பாரம்பரியமுமாகும்.

இராஜநாயகம் கணித ஆசிரியராக இருந்தாலும் குறிப்பிடத்தக்க எழுத்தாளராக இருந்தவர். 1950களில் ஈழத்திலிருந்து உருவாகிய புதிய இலக்கிய அடையாளமான 'மறுமலர்ச்சி' இதழ்க் குழுவில் இருந்தவர். அதில் சிறுகதைகளை எழுதியவர். பின்னர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். இராஜநாயகத்தின் இந்த அம்சங்களும் அரசியல், சமூக, இலக்கிய ஊடாட்ட உணர்வும் பிள்ளைகள் மூவரிலும் தொடர்ந்தன, பிரதிபலித்தன.

மூத்த மகனான பரதன், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஊடகப் பிரிவில், திரைப்பட இயக்குநராக, இலக்கிய இயக்கத்தைக் கட்டியெழுப்பும் ஆர்வமுள்ளவராக, ஒளிப்படக் கலைஞராக எனப் பல தளங்களில் மிளிர்ந்தார்.

பாரதி அச்சு மற்றும் இணைய ஊடகத்தில் தன்னை வெளிப்படுத்தி நிலைப்படுத்தினார். கூடவே எழுத்தாளர்கள், கலைஞர்களையெல்லாம் பாரதி மதித்தார். அவர்களுக்குரிய இடத்தை அளித்தார். பெரும்பாலான ஊடகவியலாளர்களைப் போலன்றி, இலக்கிய நிகழ்வுகள், உரையாடல்கள், கலைஞர் சந்திப்புகள், திரைப்பட விழாக்கள் போன்றவற்றிலும் பாரதியைக் காணலாம். அதோடு பாரதி பன்முக வாசிப்பாளராகவும் இருந்தார். தினக்குரலில் அவர் வெளியிட்ட பல ஆளுமைகளுடனான நேர்காணல்கள் அவருடைய வாசிப்பின் வழியாக உருவான மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்தவையே. பாரதியைப் போல இன்னொரு பன்முக வாசிப்பாளரும் பல தரப்புத் தொடர்பாளருமாக இருந்தவர் 'தராகி' சிவராம். சிவராமுக்கு அடுத்ததாக அத்தகையதொரு இலக்கியப் பரிச்சயம், மொழிப் பரிச்சியம் உள்ளவரென்றால், அது பாரதியே. இதனால் இலங்கைக்குள் மட்டுமன்றி, புலம்பெயர் நாடுகளிலுள்ளோரும் தமிழ்நாடு, மலேசியா போன்ற நாடுகளில் உள்ளோரும் பாரதியுடன் உறவைக் கொண்டிருந்தனர்.

பாரதியின் பன்முகத் தன்மையினாலும் பன்முகப் பார்வையினாலும் சிவசேகரம், செந்தில்வேல், கா.சிவத்தம்பி, யதீந்திரா போன்றோர் தொடர்ந்து எழுதி வந்தனர். அதிலும் மாற்றுக் கருத்தாளராகக் கடுந்தொனியில் எழுதும் சிவசேகரம் (கோகர்ணன்), ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக எழுதி வருகிறார் என்றால் அது பாரதி உருவாக்கிய ஜனநாயக வெளியின் வெளிப்பாடேயாகும்.

வீ. தனபாலசிங்கம், வி. தேவராஜா, இ. பாரதி, பூபாலரட்ணம் சீவகன் போன்ற மிகச் சிலரே பன்மைத் தன்மையுடன் தமிழ் ஊடகப் பரப்பில் இயங்கியோர், இயங்கி வருவோர். இவர்கள் ஒவ்வொருவருக்குமான அரசியற் பார்வைகளும் நிலைப்பாடுகளும் வெவ்வேறாக இருந்தாலும் அதற்கப்பால், ஊடக அடிப்படை, ஊடக நெறிமுறை, ஊடக தர்மம் போன்றவற்றின் அடிப்படையில் ஜனநாயக விழுமியத்தோடு செயற்படுகின்றவர்கள். என்பதால் தான் இவர்களுடைய கால ஊடகங்கள் பரிமளிப்பாக இருந்தன. 'புதிய பண்பாடு' பக்கங்கள் ஏறக்குறைய சரிநிகர் போன்றதொரு தோற்றத்தை உருவாக்கியது. சரிநிகரின் அடிப்படையும் நோக்கும் வேறாக இருந்தாலும் ஆழமான வாசிப்புக்குரிய வெளியையும் உள்ளீட்டையும் கொண்டிருந்தது. அதற்கு நிகராக இன்னொரு தளத்தில் தினக்குரல் (புதிய பண்பாடு) இருந்தது.

பாரதி, தேவராஜ், தனபாலசிங்கம், சீவகன் போல, தமிழ் ஊடகப் பரப்பில் செயற்படும் பெரும்பாலானவர்கள் இருப்பதில்லை. அவர்கள் தமது அரசியல் விருப்பு வெறுப்புகளை ஊடகங்களில் அப்படியே வெளிப்படுத்துவர், பிரதிபலிப்பர். என்பதால் தான் அவர்கள் பணியாற்றுகின்ற ஊடகங்கள் உட்சுருங்கியவையாக — சற்றே பெரிய துண்டுப் பிரசுரங்களாக மாறியுள்ளன. பாரதி போன்றவர்கள் வெளிவிரிவை நோக்காகவும் விருப்பாகவும் கொண்ட ஊடகவியலாளர்கள். இந்த அஞ்சலிக் குறிப்புக் கூட அந்த அடிப்படையிலான மதிப்புக்கான மரியாதையுடன் மதிப்புடன் எழுதப்படுகிறது.

பாரதியும் தனபாலசிங்கமும் இணைந்த கலவையின் வெளிப்பாடாக அவர்களுடைய காலத்தில் வெளிவந்த தினக்குரலைப் பார்த்தால் இந்தக் குறிப்பு எதைச் சுட்ட விளைகிறது என்று புரிந்து கொள்ள முடியும்.

ஊடகம், கலை, இலக்கியம் ஆகிய பரப்புக்கு அப்பால், பாரதிக்கு அரசியற் தரப்பிலும் பலரோடு ஆழமான நட்பும் உறவும் இருந்திருக்கிறது. அவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பின்னணியைக் கொண்டவர் என்று தெரிந்தாலும் அதைக் கடந்து தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட்,ரெலோ, ஈ.பி.டி.பி, சமத்துவக் கட்சி, தமிழர் சமூக ஜனநாயக் கட்சி, மலையக மக்கள் முன்னணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர் மகா சபை, புதிய ஜனநாயக மாக்ஸிஸக் கட்சி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.க, மலையக அரசியல் அரங்கம் எனச் சகல கட்சிகளோடும் நேர்மையான உறவைக் கொண்டிருந்தார். இதனால், இந்தக் கட்சிகளின் தலைவர்களெல்லோரோடும் பாரதிக்கு நெருக்கமான உறவிருந்தது.

இப்படியெல்லாம் இருந்தாலும் பாரதி எவரோடும் விவாதங்களை நடத்தியதில்லை. அதனால் யாரோடும் முரண்பட்டதுமில்லை. என்றாலும் தன்னுடைய நிலைப்பாட்டில் அவர் உறுதியாகவே நின்றார். இதற்கு இரண்டு உதாரணங்களைச் சுட்ட முடியும். ஒன்று, ஈழமுரசுவிலிருந்து விலகிச் சென்று முரசொலியில் அவர் சேர்ந்தது. அதைப் போல வீரகேசரியிலிருந்து விலகிச் சென்று தினக்குரலில் இணைந்தது. இரண்டிலும் நிர்வாக முரண்களுக்கு எதிராக பாரதி நின்றது இதைத் தெளிவாகச் சொல்லும்.

ஆனால், எப்போதும் தன்னைப் பிரகடனம் செய்வதோ, தன்னை முன்னிலைப்படுத்துவதோ பாரதியின் குணமல்ல. எப்போதும் தள்ளி நிற்பவராக, உடனடியாக அவசரப்பட்டு எதையும் சொல்லாமல், சற்று விலகி நின்று அவதானித்துக் கொண்டிருப்பராகவே பாரதியைக் காண முடியும். அவருடைய சுபாவமே அப்படியானது. குரல் கூட மிக மென்மையானது. பேசும் பாங்கும் அப்படியே. மிகப் பவ்வியமாக, தணிந்த நிலையில் தான் பேசுவார். பெரும்பாலும் மற்றவர்கள் சொல்வதைக் கூர்ந்து கவனிப்பதே பாரதியின் இயல்பாகும்.

தன்னுடைய அபிப்பிராயம் என்று அவர் எப்போதாவது அபூர்வமாகத் தான் அவருடைய வாயிலிருந்து வரும். ஆனால், எல்லோரையும் எல்லாவற்றையும் கூர்ந்து அவதானித்துத் தனக்குள் ஒரு சித்திரத்தைப் பாரதி உருவாக்கிக் கொள்வார். ஆனாலும் அதற்காக அவர்களைத் தூர ஒதுக்க மாட்டார். தனக்குப் பொருத்தமில்லாத தரப்பினர் என்றால், முரண்பட்டுக் கொள்ளாமல், தானாகவே ஒதுங்கிக் கொள்வார். இது பாரதியின் தந்தை சு. இராஜநாயகத்திடமும் இருந்த குணமாகும்.

(26ம் பக்கம் பார்க்க)

# சட்டத்தரணி வேடமணிந்து வந்த இராணுவ கொமாண்டோ அணியின் முன்னாள் சிப்பாய் எதிரிக் கூண்டில் நின்ற பாதாள உலகக் குழு மீது உறுப்பினர் மீது துப்பாக்கிச்சூடு!





கொழும்பு புதுக்கடை நீதிமன்றின் எதிரி கூண்டில் வைத்து ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியாக கருதப்படும் கனேமுல்ல சஞ்சீவ சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

புதுக்கடை நீதிமன்றில் 19 பெப் 2025 புதன்கிழமை நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது எதிரி கூண்டில் நின்றவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டில் குறித்த நபர் சம்பவ இடத்திலையே உயிரிழந்துள்ளார்.

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த நபரை பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றம் அழைத்து வரப்பட்ட நிலையில் வழக்கு விசாரணைக்காக எதிரி கூண்டில் நின்ற வேளை சட்டத்தரணி போல் வந்த நபர் ஒருவர் கைத்துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்து விட்டு சம்பவ இடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர் பாதாள உலக உறுப்பினரும் போதைப்பொருள் கடத்தல்காரருமான கனேமுல்ல சஞ்சீவ வெளிநாடுகளில் பதுங்கியிருந்த நிலையில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அந்நிலையில் கடந்த 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் போலிக் கடவுச்சீட்டை பயன்படுத்தி கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக





நாடு திரும்பிய போது கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சுமார் ஒன்றரை வருட காலத்திற்கு மேலாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இன்றைய தினம் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றம் வந்த வேளையே படுகொலை செய்யப்பட்டுள்ளார்

நீதிமன்றத்திற்குள் வைத்து கனேமுல்ல சஞ்சீவவை சுட்டு படுகொலை செய்த பிரதான சந்தேகநபர், புத்தளம் பாலாவி பகுதியில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை புத்தகத்தினுள் கைத்துப்பாக்கியை மறைத்து வைத்தே நீதிமன்றினுள் சென்று துப்பாக்கி சூட்டினை நடாத்தியுள்ளனர். மொஹமட் அஸ்மான் ஷெரிப்தீன் என்ற 34 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேன் ஒன்றில் தப்பிச் செல்லும் போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், இராணுவ கமாண்டோ படையணியின் முன்னாள் சிப்பாய் என தெரியவந்துள்ளது.

கனமுல்ல சஞ்சீவ இன்று நீதிமன்றத்துக்குள் சினிமா பாணியில் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பான பல தகவல்களை நிறைய இடங்களில் பார்த்திருப்பீர்கள்.

ஆனால் இந்த கனேமுல்ல சஞ்சீவ கொழும்பின் பாதாள உலக கோட்பாதராக தன்னை நிலைநாட்டிக் கொள்ள முயற்சித்தவர். 30க்கும் அதிகமான கொலை சம்பவங்களில் கூலி கொலைகாரராக இவர் செயற்பட்டதாக தகவல்கள் இருக்கின்றன.

திட்டமிட்ட ஒரு கும்பலோடு சேர்ந்து தனியார் வங்கியொன்றில் 7 கோடி ரூபா கொள்ளையிட்ட சம்பவத்தில் கைதானவர்.

சிறைக்கு சென்ற சஞ்சீவ அப்போதைய கொழும்பின் பாதாள கோட்பாதர்களான பிளூமெண்டல் சங்க, ஆர்மி சம்பத் ஆகியோரது அடியாளாக வெளியில் வருகின்றார்.

அதன் பின்னர் கட்டம் கட்டமாக கொழும்பை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர சஞ்சீவ முயற்சிகளை செய்தாலும் அதற்கு தடையாக தெமட்டகொட சமிந்த (இவரும் பாதாள உலக உறுப்பினர்) தடையாக இருக்கிறார்.

எனவே சமிந்தவை கொலை செய்ய சஞ்சீவ முயற்சி செய்தார். முதல் சம்பவமாக தெமட்டகொட இறைச்சிக் கடைக்கு முன்னாள் வாகனத்தில் வந்து துப்பாக்கி சூடு நடத்தினார். ஆனால் சமிந்தவின் தம்பி ருவன் சஞ்சீவவுக்கு முன்னால் வந்தார் எதிரில் இருந்து சஞ்சீவ வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

இதனால் இவர்களின் அடியாள் ஒருவர் உயிரிழந்தாலும் தெமட்டகொட சமிந்த உயிர் தப்பினார். இந்த சம்பவத்தின் பின்னர் சஞ்சீவ உட்பட்ட குழு போலி கடவுச் சீட்டுக்களை பெற்றுக் கொண்டு துபாய் சென்றனர். ஆனால் குறுகிய நாட்களுக்கு பின்னர் மீண்டும் சஞ்சீவ இலங்கை வந்தார். மீண்டும் சமிந்தவை கொலை செய்ய முயன்றார்.

பாரத லக்ஷ்மன் கொலை வழக்கில் சமிந்த ஆஜராகி மீண்டும் சிறைக்குச் சென்று கொண்டிருந்த பஸ் வண்டியை தெமட்டகொட பகுதியில் பாதை நடுவில் இடைமறித்து பஸ் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர் இந்த சஞ்சீவ உட்பட அவரது குழு.

அங்கேயும் சமிந்த உயிர் தப்பிய நிலையில் குற்றவாளிகளை தேடி போலீசார் வலை வீச ஆரம்பித்தனர். குறுகிய காலத்துக்குள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். அதில் இந்த சஞ்சீவவும் இருந்தார்.

மீண்டும் சிறைக்குச் சென்ற சஞ்சீவ கொழும்பை கைவிட்டு விட்டு கம்பஹா மாவட்ட பாதாள செயற்பாடுகளை தனக்குக் கீழ் கொண்டு வர முயற்சி செய்தார். அங்கே அவருக்கு தடையாக இருந்தவர் தான் ஒஸ்மான் என்பவர். 2018 ஏப்ரல் மாதம் ஒஸ்மான் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தினார் சஞ்சீவ. அதற்காக தனது அடியாட்களான அஜா மற்றும் சூளா என்பவரையே பாவித்தார்.

இதுவே சஞ்சீவவின் சாதாரணமான பின்னணி. இவருடைய திட்டங்களின் அடிப்படையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை கணக்கிலிட முடியாதவை. 30க்கும் அதிகம் என்று ஒரு புறம் சொல்லப்படுகிறது.

போதைப்பொருள் வியாபாரம், கப்பம் பெறுதல், கொலைகள் என்பவற்றை பகிரங்கமாக செய்த இவர் கடந்த செப்டம்பரில் கைது செய்யப்பட்டார்.

இன்னுமொரு கொலை வழக்கு தொடர்பில் பூஸா சிறைச்சாலையில் இருந்து புதுக்கடை நீதிமன்ற வளாகத்தின் இலக்கம் 05 நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு சாட்சியம் வழங்கிக் கொண்டிருந்தார்.

குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டிருந்த நிலையில் தான் சட்டத்தரணி வேடம் அணிந்த துப்பாக்கி தாரி துப்பாக்கிச்சூ டு நடத்தியுள்ளார். குற்றவாளிக் கூண்டுக்கு மிக அருகில் சென்று தான் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிதாரி அருகில் சென்றாலும் ஒருவேளை சஞ்சீவவின் சட்டத்தரணியாக இருக்கலாம் என்றே அநேகர் நம்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பாதாள உலக கும்பலைச் சேர்ந்த கணேமுல்ல சஞ்சீவ என்பவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 25 வயதுடைய பொலிஸ் அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரான பொலிஸ் அதிகாரி சுட்டுக் கொலை செய்வதற்கு சட்டத்தரணி வேடத்தில் சென்ற பிரதான சந்தேக நபருக்கு உதவி செய்த பெண்ணுடன் தொலைபேசியில் தொடர்புகளை பேணி வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# புன் சிரிப்பு மாறாத பாரதி!

(25ம் பக்கத் தொடர்ச்சி) பாரதியின் ஊடகப் பங்களிப்பை மதிப்பிடுவதானால், அவர் ஒரு தூக்கலோ துருத்தலோ அற்ற தமிழ்த் தேசியவாதியாக இருந்திருக்கிறார் எனலாம். அதேவேளை தன்னுடைய அரசியலுக்கு அப்பால் உள்ளோருக்கும் ஜனநாயக அடிப்படையில் தாராளமாக இடமளித்திருக்கிறார். இதனால் அவர் ஒற்றைப் படைத்தன்மையான உறவாளராக இல்லாமல் பல தரப்புடனான உறவாடலையும் செய்யக் கூடியவராக இருந்திருக்கிறார். ஜனநாயக விழுமியத்தைப் பேணியதோடு, ஊடகத்தின் பன்மைத்துவமான அரசியல், சமூகம், பொருளாதாரம், இலக்கியம், கலை, தத்துவம், அறிவியல் என அனைத்தையும் சம நிலையோடு நோக்கி, அவற்றைக் கையாண்டிருக்கிறார். ஊடகப் பரிமாணத்தை உருவாக்கியிருக்கிறார். தமிழ் ஊடகப் பரப்பில் பாரதியின் செயற்பாட்டு அடையாளம் வலுவானது. முன்னுதாரணமானது. ஊடகத்துறையில் பயில்வோருக்கும் பணியாற்றுவோருக்கும் அது தக்கதோர் அடிப்படையாகும்.

பின்னாளில் பாரதி யாழ்ப்பாணத்திற்கு வந்து ஈழநாடு, பொருண்மியம் என்றெல்லாம் வேலை செய்து, இறுதியில் வீரகேசரியின் பிராந்தியப் பணிமனையில் பணியாற்றியிருக்கிறார். வீரகேசரியை விட்டு நீங்கியவர் வீரகேசரியில் மீள இணைந்ததைப் போலவே, 1960களிலிருந்து 1990கள் வரையும் அவர் பிறந்து வளர்ந்த திருநெல்வேலிச் சூழலுக்கு மீண்டும் வந்திருந்தார். அவருடைய இறுதி நாட்கள் திருநெல்வேலியிலேயே கழிந்தன. மரணமும் அங்கேயே நடந்தது. அதுவும் அவர் இருந்த வீட்டிலிருந்து ஒரு 300 மீற்றர் சுட்டு வட்டத்துக்குள். ஆனால் பிறந்த வளர்ந்த வீட்டில் அல்ல. அந்த வீடு வேறு கைகளுக்கு மாறியதால் அவர் வாடகை வீட்டிலேயே வாழ நேர்ந்திருக்கிறது.

ஈழப்போராட்டத்தோடு எழுச்சியடைந்த ஒரு ஊடகவியலாளராக பாரதியைப் பார்க்கலாம். அது உருவாக்கிய நெருக்கடிகள், வீழ்ச்சிகள், துயரங்கள் பாரதியையும் பாதித்தது. பாரதியை மட்டுமல்ல, அவருடைய குடும்பத்தையும் தான்.

அவர்கள் இழந்தது அதிகம். பெற்றது மிகக் குறைவு. அதற்குள்ளும் பாரதியும் பாரதியின் குடும்பத்தினரும் இந்தச் சமூகத்துக்கு அளித்தது ஏராளம். அதுவே மேன்மைக்குரியது. அஞ்சலி.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது?

உள்ளூராட்சி தேர்தல் விரைவில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் ஏனைய கட்சிகளும் எவ்வாறு போட்டியிடுவது என்று தங்களின் அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் இது தொடர்பில் கருத்துகளை வெளியிட்டியிருக்கின்றார். முதலில் இது தொடர்பில் பொதுவெளியில் பேச வேண்டிய அவசியமில்லை. ஒரு விடயத்தில் தெளிவான நிலைப்பாடு இருந்தால் அதனை செயலில் காண்பிக்க வேண்டுமே தவிர, அதனையும் ஓர் அரசியலாக்க வேண்டியதில்லை.

உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும் அது தான் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு சரியானது என்னும் அடிப்படையில் தான் அந்தக்கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்துவெளியேறும் முடிவை எடுத்திருந்தது.

இந்தப் பின்புலத்தில் தான் அதுவரையில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிகளாக இருந்த ஏனைய கட்சிகள் தனித்துப் போட்டியிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.

இலக்க அடிப்படையில் ஐந்து கட்சிகள் தேவையென்னும் அடிப்படையில் இன்னும் சிலரையும் இணைத்துக் கொண்டு தங்களை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக தேர்தலில் முன்னிறுத்தியிருந்தன. இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்துச் செல்லும் முடிவை எடுக்காதிருந்திருந்தால் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ மற்றும் த.சித்தார்த்தன் தலைமையிலான டிபி.எல்.எவ் (புளொட்) ஆகிய கூட்டமைப்பின் பங்காளிகள் ஒருபோதும் தனித்துச் செல்லும் முடிவை எடுத்திருக்கமாட்டார்கள்.

இந்தப் பின்புலத்தில் விடயங்களை நோக்கினால், முன்னர் ஓர் உள்ளூராட்சி தேர்தலை முன்வைத்து உடைவுற்ற அல்லது சிதறிப் போன கூட்டமைப்பை இன்னோர் உள்ளூராட்சி தேர்தலை முன் வைத்து ஒட்ட வைக்க முடியுமா? முயன்றால் இது முடியாத விடயமல்ல.

ஆனால், இலங்கை தமிழ் அரசு கட்சி கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 8 ஆசனங்களைப் பெற்று பிரதான கட்சியாகத் தங்களை முன்னிறுத்திக் கொண்டது. எதிரணியாக போட்டியிட்ட ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஐந்து கட்சிகளின் கூட்டாகத் தங்களைக் காண்பித்த போதிலும் கூட, ஓர் ஆசனத்தையே பெற முடிந்தது.

இந்த நிலையில் ஒரு தேர்தல் கூட்டாக சம அந்தஸ்தோடு இணைந்து செயல்படுவது எவ்வாறு சாத்தியப்பட முடியும்? அதுவும் முயன்றால் முடியும். ஆனால், இலங்கை தமிழ் அரசு கட்சி தங்களுடைய உறுப்பினர்களுக்கு ஒதுக்க வேண்டிய ஆசனங்களை தோல்வியடைந்த ஏனைய கட்சிகளுக்கு வழங்குவதற்கு முனவருமா? இந்தக் கேள்விகளிலிருந்து தான் உள்ளூராட்சி தேர்தலை அனைவருமாக இணைந்து எதிர்கொள்வதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களை நோக்க வேண்டும்.

ஏனெனில், தமிழ்த் தேசியத்தை அவ்வப்போது உச்சரித்துக் கொண்டாலும் தேர்தல் நலன்களின் அடிப்படையில் தான் அனைததுக் கட்சிகளுமே சிந்திப்பதுண்டு. இந்த நிலையில் மக்களை கருத்தில் கொண்டு தமிழ் கட்சிகள் சிந்தித்ததாக கடந்த பதினைந்து வருடங்களில் சான்றில்லை.

ஆனால், இன்றைய சூழலில் தமிழர் அரசியலை ஒப்பீட்ட டிப்படையில் மிகவும் பலவீனமான நிலையிலாவது ஒரு ஜனநாயக வலுவாக காண்பிக்க வேண்டுமென்றால் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் ஓர் ஐக்கிய முன்னணியாகத் தேர்தல்களை எதிர்கொண்டால் மட்டுமே அது சாத்தியப்படும்.

# பயங்கரவாதத்தை முறியடிப்புக்கான விரிவான சட்டமூலத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை

தேசிய பாதுகாப்பு மற்றும் பொது மக்கள் சமாதானம் தொடர்பில் குறித்த காலத்தில் நிலவிய அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பதற்காக 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற் பாடுகள்) சட்டம் நிறைவேற்றப் பட்டது. பின்னர் 2022ஆம் 12ம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்த) சட்டம் என்ற ரீதியில் குறித்த சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு, தேசிய பாதுகாப்பு தொடர்பான விரிவான சட்டத்தை பிரகடனப்படுத்துவதற்கான இடைக்கால நடவடிக்கை பின்பற்றப்பட்டள்ளது. அதன் பின்னர் பயங்கரவாதத்தை முறியடித்தல் தொடர்பான சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மேற்குறித்த சட்ட வரைபு உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய மேற் குறித்த சட்ட வரைபில் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை இனங்கண்டு குறித்த திருத்தங்களை உள்ளடக்கி சட்ட வரைஞரால் திருத்த சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள இறுதி வரைபு தொடர்பாக மேலும் விடயங்களை ஆய்வு செய்து மேற் குறித்த சட்ட வரைபை மேலும் மேம்படுத்துவதற்காக பொருத்தமான யோசனைகளை சமர்ப்பிப்பதற்காக




ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்ன தலைமையிலான குழுவை நியமிப்பதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.


NO. #1 ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST



World Famous Indian Astrologer
PANDIT: SAI RAM

Face Reading, Palm Reading,
Horoscope & Date of Birth



SOLUTIONS & SUGGESTIONS:

OPEN 7 DAYS
9 AM to 7.30 PM

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob
Vasthu Prob
Real Estate
and all other

Call for 1 FREE QUESTION

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

100% GUARANTEE

+1 437-829-1722

2993 Islington Ave, North York, ON, M9L 2K9
(Major intersection: STEELES & ISLINGTON)